உதயன்

விலை ரூபா 20
பக்கங்கள் 28

32°c - 25°c
ஓரளவு மேக மூட்டம்

சுடர் 31 | கதிர் 109 | வள்ளுவர் ஆண்டு 2047 | பங்குனி 01, திங்கட்கிழமை 14.03.2016

பொறுப்புக்களைச் சுமந்து நிற்கும் கூட்டமைப்பு பக். 12-13

பேரணியில் பங்கேற்றால் சு.கவிலிருந்து மகிந்த அவுட்

மைத்திரியின் புதிய திட்டம் இது

கொழும்பு, மார்ச் 14

கூட்டு எதிர்க் கட்சியின் பேரணியில் பங்கேற்றால், நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்சவை சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து இடைநிறுத்த ஜனாதிபதியும், கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன முடிவு செய்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு-ஹைட்பார்க்கில் எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் ராஜபக்சவின் ஏற்பாட்டில், கூட்டு எதிர்க்கட்சியின் பேரணி நடைபெறவுள்ளது. கூட்டு எதிர்க்கட்சியின் பக். 23

நாடு முழுவதும் நேற்று பலமணி நேர மின்தடை

மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

கொழும்பு, மார்ச் 14

நாடு முழுவதும் நேற்றுப் பிற்பகல் 2.30 மணிமுதல் முன்னிரவு 9.50 மணிவரை மின்தடை ஏற்பட்டது. இதனால் மக்களின் இயல்பு வாழ்வு பாதிப்படைந்தது. எனினும் குடாநாட்டின் சில பகுதிகளுக்கான மின்விநியோகம் நேற்று நள்ளிரவு வரை வழங்கப் படவில்லை எனப் பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் 25 ஆம் திகதியும் இவ்வாறு மின்தடை ஏற்பட்ட நிலையில், நேற்று இரண்டாவது தடவையும் நாடுமுழுவதும் நீண்ட நேர மின்தடை ஏற்பட்டிருந்தது.

குறித்த மின்தடைக்கு நாசகார வேலையே காரணமெனச் சந்தேகிப்பதாகத் தெரிவித்துள்ள மின்சக்தி பிரதி அமைச்சர் அஜித் பத்ம காந்த பெரேரா, எனினும் அதற்குரிய உறுதியான ஆதாரங்கள் கிடைக்கவில்லையெனவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் பக். 23

தங்கொட்டுவ படுகொலை; சந்தேகத்தில் ஐவர் கைது

கொழும்பு, மார்ச் 14

நீர்கொழும்பு-தங்கொட்டுவ பிரதேசத்தில் எரிந்த வான் ஒன்றிலிருந்து கருகிய நிலையில் 5 சடலங்கள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில், 5 பேரைக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளையும் அவர்கள் முடுக்கி விட்டுள்ளனர். பக். 23

குடாநாட்டில் குற்றச்செயல்களை விரைந்து கட்டுப்படுத்த உத்தரவு

யாழ். வருகை தந்த அமைச்சர் சாகல ரத்னாயக்க பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்குப் பணிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்.குடாநாட்டில் குற்றச்செயல்கள் தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகள் குறித்து, உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு, நடவடிக்கை எடுப்பதன் ஊடாகப் பொதுமக்களின் இயல்பு வாழ்வைப் பொலிஸார் உறுதிப்படுத்த வேண்டுமெனச் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்க அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரிகளுக்கும் அவர் இவ்வாறு பணிப்புரைவிடுத்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் அதிகரித்து வரும் போதைப் பொருள் கடத்தலை முறியடித்தல் மற்றும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தல் தொடர்பில் ஆராய்வதற்குச் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்க மற்றும் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் ஆகியோர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தனர். இவர்களுடன் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதனும் பக். 23

முச்சந்தி முரளி

அப்ப இனி வெட்டுக் குத்துகள் குறையுமோ...

தட்டாதெருவில் சிறுவன் மீது கொலைவெறித் தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்.தட்டாதெரு மரக்காலையில் நின்றிருந்த 17 வயதுச் சிறுவன் மீது பத்துக்கும் மேற்பட்ட நபர்களைக் கொண்ட இளைஞர்குழு கொலைவெறித் தாக்குதலில் ஈடுபட்டது.

குறித்த சம்பவத்தில் கே.கேமராயன் (வயது - 17) என்ற சிறுவன் மீதே நேற்றுமாலை 4.30 மணியளவில் குறித்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதில் படுகாயமடைந்த பக். 24

தலைமன்னார் விபத்தில் வர்த்தகர் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 14

கட்டுப்பாட்டை இழந்த கூலர் வாகனம், வீதியோரம் நின்ற பனையுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் குறித்த வாகனத்தில் பயணித்த மற்றுமொருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தலைமன்னார் பிரதான வீதியில், நேற்றுக் காலை 6.45 மணியளவில் இடம் பெற்றது.

இதில் டி.ஜி.தீபால் சந்தன (வயது - 46) பக். 24

4 மாதக் குழந்தையைச் சுவரில் அடித்துக் கொலை செய்த தாய்

கிளிநொச்சியில் நேற்றுக் கொடூரம்

கிளிநொச்சி. மார்ச் 14

பிறந்து நான்கு மாதங்களேயான ஆண் குழந்தையை, அந்தக் குழந்தையின் தாயாரே சுவருடன் அடித்துக்கொலைசெய்துள்ளதாகக் கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கொலைக் பக். 23

கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

குரும்பசிட்டிப் பகுதியில் உள்ள தோட்டக்காணி ஒன்றிலிருந்து, வெடிக்கக்கூடிய நிலையில் இருந்த கைக்குண்டு ஒன்றை மீட்டுள்ளதாகப் பலாலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டு உரிமையாளர் தனது பக். 24

இலங்கைக் கடலில் மீன்பிடித்த இந்திய மீனவர் 30 பேர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 14

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்த இந்திய மீனவர்கள் 30 பேர், நேற்று இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

மன்னாரில் இந்திய மீனவர்கள் 25 பேரும், நெடுந்தீவில் 5 மீனவர்களும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கடற்படையால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

(விரிவான செய்தி 2 ஆம் பக்கத்தில்)

மகிந்த வழியில் மைத்திரியும் கடன் கேட்கின்றார் சீனாவிடம்

கொழும்பு, மார்ச் 14

மகிந்த அரசைப் போன்று தற்போதைய அரசும், சீனாவிடம் கடன் கோரியுள்ளது.

இதில் மத்தள சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கு குறித்த கடன்கள் கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச வர்த்தக மற்றும் மூலோபாய அபிவிருத்தி அமைச்சர் மலிக் சமரவிக்கிரம அண்மையில்சீனாவுக்குச்சென்றிருந்தார். இதன்போது, சீனாவின் அபிவிருத்தி வங்கி, எக்சிம் வங்கி ஆகியவற்றின் அதிகாரிகளை, மலிக் சமரவிக்கிரம சந்தித்திருந்தார்.

இந்தப் பயணம் குறித்து அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவிக்கையில்,

இந்தப் பேச்சுக்கள் பயனுள்ளதாக இருந்தன. பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக நிதியொத்துழைப்பு கோரப்பட்டது. பக். 24

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலங்கைக் கடலில் மீன் பிடித்த இந்திய மீனவர் 30 பேர் கைது

அனைவரையும் விளக்கமறியலில் வைத்தது நீதிமன்று

யாழ்ப்பாணம், மார்ச் 14

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மன்னாரில் 25 பேரும், நெடுந்தீவில் 5 பேருமாக இந்திய மீனவர்கள் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். அவர்கள் நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தனர்.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து நேற்று 5 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்று அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அவ்வாறு நெடுந்தீவில் வைத்துக் கைது செய்யப்பட்டவர்கள் இராமேஸ்வரத்தைச் சேர்ந்தவர்களாவர். அவர்கள் யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்கள் ஊர்காவற்றுறை பதில் நீதிவான் இ.சபேசனிடம்முற்படுத்தப்பட்டனர். அவர்களை விசாரித்த நீதிவான் 5 மீனவர்களையும் எதிர்வரும் 24 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அதேவேளை, மன்னாரில் நேற்றுமுன்தினம் இந்திய மீனவர்கள் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களும் அத்துமீறி இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்தமை மற்றும் மீன்பிடியில் ஈடுபட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களை மன்னார் கடற்படையினர் கைது செய்து மன்னார் பொலிஸாரிடம் நேற்றுமுன்தினம் இரவு ஒப்படைத்தனர். அவர்களும் நீதிமன்றினூடாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதை கடற்றொழில்திணைக்களத்தினரும் உறுதிப்படுத்தினர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலை நிறுத்துமாறு வடமாகாணத்திலுள்ள மீனவசங்கங்கள், மீனவசம்மேளனங்கள் கோரிக்கை விடுத்து வருகின்றன. இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடை செய்யுமாறு இலங்கை அரசிடமும் இந்திய அரசிடமும் பல தடவைகள் கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அது தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று மீனவ அமைப்புக்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

இதுமட்டுமன்றி இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடை செய்யுமாறு கோரியும் அதற்கான நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதரகம் முன்பாகவும் மீனவர்கள் சில தடவைகள் போராட்டம் முன்னெடுத்து தமது கோரிக்கையை வலியுறுத்தியுள்ளனர்.

அதற்கு முன்னர் இருநாட்டுக்குமிடையே பேச்சு இடம்பெற்றிருந்தது. அதுவும் உரிய நல்லநிலைப்பாட்டை எட்டியிருக்கவில்லை என்று மீனவ அமைப்புக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றன. இந்நிலையில் இந்திய மீனவர்களது அத்துமீறலும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இதுமட்டுமன்றி ஏற்கனவே இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ற-4,101,107)

மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 14

பண்டத்தரிப்பு சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் சர்வதேச மகளிர் தின விழா நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது என்று சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

சங்கத் தலைவர் திருமதி ஜெபமணியோசப் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலி.தென்மேற்கு உதவிப் பிரதேச செயலர் திருமதி நேசரட்ணம்செல்வகுமாரியும், கௌரவ விருந்தினர்களாக பண்டத்தரிப்பு பங்குத்தந்தை அருட்பணி மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளாரும், யாழ். மாவட்ட சி.க.கூ.ச.சமாசத் தலைவர் செ.இலகுநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ற-ரி)

மாரடைப்பால் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்த உதயன் பத்திரிகையின் பிராந்தியச் செய்தியாளரும், மூத்த ஊடகவியலாளருமான நாகராசா நவரத்தினராசாவின் இறுதிக் கிரியைகள் மல்லாகத்திலுள்ள அவரது இல்லத்தில் நேற்று முற்பகல் 9 மணிக்கு இடம் பெற்றது. இறுதி நிகழ்வில் பெருமளவிலான மக்கள், அரசியல் தலைவர்கள், விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பெருமளவிலானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியதோடு அஞ்சலி உரையும் நிகழ்த்தினர். அதன்போது நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமான ஈ.சரவணபவன் மற்றும் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் ஆகியோரும் அஞ்சலி செலுத்தி உரையாற்றினர். (ற-4,21,ரி5)

மலக் கழிவுகளால் நிறைந்துள்ள மத்திய பஸ் நிலைய மலசலகூடம்

சீரான கழிவகற்றல் இன்மையால் பயணிகள் பெரும் திண்டாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்.மத்திய பஸ் நிலையத்திலுள்ள மலசலகூடம் மலக் கழிவுகளால் நிறைந்துள்ள நிலையில், கழிவகற்றல் சரியாக நடைபெறாமையால் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று யாழ். சாலை முகாமையாளர் செ.குலபாலசெல்வம் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் யாழ்.மாநகர சபை ஆணையாளரிடம் கேட்டபோது, கழிவகற்றல் தொடர் பில் கவனம் செலுத்தப்படுவதுடன் இன்று கழிவுகள் அப்புறப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

மலசலகூடக் கழிவுகள் அகற்றல் தொடர்பாக அறிவிக்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதனால் அலுவலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் தமது கடமையை செய்வதிலும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அத்துடன் வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தரும் ஊழியர்களும், காப்பாளர்களும் தங்கிச் செல்லும் பகுதியில் இதுபோன்ற இயற்கை உபாதைக் கழிப்பு செயற்பாடுகளில் ஏற்படும் இடையூறுகளால் பெரிதும் சிரமப்படுகின்றனர் என யாழ். சாலை முகாமையாளர் சுட்டிக்காட்டினார். தொற்று நோய்கள் பரவக்கூடிய நிலைமைகளும் காணப்படுவதால் மாநகரசபை உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். இதற்கு இயலாதபட்சத்தில் மேக்கன்டைல் சேவை மூலம் நாம் கழிவுகளை அகற்றுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்வேண்டும்என்றும்அவர்தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசனுடன் தொடர்புகொண்டபோது-

அந்தப் பிரச்சினை தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டு இன்று திங்கட்கிழமை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

அதேவேளை முன்னரும் இதுபோன்ற பிரச்சினை ஏற்பட்டிருந்தது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ற-4,ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரி வீட்டை நேரிலே பார்த்து கருத்துக் கூறட்டும் முதலமைச்சர்

அமைச்சர் சுவாமிநாதன் அழைப்பு

21 லட்சம் ரூபா பெறுமதியில் உரும்பிராயில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி வீட்டை, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நேரில் வந்து பார்த்துவிட்டு, அது தொடர்பில் கருத்து தெரிவிக்குமாறு, மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் நேற்று அழைப்பு விடுத்தார்.

சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்ணாயக்கவுடன், நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், உரும்பிராயில் 21 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மாதிரி வீட்டைப் பார்வையிட்ட பின்பு, ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார் .

இதன்போது, அவர் மேலும் கூறுகையில் , 65ஆயிரம் வீட்டுத்திட்டத்தில் நிர்மாணிக்கப்படும் வீடுகளை மக்கள் பெற்றுக்கொள்ளக் கூடாதென்ற ரீதியில் வடக்கு முதலமைச்சர் நேற்று (நேற்று முன்தினம்) இடம் பெற்ற கூட்டத்தில் தெரிவித்திருந்தார் .

அதற்கு முதலமைச்சரின் முக்கிய கருத்தாக இந்த வீட்டில் எரிவாயு பாவனை இருப்பதால் அது மக்களுக்கு செலவினத்தை அதிகரிக்கும் எனத் தெரிவித்திருந்தார்.

முதலமைச்சருக்கு நான் ஒன்றைக் கூறிக் கொள்கின்றேன். ஒரு கிலோ விறகு 15 ரூபா வீதம் தற்போது விற்பனை செய்யப் படுகின்றது. இதன் பிரகாரம் நாள் ஒன்றுக்கு விறகுப்பாவனைக்கு 75 ரூபா ஒரு குடும்பத்துக்கு தேவைப்படும். எனவே ஒரு மாதத்துக்கு 2250 ரூபா வரை விறகுக் காக தேவைப்படும். ஆனால் எரிவாயு ஒன்றின் விலை 1500 ரூபாவே. எனவே விறகை விட எரிவாயு செலவினத்தைக் குறைக்கின்றது. அது மட்டுமல்ல, நேற்று முன்தினம் முதலமைச்சர் கருத்து தெரிவித்த பின்னர், அவரிடம் கேட்டேன் இந்த வீட்டை நீங்கள் பார்த்தீர்களா என்று, அதற்கு அவர் இல்லை என்று பதிலளித்திருந்தார். முதலமைச்சர் முதலில் இந்த வீட்டை வந்து பார்த்துவிட்டு கருத்துத் தெரிவிக்குமாறு நான் கேட்கின்றேன். இதுபோன்ற கருத்துக்கள் மூலம் மக்களின் மனோபாவத்தை குலைக்க நினைப்பதாகவே நான் கருதுகின்றேன். நாங்கள் எமது சமுதாயத்திற்காகத் தான் உழைக்கின்றோம் - என்றார். (த-வ-101)

திருப்பாடுகளின் காட்சி

திருமறைக் கலாமன்றத்தின் வேள்வித் திருமகன் திருப்பாடுகளின் காட்சி என்னும் தவக்கால ஆற்றுகை நிகழ்வு தொடர்ந்து நான்கு தினங்கள் நடைபெறவுள்ளது.

திருமறைக் கலாமன்ற அரங்கில், எதிர்வரும் 17,19,20 ஆகிய வியாழன், சனி, ஞாயிறு தினங்களில் மாலை 6.45 மணிக்கும், 18 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மட்டும் 7.30 மணிக்கும் நடைபொறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ற-ரி5)

வெள்ளிவிழா மலர் வெளியீடு

யாழ்.பல்கலைக்கழக விவசாயபீட வெள்ளிவிழாச் சிறப்பு மலர் வெளியீடு, எதிர்வரும் சனிக் கிழமை கிளிநொச்சியில் இடம் பெறவுள்ளது.

விவசாயபீட வெள்ளி விழா ஆண்டை முன்னிட்டு, விவசாயபீட முன்கற்றோர் அவையும், விவசாயபீட மாணவர் ஒன்றியமும் இணைந்து எதிர்வரும் சனிக்கிழமை 19 ஆம் திகதி காலை9மணிக்குவெள்ளிவிழாக் கொண்டாட்டத்தையும், வருடாந்த ஒன்றுகூடலையும் கிளிநொச்சி, அறிவியல்நகரிலுள்ள விவசாயபீட மண்டபத்தில் நடாத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போதே வெள்ளிவிழா மலர் வெளியீடும் நடைபெறவுள்ளது. (வ)

மொறட்டுவப் பல்கலைக் கழக நிபுணர்களிடம் பொருத்து வீடமைப்பு குறித்து ஆலோசனை

அமைச்சர் சாகல ரத்னாயக்கா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

65ஆயிரம் வீடுகளை கல்லினால் பழைய அமைப்பில் கட்டுவதானால், 15 முதல் 20 ஆண்டுகள் கட்டுமானப் பணிகள் நீடிக்கலாம். ஆனால் செல்வபுரத்தில் அமைத்துள்ள வீட்டைப் போன்று பொருத்தும் (பிற்றிங்) வீடுகளை நிர்மாணித்தால் 4 முதல் 5 வருடத்தில் நிர்மாணித்துவிடலாம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்கா.

இந்த வீட்டுத் திட்டத்திலும் வேறுபாடுகள், கேள்விகள் உள்ளதை அவதானிக்க முடிகின்றன. அவை தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அதற்கென மொறட்டுவ பல்கலைக் கழகத்தின் ஆலோசனையைப் பெறுவதற்குதீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த அமைச்சர் சாகல ரத்னாயக்க, உரும்பிராயில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி பொருத்தும் (பிற்றிங்) வீட்டைப் பார்வையிட்ட பின்னர், ஊடகங்களுக்குகருத்துத்தெரிவித்தபோதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது, அவர் கருத்து வெளியிடுகையில்:-

போர் நிறைவுக்குவந்து ஆறு



வருடங்கள் நிறைவடைந்த போதிலும், பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகள் பெருமளவில் தீர்த்துவைக்கப்படாத நிலை காணப்படுகின்றன. அரசு என்ற வகையில்வடக்குமற்றும்கிழக்குப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான சூழலை உருவாக்கவே நாம் எதிர்பார்க்கின்றோம்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் காணி விடுவிப்பு தற்போது முக்கிய பிரச்சினையாக உள்ளது. யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினரிடம் உள்ள நிலங்களில் மூன்றில் ஒரு பகுதி தற்போதுவரை விடுவிக்கப் பட்டுள்ளது.

இன்னும் இரண்டு பகுதிகள் விடுவிக்கவேண்டியுள்ளன. அதில் மூன்றில் ஒரு பகுதி ஆரம்பகாலத்திலேயே உயர் பாதுகாப்பு வலயமாக இருந்துள்ளது. அவ்வாறு பார்த்தால் இன்னும் சொற்ப அளவான நிலங்களே விடுவிக்க வேண்டியுள்ளன. அவற்றையும் விடுவிக்க நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

ஒரு லட்சத்து முப்பத்து ஏழாயிரம் வீடுகளிற்கான தேவைகள் காணப்படுகின்றன. பழையமுறையில் இவற்றை அமைப்ப தென்றால் 10 முதல் 15 வருடங்கள் தேவைப்படும். ஆனால் 65ஆயிரம் வீட்டுத்திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற வீடுகளைப் போன்று நிர்மாணித்தால் 4 முதல் 5 வருடத்தில் நிர்மாணித்துவிடலாம்.

இதிலும் வேறுபாடுகள் கேள்விகள் உள்ளதை அவதானிக்க முடிகின்றன. அவை தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டியுள்ளன. அதற்கென மொறட்டுவ பல்கலைக் கழகத்தின் ஆலோசனையைப் பெறுவதற்குத் தீர்மானித்துள்ளோம் - என்றார். (வ-105)

பருத்தித்துறை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் பொதுக்கூட்டம் இன்று

வடமராட்சி. மார்ச் 14

பருத்தித்துறை பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 6ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எஸ். கதிரமலை தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக பிரதேச செயலர் இ.த.ஜெயசீலனும், சிறப்பு விருந்தினர்களாக பிரதேச செயலகக் கணக்காளர் செ.கிருபாகரன், நிர்வாக உத்தியோகத்தர் ச.சீவரத்தினம், நிதி உதவியாளர் வே.சிவகுமாரன் மற்றும் பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய யாழ். மாவட்டத்தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

இந்த நிதியத்தில் தம்மைப் புதிதாக இணைய விரும்புபவர்கள், இன்றைய தினம் தேசிய அடையாள அட்டை, ஓய்வூதிய அடையாள அட்டை என்பவற்றுடன் சமுகமளிக்குமாறு கேட்கப் பட்டுள்ளனர்.

(வ-173)

பூட்டப்பட்டுள்ள விடுதிகளை திறக்க நடவடிக்கை எடுக்குக

மாங்குளம் பிரதேச மக்கள் தெரிவிப்பு

கொழும்பு. மார்ச் 14

மாங்குளத்தில் இரண்டு ஆண்டுகளாக உபயோகப்படுத்தாது இருக்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான விடுதிகள் தொடர்பில் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஏ-9 வீதிப் புனரமைப்பின்போது இதன் பணிகளுக்காக வந்திருந்த சீன நாட்டு அதிகாரிகள் தங்கும் நோக்கில் மாங்குளம் பகுதியில் மின்சாரம் , நீர்ப்பாசனம், குளிரூட்டி என சகல வசதிகளுடன் கூடிய 12 விடுதிகள் அமைக்கப்பட்டன.

குறித்த பணிகள் இடம்பெறும் வேளையில் அவற்றில் சீன அதிகாரிகள் தங்கியிருந்தனர். தற்போது குறித்த பணிகள் நிறைவு பெற்று அங்கு தங்கியிருந்த அதிகாரிகளும் வெளியேறி இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையில் சகல விடுதிகளும் இன்றுவரை பூட்டிய நிலையிலேயே உள்ளன.

குறித்த மாங்குளம் பகுதியின் பல திணைக்களங்கள் , மாகாண சபை செயற்பாடுகள் , பாடசாலை ஆசிரியர் விடுதி என பல தரப்பட்ட பணிகளுக்கு இட வசதி இன்றி அல்லற்படும் நிலையில் மத்திய அரசின் கீழ் உள்ள திணைக்களத்துக்குச் சொந்தமான பல கட்டடம் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பூட்டிவைக்கப்பட்ட நிலையில் உள்ளது. அவை தொடர்பில் வட மாகாணசபை மத்திய அரசுடன் பேசி ஒப்பந்த அடிப்படையில் அந்தக் கட்டடங்களை உபயோகத்துக்கு எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. (ற-101)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கரப்பந்து விளையாடியவேளை இளம் குடும்பஸ்தர் மயங்கிச் சாவு

திருநெல்வேலியில் பரிதாபம்

கரப்பந்தாட்டம் விளையாடிக் கொண்டிருந்த ஒரு பிள்ளையின் தந்தை, நெஞ்சுக்குத்துக் காரணமாக மயங்கிச் சரிந்த நிலையில், உயிரிழந்தார் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் திருநெல்வேலி பாற்பண்ணைப் பகுதியில்உள்ள விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம் பெற்றது.

போட்டியில் ஈடுபட்ட விளையாட்டு வீரர் மயங்கி வீழ்ந்து பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் முருகன் வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த பாலசிங்கம் பிரதாஸ் (வயது - 30) என்பவரே உயிரிழந்தார்.

தனது நண்பர்களுடன் கரப்பந்தாட்டம் விளையாடிக் கொண்டிருந்தபோதே, அவர் திடீரென மயங்கி வீழ்ந்துள்ளார்.

உடனடியாக அருகில் உள்ள தனியார் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது, அவர் உயிரிழந்து விட்டதாக மருத்துவர்களால் கூறப்பட்டுள்ளது.

இதன்பின்னர் சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டது. அங்கு பொலிஸ் மற்றும் திடீர் இறப்பு விசாரணைகளின் பின்னர், சடலம்உறவினர்களிடம்ஒப்படைக்கப்பட்டது. நீதிமன்ற பணிப்புக்கமைய திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணையை மேற்கொண்டிருந்தார். (த-வ-4,101,107)

வெள்ளைக்கொடி விவகாரத்தில் பொன்சேகாவே சிக்கிக் கொள்வார்

ஆருடம் கூறுகின்றார் கெஹலிய ரம்புக்வெல

கொழும்பு, மார்ச் 14
வெள்ளைக்கொடி விவகாரத்தில் உண்மையான விசாரணைகளை முன்னெடுத்தால் முதல் குற்றவாளியாக சரத் பொன்சேகாவே சிக்குவார் என்று தெரிவித்துள்ளார் ஊடகத்துறை முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கெஹலிய ரம்புக்வெல.
நாடாளுமன்றத்தில் சரத் பொன்சேகா முன்வைத்த குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

விலைபோகக் கூடியவர்

சரத் பொன்சேகா ஒரு நல்ல அரசியல்வாதியோ அல்லது நல்ல இராணுவத் தளபதியோ அல்ல. அவர் எந்த நிலையிலும் விலை போகக் கூடியவர். அவர் பல மான நபராகவோ, மக்களின் ஆதரவை பெற்றிருந்த நபராகவோ இருந்திருந்தால் கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றிருக்க வேண்டும். அந்தத் தேர்தலில் அவர் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்.
போர் நடந்த காலகட்டத்தில் அவர் இராணுவத் தளபதியாக இருந்துள்ளார். ஆனால் போரை முன்னெடுத்துச் சென்றவர் என்று கூறுவதை முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாது. அவர் மட்டும் தலைமை தாங்கி போரை முடிக்கவில்லை. எமது அரசு வழி நடத்தியது. கோத்தபாய ராஜபக்ச வழிநடத்தினார். மாறாக சரத் பொன்சேகாவை என்ற தனி நபரை போரின் நாயகனாகப் பார்க்கின்றதை ஒருபோதும் ஏற்க முடியாது.

உண்மைகளை ஏன் மறைத்தார் ?

சரத் பொன்சேகா நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக் கள் அனைத்தும் பொய். மகிந்த ராஜபக்ச மீதும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மீதும் வைராக்கியத்துடனும் பழிவாங்கும் நோக்கத்துடனும் மாத்திரமே உள்ளார் என்பதை அவரது உரை காட்டுகிறது. விடுதலைப் புலிகளைப் பலப்படுத்த ராஜபக்ச குடும்பம் பணம் கொடுத்ததாகக் கூறுவது முழுமையான பொய்.
பசில் ராஜபக்சவோ, கோத்தபாய ராஜபக்சவோ புலிகளுடன் நெருக்கத்தை பேணியிருந்தால் அப்போதே அவர் இதை வெளிப்படுத்தியிருக்க வேண்டும். நாட்டின் மீதும் இராணுவத்தின் மீதும் பற்று கொண்டவர் ஏன் அப்போது இந்த உண்மைகளை மறைக்க வேண்டும். அப்படி யாயின் அவரும் புலிகளுக்கு உடந்தையாக செயற்பட்டிருக்க வேண்டும்.

சிக்குவார் பொன்சேகா

வெள்ளைக்கொடி விவகாரத்தில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று கூறுகிறார். இந்த விவகாரத்தில் உண்மையான விசாரணைகளை முன்னெடுத்தால் இந்தக் குற்றச்சாட்டில் முதல் குற்றவாளியாக சரத் பொன்சேகாவே சிக்குவார்.
அவரின் தலைமையில் இடம் பெற்ற மிகப்பெரிய குற்றம் இது என்பதை மறந்து விட்டோ அல்லது இந்த விவகாரத்தில் அவர் மீது இருக்கும் குற்றங்களை மறைத்து விட்டோ செயற்படப் பார்க்கின்றனர். மகிந்த, கோத்தபாய ஆகியோரை பழிவாங்கும் எண்ணத்தில் அவர்களை போர்க் குற்றவாளிகள் என்று தண்டிக்கவே முயற்சிக்கிறார்.
மிகவும் மோசமான பயங்கரவாதிகளுடன் போரிடும்போதும், பல லட்சம் தமிழ் மக்களைக் காப்பாற்றும் மனிதாபிமான போராட்டத்தின் போதும் ஒரு சில தவறுகள் நடைபெறும். அதை தவிர்க்க முடியாது.
இந்தக் கருத்தை பல்வேறு நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். டெஸ்மன் டி சில்வா தனது அறிக்கையிலும் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வாறான சிறுசிறு காரணிகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு மனித உரிமை மீறல்கள் நடந்தேறியது எனக் கூறுவதை நாம் ஏற்றுக் கொள்ளமாட்டோம்.

பிரபாகரன் கொல்லப்பட்டது உண்மை

போர் முடிவுக்கு வந்த பின்னரும் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உயிருடன் இருந்தார் என சரத் பொன்சேகா தெரிவித்ததும் பொய். பிரபாகரன் கொல்லப்பட்டது உறுதியான பின்னரும், கொல்லப்பட்டது அவர் தான் என பல தடவைகள் உறுதிப்படுத்திய பின்னருமே நாம் போர் வெற்றியை அறிவித்தோம்.
பிரபாகரன் கொல்லப்பட்ட போது சரத் பொன்சேகா அங்கு இருக்கவில்லை. நாடாளுமன்றத்தில் மகிந்த ராஜபக்ச போர் வெற்றியை அறிவித்த பின்னரே சரத் பொன்சேகா அறிந்து கொண்டார். மகிந்த ராஜபக்சவையும் அவரது குடும்ப உறுப்பினர்களையும் பழிவாங்கும் ஒரே நோக்கத்தில் சரத் பொன்சேகா செயற்படுகிறார். அடிமட்ட நிலைக்கு அவர் இறங்கியுள்ளார்- என்றார். (ற-ஜ-5)

உபயோகமில்லாத திட்டங்களுக்கு பணத்தை வீணடித்த மகிந்த அரசு

நளின் பண்டார எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 14
மகிந்த ராஜபக்ச அரசின் ஆட்சியில் வெளிநாடுகளில் இருந்து பெற்றுக்கொண்ட கடனில் 90 சதவீதமான பணம் உபயோகம் இல்லாத திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.
கொழும்பில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
ராஜபக்ச அரசு பெற்றுக்கொண்ட வெளிநாட்டு கடன் நிதியை பயன்படுத்தி என்ன செய்தது என்பது எனக்குத் தெரியும். பாணம பிரதேசத்தில் மூன்று இளவரசர்களுக்காக ஆயிரத்து 610 லட்சம் ரூபா செலவில் மூன்று ஆடம்பர பங்களாக்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
அவற்றுக்கு தலா மூன்று நீச்சல் தடாகங்கள், மதுபானம் அருந்தும் இடம், ஆடம்பரமான தலா இரண்டு அறைகள் அவற்றில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. விமானப் படைக்காக பெற்றுக்கொண்ட பணத்தைப் பயன்படுத்தி இந்த பங்களாக்கள் கட்டப்பட்டுள்ளன.
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கத் தயாராகி வருகிறார்.- என்றார். (ற-ஜ-5)

இராணுவத்தைப் பாதுகாப்பதற்கே கூட்டு அரசு உருவாக்கப்பட்டுள்ளது

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 14
சர்வதேச நீதியில் படையினருக்கு தண்டனை பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது என்று கூறப்படுகிறது. இராணுவத்தினரை பாதுகாக்கவே கூட்டு அரசை ஏற்படுத்தியுள்ளோம். இதனை தெரியாதவர்கள் தான் எம்மை குறை கூறுகின்றனர். - இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.
இரத்தினபுரியில் உள்ள கெமுனுவோச் படைப் பிரிவின் முகாமில், கடந்த வெள்ளிக்கிழமை நடந்த இராணுவத்தினரின் குடும்பங்களுக்கான 'விருசர' சிறப்புரிமை அட்டை வழங்கும் நிகழ்வில், கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இராணுவத்தினரை சிறையில் அடைத்து விட்டு புலிகளை விடுவிப்பதாக கூட்டு எதிர்க்கட்சியினர் கூறுகின்றனர். நாம் அவ்வாறு செய்யவில்லை. அதற்கான தேவையுமில்லை. கடந்த ஆட்சிக் காலத்தில் இராணுவத்தினர் கூலிப்படைகளாகவும் அரசியல்வாதிகளின் தேர்தல் பரப்புரைக்கான சேவையாளர்களாகவும் வீட்டு வேலைக்காரர்களாகவும் கடமை புரிந்தனர்.
அதனை இன்றைய அரசு முடிவுக்கு கொண்டு வந்து முப்படைகளையும் மரியாதையுடன் நடத்துவதுடன் அவர்களின் நலனில் கூடுதல் அக்கறை கொண்டுள்ளது. சட்டம் அனைவருக்கும் சமமாகும். தவறு செய்தவர்கள் தண்டனை பெறுவார் கள். அதன்படி தவறு செய்த இராணுவத்தினர் நீதிமன்ற சட்டத்துக்குட்பட்டுள்ளனர். நீதிமன்ற, பொலிஸ் நடவடிக்கைகளில் நாம் தலையிடுவதில்லை.
சர்வதேச நீதியில் படையினருக்கு தண்டனை பெற்றுக்கொடுக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது. இராணுவத்தினரைப் பாதுகாக்கவே கூட்டு அரசை ஏற்படுத்தியுள்ளோம். இதனை தெரியாதவர்கள் தான் எம்மை குறை கூறுகின்றனர். வெளிநாட்டு நீதிபதிகள் எமது சட்டத்தில் தலையிட முடியாது. அவர்கள் மேற்பார்வையாளர்களாகக் கடமை புரிய அனுமதிக்கலாம். அது கூட இதுவரை இறுதி தீர்மானத்துக்கு உட்படவில்லை.
இராணுவத்தினரின் எண்ணிக்கையை குறைப்பதற்கு நாம் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. தேசிய பாதுகாப்புக்கும் எவ்விதமான இடையூறும் ஏற்படாது- என்றார். (ற-ஜ-5)

8 மணி நேரம் நிற்க வைத்து கேள்வி கேட்டு துளைத்தனர்

ஆதங்கப்படுகிறார் கோத்தா

கொழும்பு, மார்ச் 14
ரக்ன லங்கா பாதுகாப்பு நிறுவனம் மற்றும் அவன்கார்ட் நிறுவன ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவிடம் தொடர்ச்சியாக 8 மணி நேரங்கள் நிற்க வைத்து விசாரணை நடத்தப்பட்டுள்ளது.
கடந்த வெள்ளிக்கிழமை முன்னைய அரசின் ஊழல்கள், மோசடிகள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்பாக, குற்றச்சாட்டுகள் தொடர்பாக சாட்சியமளிக்க கோத்தபாய ராஜபக்ச முன்னிலையானார். ஏற்கனவே எட்டுத் தடவைகள் விசாரிக்கப்பட்டிருந்த அவர் இம்முறை கடுமையான விசாரணைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டது.
முற்பகல் 10 மணியளவில் தொடங்கிய வாக்குமூலம் பெறும் நடவடிக்கை சுமார் எட்டு மணி நேரம் நீடித்தது. எட்டு மணி நேரமும் நின்று கொண்டே கோத்தபாய ராஜபக்ச சாட்சியம் அளித்தார்.
விசாரணையின் பின்னர் கருத்து வெளியிட்ட அவர்,
இன்று என்னிடம் வாக்குமூலம் பெறவேண்டும் என்று வரவழைத்து எட்டு மணிநேரங்கள் வாக்குமூலம் பெற்றனர். நின்று கொண்டே மிக நீண்ட நேரம் வாக்குமூலம் வழங்கினேன். பின்னர் வாக்குமூலம் பதிவு செய்ய நியமிக்கப்பட்டிருந்த அதிகாரி ஒருவர் எனக்கு ஆசனம் ஒன்றை வழங்கினார். எம்மை பழிவாங்கவும், எமது பயணத்தையும் மக்கள் எம்மீது வைத்துள்ள ஆதரவையும் முற்றாக அழித்து எம்மை முழுமையாக ஓரங்கட்டும் வகையில் அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது- என்றார். (ற-ஜ-5)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- வெளிநாடுகளுக்கு பொதிகளை மிக விரைவாக அனுப்பிக்கொள்வதற்கும்
- வெளிநாடுகளில் இருந்து பொதிகளை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கும்
- காய்கறிகள், பழவகைகள், கடல் உணவுப்பொருட்கள், மருந்து, எண்ணை வகைகள், பால்மா உட்பட அனைத்துப் பாவனைப் பொருட்களையும் அனுப்பிக் கொள்ளலாம்.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள் குலோபல் எக்ஸ்பிரஸ்

1, பிறவுண் வீதி, நாவலர் வீதி, சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு பிரதியமைச்சர்கள் மிக விரைவில் நியமனம்

கொழும்பு, மார்ச் 14
மிகவிரைவில் நான்கு பிரதியமைச்சர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த இருவருக்கும் மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த இருவருக்கும் இந்தப் பிரதியமைச்சர் பதவிகள் கிடைக்கவுள்ளன.
பிரதியமைச்சர் பதவிகளைப் பெற்றுக்கொள்ளவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் குருநாகலை மற்றும் களுத்துறை மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் என்று தெரியவந்துள்ளது.
பிரதியமைச்சர் பதவிகளைப் பெறவுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் பதுளை மற்றும் காலி மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகவும் தெரிய வந்துள்ளது. (ற-ஐ-22)

இந்திய மீனவர்களின் அத்துமீறல் புதுடில்லிப் பேச்சு பிற்போடப்பட்டது

கொழும்பு, மார்ச் 14
இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாக, கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீரவுடன் இந்த மாதம் நடத்தவிருந்த பேச்சை இந்திய அரசு பிற்போட்டுள்ளது.
கடந்த மாதம் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ், இலங்கைக்கு மேற்கொண்டிருந்த பயணத்தின் போது, மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாகப் பேச்சு நடத்த, புதுடில்லி வருமாறு அமைச்சர் மகிந்த அமரவீரவுக்கு, அழைப்பு விடுத்திருந்தார்.
இந்த மாதம், அமைச்சர் மகிந்த அமரவீர புதுடில்லி சென்று பேச்சு நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், இந்திய அரசு இந்தப் பேச்சை எதிர்வரும் மே மாதம் வரை பிற்போட்டுள்ளது.
இந்திய நாடாளுமன்றத்தில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ், மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பான உயர்மட்டப் பேச்சுக்கள் மே மாதம் புதுடில்லியில் நடக்கவுள்ளது என்று தெரிவித்துள்ளார்.
ஆனாலும், இந்தப் பேச்சு பிற்போடப்பட்டது குறித்து, இலங்கை அரசுக்கு அதிகாரபூர்வமாக எந்தத் தகவலும் தெரியப்படுத்தப்படவில்லை.
தமிழ்நாட்டில், மே மாதம் நடக்கவுள்ள சட்டமன்றத் தேர்தலில், மீனவர்கள் விவகாரமும் முக்கியமான பரப்புரை விடயமாக உள்ளது. இந்த நிலையிலேயே, இது தொடர்பான பேச்சை இந்திய அரசு பிற்போட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ற-ஐ-5)

20 மீன்பிடித் துறைமுகங்கள் டிஜிற்றல் மயப்படுத்தப்படும்

அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 14
இலங்கையின் பிரதானமான 20 மீன்பிடித் துறைமுகங்களை டிஜிற்றல் மயப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.
குறிப்பாக துறைமுகங்களில் பணியாற்றும் ஆண், பெண் ஊழியர்கள், அன்றாடம் கடலுக்குச் செல்லும் மீனவர்கள் போன்று சட்டவிரோதமாக ஏனைய நாடுகளின் கடல் எல்லைக்குள் பிரவேசிக்கிறார்களா? என்பதைத் தெரிந்து கொள்வதற்கு இந்தச் செயற்றிட்டம் மேற்கொள்ளப்படுகின்றது என்று அவர் தெரிவித்துள்ளார்.
அதை விட மீனவர்களுக்கு கடற்பிரதேசத்தில், தேவைப்படும் பாதுகாப்பைப் பெற்றுக்கொடுத்தல் மீன்பிடிச் செயற்பாடுகளை, செயற்றிறன் மிக்கதாக மாற்றுதல், படகுகளின் எரிபொருள் அளவுப் பிரமாணத்தை குறுஞ்செய்திகள் ஊடாகத் தெரிந்து கொள்ளல் போன்ற விடயங்கள் இதன் மூலம் முக்கியத்துவம் பெறக்கூடும் என்றும் அமைச்சர் அமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.
இலங்கைத் துறைமுக அதிகாரம் கொண்ட கூட்டுத்தாபனத்தின் கீழ் இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.
அதன் முதற்கட்ட நடவடிக்கை அண்மையில் மாத்தறை மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் கீழ், மிரிஸ்ஸ, சுதுவெல்ல, திக்ஓவிற்ற உள்ளிட்ட 5 மீன்பிடித் துறைமுகங்கள் டிஜிற்றல் தொழில் நுட்பத் துறைமுகங்களாக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.
மேலும், ஐரோப்பிய மீன் உற்பத்திகள் தடையை நீக்கி விடுவது சம்பந்தப்பட்ட அனைத்துப் பரிந்துரைகளும் அரசினால் நிறைவு செய்யப்பட்டிருப்பதால் மிகக் குறுகிய காலத்தில் ஐரோப்பிய மீன் உற்பத்தித் தடை விதிப்பு நீக்கப்படக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-22)

அரசுக்கு எதிரான கருத்துக்கள் குறித்து மிகுந்த அவதானம் கொண்டுள்ளேன்

ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

அரசுக்கு எதிரான கருத்துக்கள் தொடர்பில் நான் மிகுந்த அவதானத்துடன் இருக்கின்றேன். சில ஊடகங்களும், சில எதிர்த்தரப்பு அரசியல்வாதிகளும் குறுகிய சிந்தனையுடன் தவறான பரப்புரைகளை மேற்கொண்டு வருவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
இளம் தொழில் முயற்சியாளர் சங்கத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவு விழா கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனாதிபதி மைத்திரிபால மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது- தேசிய தொழில் முயற்சியாளர்களைப் பலவீனப்படுத்தும் எந்த வொரு கொள்கையையும் அரசு ஒருபோதும் நடைமுறைப்படுத்தாது.
ஆயிரம் கருத்துக்கள் உருவாகும் இடத்தில் மிகவும் சரியான ஒரு கருத்தைத் தெரிவு செய்து செயற்படுவது அபிவிருத்தியின் ஒரு கோட்பாடாகும். எனவே சகல தேசிய தொழில் முயற்சியாளர்களும் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளில் அரசுடன் கலந்துரையாடிச் செயற்படுவது அவசியமாகும்.
தேசிய தொழில் முயற்சியாளர்கள் எப்போதும் சரியானவற்றையும் தேவையானவற்றையும் தெரிவு செய்து செயற்பட வேண்டும். இதற்குத் தேசிய வர்த்தகர்களின் குரலைத் தட்டியெழுப்ப வேண்டும். தாய்நாட்டின் எதிர்கால முன்னேற்றத்துக்காகத் தங்களது அறிவு மற்றும் அனுபவங்களை வழங்குவதற்கு முன்வர வேண்டும்.
அரசு தொடர்பாக நிலவும் நல்ல கருத்துக்களைப் போன்றே எதிரான கருத்துக்களும் நிலவுகின்றன. இந்த எதிரான கருத்துக்கள் தொடர்பில் நான் மிகுந்த அவதானத்துடன் இருக்கின்றேன். சில ஊடகங்களும் எதிர்த்தரப்பு அரசியல் வாதிகளும் சில குறுகிய சிந்தனையை உடையவர்களும் பிழையான பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றனர் - என்றார். (ற-ஐ-5)

டுபாய் செல்லவுள்ள நிதிக் குற்ற விசாரணைப் பிரிவு

கொழும்பு, மார்ச் 14
இராணுவத்தால் கைப்பற்றப்பட்டு பின்னர் மாயமான தங்கத்தைப் பயன்படுத்தி டுபாயில் மேற்கொள்ளப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் முதலீடுகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக நிதிக் குற்ற விசாரணைப் பிரிவு டுபாய்க்குச் செல்லவுள்ளது.
100 கிலோ வரையிலான தங்கத்தைப் பயன்படுத்தி டுபாயில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நிதிக் குற்ற விசாரணைப்பிரிவுக்குத் தெரிய வந்துள்ளது.
இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் வர்த்தகங்கள் சம்பந்தப்பட்ட விலாவாரியான விவரங்களையும், தகவல்களையும் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரிகள் டுபாய்க்குப் பயணக்கவுள்ளனர். (ற-ஐ-22)

கரு ஜயசூரியவுக்கு இந்தியாவில் இரு விருதுகள்

கொழும்பு, மார்ச் 14
இந்தியாவில் கல்கத்தா நகரில் இடம் பெறவுள்ள உலக சமாதான மாநாட்டின் இரு கௌரவ விருதுகளுக்கு சபாநாயகர் கரு ஜயசூரியவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
உலக சாந்தி உலக சமாதான விருது மற்றும் கலாநிதி அம்பேமூக்கார் சீரிய சேவையாளர் சிறப்பு சமூக சேவைகள் விருது இதன்போது வழங்கப்படவுள்ளன.
உலகம் முழுவதிலும் குற்றச் செயல்களைத் தவிர்த்தல், இனரீதியிலான சகவாழ்வைக் கட்டியெழுப்புதல், சமுதாய அபிவிருத்திகள் மற்றும் மனிதாபிமானச் செயற்பாடுகள், சமாதானம் மற்றும் ஜனநாயகவாத மேம்பாடு, உள்ளக மதரீதியிலான ஒத்துழைப்பு, தொண்டர் சமூக சேவைச் செயற்பாடுகள் ஆகிய துறைகளில் சேவையாற்றியுள்ள புகழ்பூத்த பிரமுகர்களுக்காக உலக சமாதான மாநாட்டில் வைத்து இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.
நாடாளுமன்ற மறுசீரமைப்புக்கள் மற்றும் பொதுசன ஊடகங்கள் அமைச்சர் கயந்த கருணாதிலகவும் இந்த விருது வழங்கும் விழாவில் விசேட விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ற-ஐ-22)

வேலையாள்கள் தேவை
- மேசன் வேலை (நன்கு தெரிந்தவர்கள்)
- Site Supervisor கட்டடமேற்பார்வையாளர்) (69927) (13.18)
- தச்சுவேலை (நன்கு தெரிந்தவர்கள்)

தொ.பே. 077 724 5399

வேலையாள்கள் தேவை
கொழும்பில் இயங்கும் சலூன் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.
077 180 5474

பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நானடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள் எத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரையும் நான் மன்னிக்க அருள் புரிபவரே. என் வாழ்வில் எச்சந் தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்துக்கும் நன்றி கூறுகிறேன். என்தேவைகள் எவ்வளவு முக்கியமாயிருப்பினும் என் றென்றும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப் பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப் படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவிலா மகிமையில் பங்குபெற வேண்டு கிறேன்.

- ஆமென்

மேலைப் புலோலி சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை அவர்களின் குருபூசைத் தினப் போட்டிகள் -2016

* காலம் : 09.04.2016 சனிக்கிழமை, 10.04.2016 ஞாயிற்றுக்கிழமை
* இடம் : சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம் கதிரைவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டி, பருத்தித்துறை.

*போட்டிகள்:

01. பாடசாலை மாணவர்களுக்கான பேச்சு, மனனம், பண்ணிசை, பொது அறிவுப் போட்டிகள், இப் போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவங்களை பாடசாலை மூலமாகவோ அல்லது எமது சனசமூக நிலையத்திலோ பெற்றுக்கொள்ளலாம்.
பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவங்களை 26.03.2016 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகத் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ செயலாளர், சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம், கதிரைவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டி, பருத்தித்துறை என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

02. திறந்த கட்டுரைப் போட்டி
உதயன் பத்திரிகை நிறுவனத்தின் ஆதரவுடன் வட மாகாண ரீதியாக நடத்தப்படும். பாடசாலை மாணவர்கள் உட்பட விரும்பிய அனைத்து வயதினரும் பங்குபற்றலாம்.

* கட்டுரைப் போட்டிக்கான தலைப்புக்கள்
1. சைவத் தமிழ் மலர்ச்சிக்கு சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை அவர்களின் பங்கு.
2. அந்நிய நாகரீக மோகமும், தமிழர்தம் பண்பாடும்
3. பெண்களுக்கெதிரான வன்முறைகளும், அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும்
4. சமூக நலனுக்குச் சவாலான போதைப்பொருள் பாவனை.
5. பண்டைத் தமிழர் வாழ்வியலின் சிறப்பு

கட்டுரைப்போட்டிக்கான அறிவுறுத்தல்கள்.
*4 தாளில் 1000 - 1250 சொற்களுக்கு மேற்படாது கட்டுரை அமைதல் வேண்டும்.
*ஆக்கங்கள் அழகான கையெழுத்துப் பிரதியாகவோ அல்லது அச்சுப்பிரதியாகவோ அமைய வேண்டும்.
*போட்டியாளர் பெயர், முகவரி, தொ.பே.இலக்கம் என்பன தெளிவாகத் தனியொரு தாளில் பிரதி செய்யப்பட்டு கட்டுரையுடன் இணைக்கப்படல் வேண்டும்.
*கட்டுரை சொந்த ஆக்கமாக அமைதல் வேண்டும்.
*போட்டியில் நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானதும், முடிவானதுமாகும்.
*கட்டுரைகள் யாவும் 31.01.2016ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகத் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ செயலாளர், சதாவதானி, நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம், கதிரைவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டி, பருத்தித்துறை என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
*வெற்றியீட்டிய முதல் மூன்று போட்டியாளர்களது சான்றிதழ்களும், பரிசில்களும் சதாவதானியின் 109 ஆவது ஆண்டு விழாவில் 16.04.2016 சனிக்கிழமை வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.

*கட்டுரைப் போட்டிக்கான பரிசு விவரம்:
முதலாம் பரிசு : ரூபா. 10000.00, இரண்டாம் பரிசு : ரூபா. 8000.00,
மூன்றாம் பரிசு : ரூபா 7000.00

திரு.பா.கஜேந்திரன், (தலைவர்) 077 576 0666
திரு.தே.வாசுதேவன் (செயலாளர்) 077 984 5706

மேலதிக விவரங்களை தலைவர் அல்லது செயலாளருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

ஊடக அனுசரணை: உதயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிந்தவுக்கு எதிரான வழக்கு ஜூன் மாதம் ஒத்தி வைப்பு

கொழும்பு, மார்ச் 14

ஜனாதிபதித் தேர்தலின் போது மக்களைப் பரப்புரைக் கூட்டங்களுக்கு அழைத்துச் சென்றமைக்கான கொடுப்பனவாக, இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு 142 லட்சம் ரூபா செலுத்தப்படாமை தொடர்பில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட எழுவருக்கு எதிரான வழக்கு ஜூன் மாதம் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக்காக மக்களை ஏற்றிச் சென்ற இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களுக்கான கட்டணமாக 142 லட்சம் ரூபா செலுத்த வேண்டியிருப்பதாகக் குற்றம் சுமத்தி மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிராக இலங்கைபோக்குவரத்துச் சபை வழக்குத் தொடர்ந்திருந்தது.

இந்த வழக்கு கொழும்பு வர்த்தக நீதிமன்றில் நேற்று முன்தினம் மீள் பரிசீலனை செய் யப்பட்டது. முறைப்பாட்டில் திருத்தம் செய்ய அனுமதியளிக்குமாறு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் நீதிமன் றில் விடுத்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிவான் சிரான் குணரட்ன, வழக்கை ஜூன் மாதம் 23 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின்போது மகிந்த ராஜபக்சவின் சார்பில் அநுராதபுரத்தில் நடத்தப்பட்ட முதலாவது பரப்புரைக் கூட்டம் முதல் கொட்டாவ பிரதேசத்தில் நடத்தப்பட்ட இறுதிப் பரப்புரைக் கூட்டம் வரை ஆதரவாளர்களை ஏற்றிச் செல்வதற்காக இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ்களை வழங்கியிருந்தது. இந்த பஸ்களுக்காக 50 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதுடன், எஞ்சிய 142 லட்சம் ரூபா இது வரையில் செலுத்தப்படவில்லை. (த-ஜ-5)

விண்ணுலகில் 31ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
அருளம்மா
அருளப்பு

மண்ணில்
06.01.1942

விண்ணில்
13.02.2016

" உயிரும் உயிர்ப்பும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பிலும் வாழ்வான் "
அருள: (11:25)

பற்றிமா வீதி, பண்டத்தரிப்பு.
021 205 1926

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
08
.
02
.
1923



உதிர்வு
14
.
03
.
2010

சவரிமுத்து தேவசகாயம்

பப்பா ! ஆயிரம் உறவுகள் எமக்கு இருந்தாலும் நாம்
வாழும் காலம் வரை உங்கள்
நினைவுகள் எம்மை விட்டு அகலாது பப்பா!
ஆறு ஆண்டுகள் நீங்கள் இல்லாமல் மறைந்ததே !

இல. 28,
றக்கா இழுங்கை,
சுண்டுக்குளி.
(69933)
(14.18.17)

என்றும் அன்புடன்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
கமலாதேவி
இராசரெத்தினம்

தோற்றம்
10.10.1937

உதிர்வு
13.02.2016

(திதி: பூர்வபக்க ஷஷ்டி)

அன்னையே!
அன்புக்கு இலக்கணம் நீ
அழகுக்கு உதாரணம் நீ
எமைவிட்டு நீ மறைந்து விட்டாலும்
எம் உள்ளங்களில் வாழும் தேவி நீ

கடந்த 13.02.2016 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (14.03.2016) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வைரவர் கோயிலடி,
நாரந்தனை கிழக்கு,
ஊர்காவற்றுறை.
(69159)(11.18.20)

குடும்பத்தினர்.

கே.பி. தொடர்பில் வினா எழுப்ப சபையில் அனைவரும் தயக்கம்

ஐந்து வினாக்களுக்கான விடைகள் ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 14

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய உறுப்பினராகக் கருதப்பட்ட கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் தொடர்பில் கேள்விகளை எழுப்புவதற்கு நாடாளுமன்றத்தில் நேற்று எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் முன்வராததால் ஐந்து வினாக்களுக்கான விடைகள் ஒத்தி வைக்கப் பட்டன.

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால தலைமையில் கூடியது.

வழமைபோன்று நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் 15 கேள்விகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்விச் சுற்றுக்கு ஒரு மணி நேரம் ஒதுக்கப்படும். சில வேளைகளில் ஒரு மணி நேரத்தையும் தாண்டி சூடான வாதப் பிரதிவாதங்கள் இடம் பெறும். ஆனால், நேற்று கேள்விகளை எழுப்பியிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாய்மூல விடைக்கான கேள்விச் சுற்றின் போது சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை. அதனால் 30 நிமிடங்களுக்குள் கேள்விச் சுற்று நிறைவுக்கு வந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் இரண்டு கேள்விகளை எழுப்பியிருந்தார். அவற்றுள் ஒன்றுதான் கே.பி. தொடர்பான வையாகும்.

கே.பி. தற்போது எங்கு இருக்கின்றார்?, இவருக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுகள் எவை?, மேற்படி குற்றச்சாட்டுகள் தொடர்பான மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகளின்தற்போதையநிலைமை யாது?, விசாரணைகள் நிறைவடைவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்?, விசாரணைகளின் முடிவில் இவருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுமா? என்பதே மரிக்காரின் வினாக்களாகும்.

> "வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று முடிவடைந்த பின்னர், வேலையாளர்களின் வரவு – செலவுத்திட்ட நிவாரணப்படி சட்ட வரைவு, வேலையாளர்களின் தேசிய குறைந்தப்பட்ச வேதனம் சட்டவரைவு ஆகியன தொடர்பில் விவாதம் நடத்தப்பட்டது."

எனினும், முதலாம் சுற்றின் போது மரிக்கார் சபைக்குள் இருக்கவில்லை. இரண்டாம் சுற்றின்போது அவர் சபைக்குள் வந்தார். எனினும், தான் எழுப்பியிருந்த இரண்டு கேள்விகளுள் ஒன்றை (லங்கா புத்ர வங்கி தொடர்பில்) கேட்டு விட்டு வெளியேறினார்.

பின்னர், 12 ஆவது கேள்வியை (கே.பி. தொடர்பில்) எழுப்புமாறு பிரதி சபாநாயகர் கோரிக்கை விடுத்தார். சபையில் மரிக்கார் இருக்காததால் அதைக் கேட்க வில்லை. இதனால், வேறு எவரையாவது அந்த வினாவை கேட்குமாறு பிரதி சபாநாயகர் கோரினார். அப்போது சபையில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களுள் எவரும் முன்ன வரவில்லை.

அதனால், கேள்விகளைப் பிறி தொரு நாளில் கேட்கலாம் என ஆளுங்கட்சி பிரதம கொறடா அமைச்சர் கயந்த கருணாதிலக்க கூறியதையடுத்து வினா ஒத்திவைக்கப்பட்டது.

வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று முடிவடைந்த பின்னர், வேலையாளர்களின் வரவு - செலவுத்திட்ட நிவாரணப்படி சட்ட வரைவு, வேலையாளர்களின் தேசிய குறைந்தப்பட்ச வேதனம் சட்டவரைவு ஆகியன தொடர்பில் விவாதம் நடத்தப்பட்டது. அதில் உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த அளுத்கமகே,

தோட்டப்பகுதிகளில் சம்பளப் பிரச்சினை போன்றே பல பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாக புலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. அண்மையில் கூட பெண்ணொருவரை புலி தாக்கியது. அத்துடன், தோட்டப் பகுதிகளில் வளர்க்கப்படும் ஆடு, கோழிகளுக்கும் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன. வன ஜீவராசிணைக்கள அதிகாரிகள் இது பற்றிக்கூடுதல்கவனம்செலுத்திஉரிய நடவடிக்கைஎடுக்கவேண்டும்என்று கோரிக்கை விடுத்தார். (ற-ஜ-5)

எதிர்காலத்தில் வரப்போகும் நிலைமையானது சிறந்ததல்ல

மரவள்ளித் தடியை நடக் கோருகிறார் சோமவன்ச

கொழும்பு, மார்ச் 14

எதிர்காலத்தில் வரப்போகும் நிலைமையானது சிறந்தது அல்ல. எனவே மரவள்ளி தடிகளை இப்போதே நடுமாறு மக்களிடம் கேட்டுக் கொள்கின்றேன் என்று மக்கள் சேவை கட்சியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வரி அறவிடுதல் அதிகரிக்கப்பட்டுள்ளதன் மூலம் பொருளாதாரம் சரிந்துள்ளதைக் காண முடிகிறது. பிரதமர் நாட்டில் நிலவும் பிரச்சினைகளை முழுமையாகக் கூறுவதில்லை. பிரதமருக்கு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் இயலுமை கிடையாது.

10 லட்சம் வேலை வாய்ப்பு, 5 லட்சம் வீடுகள், பெரு நகரம் போன்ற பெரிய இலக்குகள் பற்றி பேசும் முன்னர், குறைந்தது உணவு பாதுகாப்பையாவது ஏற்படுத்துமாறு நான் அரசிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

நாட்டுக்கு புதிய அரசமைப்புச் சட்டம் தேவையில்லை. திருத்தங்கள் போதுமானது. ஜனாதிபதி பதவியின் அதிகாரங்களை கூட குறைக்க முடியாது. தற்போது செல்லும் விதமாகச் சென்று ஜனாதிபதி பதவியை பிரதமருக்குக் கொடுப்பார்கள் - என்றார்.

(த-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 8 மாதங்களாக வெற்றிடமாகவுள்ள விவசாய ஆராய்ச்சி உதவியாளர் பதவிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 14

வடக்கு மாகாணத்துக்கு பெரும் பான்மையினத்தவர்கள் விவ சாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி யாளர்களாக நியமிக்கப்பட்ட மைக்கு எதிர்ப்புத் தெரிவிக் கப்பட்டு அவர்கள் வேறிடங்க ளுக்கு மாற்றப்பட்டு 8 மாதங் கள் கடந்துள்ள நிலையில் அந்த இடங்களுக்கு இதுவரை யில் தமிழ் மொழி பேசுவோர் நியமிக்கப்படவில்லை.

கடந்த ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி வடக்கு மாகாணத்துக்கு விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களுக்கு நியம னங்கள் வழங்கப்பட்டன. அவற் றில் 90 வீதமானவர்கள் பெரும்பான்மை இனத்தவ ராவர்.

அந்தப் பதவிக்கு வடக்கு மாகா ணத்தில் இருந்து 5 ஆயிரம் பேர் வரையில் போட்டிப் பரீட் சைக்குத் தோற்றியிருந்த போதும், 29 பேரே தெரிவு செய் யப்பட்டிருந்தனர். ஏனையோர் வேறு மாகாணத்தைச் சேர்ந்த வர்களாவர்.

வடக்குக்கு நியமனம் வழங்கப் பட்ட 361 பேரில் 332 பேர் சிங் களவர்கள் ஆவர். அவர்களில், மாவட்ட ரீதியாக யாழ்ப்பாணத் தில் 164 பேரும், கிளிநொச்சி யில் 41 பேரும், முல்லைத் தீவில் 53 பேரும், வவுனியா வில் 40 பேரும், மன்னாரில் 34 பேரும் நியமிக்கப்பட்டிருந் தனர்.

தெரிவுசெய்யப்பட்ட 29 தமி ழர்களில் யாழ்ப்பாணத்தில் 23 பேரும், கிளிநொச்சியில் 4 பேரும், வவுனியாவில் 2 பேரும் நியமிக்கப்பட்டனர். முல்லைத் தீவிலும் மன்னாரிலும் ஒரு தமி ழர் கூட நியமிக்கப்படவில்லை. இதனைக் கண்டித்து வட மாகாண விவாசாய அமைச்சர் கண்டனம் வெளியிட்டிருந்தார். அத்துடன் விவசாயிகளாலும் போராட்டங்கள் நடத்தப்பட்டன. விவசாயிகளுடனான தொடர் பாடலுக்கு மொழி ஒரு தடை யாக அமைந்துவிடக் கூடாது. விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உ த வி யா ள ர் க ளு க் கா ன தேர்வுப் பரீட்சை நாடளாவிய பொதுப் பரீட்சையாக இருந்த போதும் நியமனத் தேர்வுகள் மாவட்டரீதியாக இடம்பெறுவதே பொருத்தமானது என்று வலி

> **"கடந்த ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி வடக்கு மாகாணத்துக்கு விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன. அவற்றில் 90 வீதமானவர்கள் பெரும்பான்மை இனந்த தவராவர். அதற்கு பலதரப் பட்டவர்களிடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பியதால் அவர்கள் வேறிடங்களுக்கு மாற்றப்பட்டனர்."**

யுறுத்தப்பட்டது என்று அதிகாரி கள் தெரிவித்திருந்தனர்.

பொது நிர்வாக சுற்றறிக்கை இல 15-90 இன்படி, பணி வெற்றிடங்களின் எண்ணிக் கைக்கு ஏற்ப, அந்த மாவட் டங்களில் இருந்து விண்ணப் பித்தவர்களில் இருந்தே நியம னங்கள் வழங்கப் பட வேண்டும்.

ஆனால் தென் இ ல ங் கை யி ல் ஏராளமானவர்க ளைத்தெரிவுசெய்த மத்திய அரசு அங்கு போதிய ஆளணி வெற்றிடங்கள் இல்லாததால், அவர்களில் ஒரு தொகுதியினரை வடக்குக்கு அனு ப்ப முன்வந்தது. இதனை அனும தித்தால் மொழிப் புரிதலின்மை கார ணமாக எமது விவ சாயத்துறைபெரும் பாதிப்பை எதிர் நோக்கும் என்ப தைச் சுட்டிக்காட்டி யதையடுத்து சிங்களவர்கள் அந்தப் பதவியில் இருந்து மாற் றப்பட்டனர் என்றும் அதிகா ரிகள் தெரிவித்திருந்தனர்.

ஆயினும் இவைநடந்து 8 மாதங் கள் கடந்துள்ள நிலையிலும் குறித்த பணி வெற்றி டங்க ளுக்கு நியமனங்கள் வழப்பட வில்லை. வடக்கில் ஏரா ளமான இளை ஞர், யுவதிகள் வேலை வாய்ப்பின்றி உள்ள நிலையில், குறித்த பணிக்கு நியமனம் வழங் கப்படாதுள்ளமை குறித்து பல ரும் விசனம் தெரிவித்துள்ள னர்.

இது குறித்து கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையா ளர் நிசாந்தனிடம் கேட்டபோது – இந்தப் பதவிக்கான வெற்றி டங்கள் இதுவரை நிரப்பப்படா துள்ளன. இது பற்றிய மேலதிக விடயங்கள் உதவி விவசாய அமைச்சருக்குத்தான் தெரி யும் – என்று பதிலளித்தார்.

இதுகுறித்து வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங் கரநேசனிடம் கேட்டபோது– மத்திய அரசின் நேரடித் திட் டத்தில் ஜனாதிபதியால் பணிக் கப்பட்டுள்ளமைக்கு அமைவாக மிக விரைவில் வடக்குக்கான தனிப்பரீட்சை ஒன்று நடத்தப் பட்டு உதவியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு இந்த வெற்றிடங் கள் நிரப்பப்படும். – என்று தெரி வித்தார். (ற-ஜ-4,ரி)

அலைபேசி கொள்ளை ஒத்திவைத்த சிறை மூவருக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 14

வீதியால் சென்றவரின் அலை பேசியைக் கொள்ளையடித்த 3 பேருக்கு மல்லாகம் நீதிவான் ஏ.யூட்சன் 9 ஆயிரம் ரூபா அ ப ராதம் வி தித்தார். அத்துடன் 5 வருடங்கள் ஒத்தி வைக்கப்பட்ட ஒன்றரை வரு டங்கள் சிறைத்தண்டனையும் விதித்தார்.

தெல்லிப்பழைப் பகுதியில் இந்தக் கொள்ளை இடம் பெற்றது. அந்தக் குற்றச் சாட் டில் ஏழாலையைச் சேர்ந்த 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

தெல்லிப்பழைப் பகுதியில் வீதியால் ஒருவர் அலை பேசி யில் உரையாடியவாறு சென்று கொண்டிருந்த போது குறித்த 3 பேரும் ஓட்டோவில் சென்று அலைபேசியைக் கொள்ளை யடித்துச் சென்றிருந்தனர்.

அதனைப் பறிகொடுத்தவர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப்படை யில் விசாரணைகளை மேற் கொண்ட பொலிஸார் 3 பேரை யும் கைது செய்திருந்தனர். அவர்கள் நீதிமன்றில் முற் படுத்தப்பட்டபோது குற்றம் நிரூ பிக்கப்பட்டு குறித்த தண்டனை விதிக்கப்பட்டது. (ற-ஜ-4-107)

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சாகும் வரை உணவு தவிர்க்கத் தீர்மானம்

வவுனியா, மார்ச் 14

பலதரப்பட்ட அமைப்பினரையும் அரசியல் வாதிகளையும் நம்பி நாம் ஏமாந்து போனோம். இனி நாங்கள் எவருடைய பின் னூட்டல்களும் இன்றி நாமாகவே ஒன்றிணைந்து சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். – இவ் வாறு வடக்குக் கிழக்கைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடியறியும் சங் கங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

வடக்கு, கிழக்கில் உள்ள 8 மாவட் டங்களிலும் கடத்தப்பட்டு காணா மல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடியறியும் சங்கங்கள் தங்க ளது நிர்வாகக்குழுவை ஒன்றி ணைத்து வவுனியாவில் விருந் தினர் விடுதியொன்றில் நேற்று முன்தினம் நடத்திய பொதுக் கூட்டத்திலேயே அவர்கள் இவ் வாறு தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது–

எமது சங்கங்கள் அமைக்கப் பட்டு 7 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் நாம் இன்று கூடி யுள்ளோம் பல்வேறு அமைப்பி னரை நம்பினோம். ஆனால் எமக்கான தீர்வு எட்டப்படாமை யால் நாமாக இன்று ஒன்று கூடி யுள்ளோம். இந்த ஆண்டுக்குள் தடுப்பு முகாம்களில் உள்ள எமது பிள்ளைகளின் விவரங்களை வெளியிட வேண்டும். பெயர் விவரம் வெளியிட்ட பின்னர் அவர்களுக்குப் புனர்வாழ்வு அளித்தோ அல்லது ஏதோ ஒரு வகையில் அவர்கள் பாதிப் பின்றி விடுவிக்கப்படல் வேண் டும். அவ்வாறு விடுவிக்கப்படா விட்டால் சாகும் வரை உண்ணா விரதப் போராட்டத்தை முன்னெ டுக்கவுள்ளோம். – என்றனர்.

அத்தோடு இதற்காகத் தெரிவு செய்யப்பட்ட நிர்வாக குழு அங் கத்தவர்களின் விவரங்களையும் நேற்று முன்தினம் வெளியிட் டனர்.

அந்த நிர்வாகக் குழுவின் தலை வராக திருமதி ஜெ.நாகேந்திரன், செயலாளராக யோ.கனக ரஞ்சினி, உபதலைவராக திரு மதி அ.கமலினி, உப செய லாளராக திருமதி க.ஸ்ரீகாந்தி, தலைமை ஊடக பேச்சாளராக திருமதி த.செல்வராணி, இணை ஊடகப்பேச்சாளராக த.புஸ்பாம் பாள், பொருளாளராக கா.ஜெய வனிதா, தலைமை ஒருங் கணைப்பாளராக கோ.ராஜ் குமார், உதவி ஒருங்கிணைப் பாளராக திருமதி இ.சுபலட்சுமி ஆகியோர் தெரிவு செய்யப்பட் டுள்ளனர். (ற-ஜ-402)

வெங்காயம், மிளகாய்ப் பயிர்களில் கஸ்குற்றா ஒட்டுண்ணித் தாக்கம்

விவசாயப் பணிப்பாளர் எச்சரிக்கை

அச்சுவேலி, மார்ச் 14

அச்சுவேலி தெற்கு மற்றும் ஆவரங்கால் பகுதியில் வெங் காயம், மிளகாய் ஆகிய பயிர் களில் "கஸ்குற்றா" ஒட்டுண்ணித் தாக் கம் ஏற்பட்டு வருகின்றது. இ த னை அ வ தா னி த் தால் உடனே பிடுங்கி அழித்து விட வேண்டும் என்று யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் ஸ்ரீ. பாலசுந்தரம் அறிவித்துள் ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

கஸ்குற்றா கடும் மஞ்சள் நிறம் கொண்டது, மெல்லிய கொடி யாக வளர்ந்து தான் ஒட்டிக் கொண்ட தாவரத்தை முற்றாகச் செயலிழக்கச் செய்து விடும். அத்துடன் வலு தீவிரமாக வளரும். மேற்படி கஸ்குற்றா ஒட் டுண்ணித் தாவரத்தை அவ தானித்தவுடன் பிடுங்கி முற்றாக அழித்து விட வேண்டும்.

கஸ்குற்றா ஒட்டுண்ணித் தாவ ரம் தான் ஒட்டிக்கொண்ட பயிரை முற்றாக செயலிழக்கச் செய்வ தோடு, விரைவாக வளர்ந்து பாதிப்பையும் ஏற்படுத்தும். இதற்கு களை கொல்லிகளைப் பயன்படுத்த முடியாது.

களை கொல்லியைப் பயன் படுத்தும் போது அது ஏனைய பயிர்களையும் முற்றாக அழிவ டையச் செய்யும். எனவே விவ சாயிகள் அவதானித்தவுடன் கஸ்குற்றாவை கையால் பிடுங்கி முற்றாக அப்புறப்படுத்த வேண்டும்.

கஸ்குற்றாவை பிடுங்கி அழிக்கா விடில் அதன் வித்துக்கள் மண் ணில் கிடந்து வருடாந்தம் பயிர் செய்யும் போது முளைத்து ஒட்டுண்ணியாக வளர்ந்து பயிர்களுக்குப் பாதிப்பை ஏற் படுத்தும். – என்றார். (ஜ-4-11)

சனசமூக நிலையம் மீளவும் ஆரம்பிப்பு

சாவகச்சேரி, மார்ச் 14

நாவற்குழி தேசிய வீடமைப்பு அதிகார சபையின் 300 வீட்டுத் திட்டப் பகுதியில் நீண்ட காலமாக இயங்காது மூடப் பட்டிருந்த சான்றோன் சன சமூக நிலையம் மீளவும் இயங்க ஆரம்பித்துள்ளது.

சனசமூக நிலையத்தை மீள வும் இயங்க வைக்க சாவ கச் சேரி பிரதேச சபை நடவடிக்கை எடுத்திருந்தது. அதற்கான கூட் டம் கடந்த வெள்ளிக்கிழமை சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெ.செல்வராணி தலைமை யில் நடைபெற்றது. இதில் 2016 ஆம் ஆண்டுக்கான நிர் வாகசபைத் தெரிவும் இடம்பெற் றது. புதிய ஆண்டுக்கான நிலையத் தலைவராக யேசு. அமிர்தநாதனும், செய லாள ராக அன்ரனிஸும், பொருளாள ராக சா.தினேஸ்சும், புதிய அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஜ-4-131)

கஞ்சா புகைத்த இருவர் கைது

பண்டத்தரிப்பு பனிப்புலம் பகுதி யில் பீடியுடன் கலந்து கஞ்சா புகைத்த குற்றச்சாட்டில் இரு வரைக் கைது செய்துள்ளனர் என்று இளவாலைப் பொலி ஸார் தெரிவித்தனர். அவர் களிடமிருந்து 3 ஆயிரத்து 800 மில்லி கிராம் மற்றும் 3 ஆயி ரத்து 100 மில்லிகிராம் அளவு டைய கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த பொலிஸார் இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது என்றும் தெரி வித்தனர். (ற-ஜ-4-107)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வவுனியாவில் மகளிர் தினம்

வவுனியா, மார்ச் 14

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிருக்கான விளையாட்டு நிகழ்வுகள், அழகுக்கலை, சுயதொழில் உற்பத்திப் பொருள்கள் விற்பனைக் கண்காட்சி கலை நிகழ்வுகள் நேற்று வவுனியா மாவட்டத்தில்கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் றிஷாட் பதியுதீனால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

நியுசிலியஸ் பவுண்டேசனால் இந்தச்சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தன.

மகளிருக்கான விளையாட்டுநிகழ்வுகள், அழகுக்கலை, சுயதொழில் உற்பத்திப் பொருள்கள் விற்பனைக் கண்காட்சி, கலை நிகழ்வுகள் என பல நிகழ்வுகள் அதில் இடம் பெற்றிருந்தன. நிகழ்வில் வவுனியா மாவட்டத்தை சேர்ந்த அரச அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், அரச அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ற-ஜ-21)

பொருத்தும் வீடுகளை அமைக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

அரசியல்வாதிகள் குழப்பக் கூடாது என்கிறார் அமைச்சர் சுவாமிநாதன்

யாழ்ப்பாணம், மார்ச் 14

பொருத்தும் வீடாக (பிற்றிங்) அமைக்கப்படும் வீடுகள் நவீனத்துவமானவை. எதிர்கால நோக்கில் சிந்தித்து இந்த வீடுகளை அமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்தார்.

எனவே, அரசியல்வாதிகள் இந்த விடயத்தை குழப்ப வேண்டாம் என வும் அவர் கேட்டுக்கொண்டார்.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

65 ஆயிரம் வீட்டுத் திட்டத்தின் மாதிரி வீடு உரும்பிராயில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வீட்டைச் சென்று பார்வையிடுங்கள். இந்த வீட்டினுள், சூழல் வெப்ப நிலையை விட குறைவான வெப்ப நிலையே காணப்படும். அதற்கு ஏற்பவே அதன் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சிங்கப்பூரை நோக்க வேண்டும். ஆரம்ப காலத்தில் அங்கு எவ்வாறு வீடுகள் இருந்தன. இப்போது எப்படி வீடுகள் இருக்கின்றன என்பதை பார்க்க வேண்டும். இந்த வீடுகள் எதிர் கால நோக்கினைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. வீடுகளை வழங்கும் போது, அதனுடன் இணைந்து, காஸ் அடுப்பு வழங்குகின்றோம். முதலமைச்சர் சொல்கின்றார், காஸ் தீர்ந்து விட்டால் அவர்கள் மீளவும் பாரம்பரிய முறையிலான அடுப்பைத்தான் பயன்படுத்துவார்கள். அது இந்த வீடமைப்பில் பொருந்தாது என்கின்றார்.

ஏன் அவர்கள் இப்போதுள்ள நிலையில்தான் அப்படியே இருக்க வேண்டுமா? அவர்கள் முன்னேற மாட்டார்களா? நாட்டின் எதிர்கால நோக்கில் சிந்திக்க வேண்டும். சாதரணமாக கல் வீடு கட்டுவது என்றால், 3 அல்லது 4 மாதங்கள் செல்லும். இந்த வீட்டினை குறைந்த காலத்தில் அமைக்க முடியும். கல்வீடு கட்டுவதற்கு மணல் எடுப்பதற்கு பிரச்சினை, தண்ணீருக்குப் பிரச்சினை என்று ஏகப்பட்ட விடயங்களில் சிக்கல் இருக்கின்றன.

இந்திய வீட்டுத் திட்டத்தில் எத்தனையோ வீடுகள் கட்டப்பட்டு முழுமையடையாமல் இருக்கின்றன. அப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகின்றீர்களா ? இந்த பொருத்தும் வீடுகளை நிர்மாணிக்கும் நிறுவனம் சர்வதேச தரம் வாய்ந்தது. இந்த நிறுவனத்தின் தலைவர் உலகின் தலை சிறந்த பணக்காரர்களுள் ஒருவர். அவர் வடபகுதி மக்களின் நிலைமையைப் பார்த்தே, இந்த வீட்டுத் திட்டத்தை அமைக்க முன்வந்தார்.

இங்கு 32 நலன்புரி நிலையங்கள் உள்ளன. அந்த மக்களை அப்படியே விடப்போகின்றோமா? அவர்களுக்கு எப்போது வீடுகளை வழங்கப் போகின்றோம். கடந்த 30 வருடங்களாக அந்தமக்கள் இடம்பெயர்ந்ததிலிருந்து நல்ல மெத்தையில் படுத்திருக்க மாட்டார்கள். அவர்களுக்கு கட்டில் வழங்குவது தவறா ?

ஒரு விடயத்தைச் சொல்கின்றேன் மன்னித்துக் கொள்ளுங்கள். அரசியல்வாதிகள் இந்த விடயத்தை குழப்ப வேண்டாம் - என்றார்.

(வ-5)

பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் பங்குனித் திங்கள் உற்சவம் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 14

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பங்குனித் திங்கள் உற்சவம் இன்று திங்கள் ஆரம்பமாகவுள்ளது.

கடந்தமுறையைப்போன்று இம்முறையும் அதிக பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதால் தேவையான அனைத்து வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று ஆலய தர்மகர்த்தா தெரிவித்துள்ளார்.

இன்று ஆரம்பமாகும் இந்த நிகழ்வு தொடர்ந்து எதிர்வரும் 21, 28 மற்றும் அடுத்த மாதம் 4, 11 ஆகிய தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளன.

இந்தஉற்சவத்தையொட்டி ஆலயச்சூழலில் பக்தர்கள் பெருமளவானோர்வருகை தருவார்கள் என எதிர் பார்க்கப்படுவதால் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சுகாதாரம், குடிதண்ணீர், போக்குவரத்து, பாதுகாப்பு உள்ளிட்டவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளன. இதற்காக ஆலயச்சூழலில் அரச அலுவலகங்களுக்கானதற்கால அலுவலகங்கள் திறக்கப்படவுள்ளன.

ஆலய வளாகத்தில் சுகாதார மற்றும் குடி தண்ணீர் உள்ளிட்டவற்றை சாவகச்சேரி பிரதேச சபை நிர்வகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் சாவகச்சேரி சுகாதார வைத்தியதிகாரி பணிமனையும்நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளன.

கரம் சுண்டல் மற்றும் இனிப்புப் பண்டங்கள் ஏனையஉணவுப்பண்டங்களின் விற்பனை சுகாதாரப் பரிசோதகர்களின் அறிவுறுத்தலுக்கமை வாக நடத்தப்பட வேண்டும். இந்த ஆண்டுக்கான 2016 வியாபார உரிமம் பெற்றிருக்கவேண்டும்என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆலயச் சூழலில் சைவ சமய ஆசார சீலராக அடியார்கள் மற்றும் ஆலயத்துக்கு வருவோர் நடந்து கொள்ளுமாறும்ஒழுக்கம் அமைதியை பேணுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆலயத்துக்கு வரும் பெண்கள், குழந்தைகள் தங்க நகைகள் அணிவதை தவிர்த்து விடுமாறும் இல்லையேல் நகை அணிந்து வந்தால் மிகவும் கண்காணிப்பாக இருக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் நன்மை கருதி இலங்கைப் போக்குவரத்துச் சபையும், தனியார் போக்குவரத்துச் சங்கமும் சீரான போக்குவரத்துச் சேவையை நடத்தவுள்ளது.

பருத்தித்துறை சாலை, யாழ்ப்பாணம் சாலை பஸ்கள் நுணாவில் சந்தியூடாக புளியடிச் சந்தியை அடைந்து கோயிலைச் சென்றடைய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

ஆலயச் சூழலில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் பணியாற்றவுள்ளனர். அத்துடன் பாடசாலைசாரணர்கள், இந்து இளைஞர் சங்க உறுப்பினர்கள், பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

வழமை போல பூசைகள் நடைபெற்று அம்பாள் வீதி உலா முற்பகல் 10 மணிக்கும் இரவு 7.30 மணிக்கும் நடைபெறவுள்ளன என்று ஆலய தர்மகர்த்தா சி.பஞ்சாட்சரம் தெரிவித்தார்.

(ற-ஜ-4,131)

புளுதியாற்றுக்குக் கீழான துருசு திறக்க முடியாதவாறு உடைப்பு

விசமிகளின் விசமச் செயலால் சிறுதானிய பயிர்ச்செய்கை பாதிப்பில்

கிளிநொச்சி, மரர்ச் 14

கிளிநொச்சி மாவட்டம் புளுதியாற்று நீர்ப்பாசனத்தின் கீழான வாய்க்கால் துருசுவை விசமிகள் சிலர் சேதப்படுத்தியுள்ளனர். அதனால் சுமார் 60 ஏக்கர் சிறுதானியச் செய்கை முற்றாக அழிவடையும் நிலையை எதிர்கொண்டுள்ளது என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டம் இரணைமடுக்குளத்தின் கீழான 2016 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற் செய்கை இந்த ஆண்டு இடம்பெறாததால் சிறு குளங்களின் கீழ் சிறு தானிய பயிர்ச்செய்கையை ஊக்குவிக்குமாறு மாவட்ட விவசாயக் குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து புளுதியாற்றுக்குளத்தின் கீழ் உள்ள 5 கமக்கார அமைப்புக்களில் ஒரேயொரு அமைப்பைச் சேர்ந்த 60 விவசாயிகள் சிறுதானியச் செய்கை மேற்கொள்ள முன்வந்தனர்.

குறித்த பிரதேசத்துக்கான நீர் திறந்து விடப்பட்டு சிறு தானியங்களும் பயிரிடப்பட்டன. இவ்வாறு பயிரிடப்பட்டு இரு வாரங்கள் கழிந்த நிலையில் கடந்த சனிக்கிழமை இரவு சில விசமிகள் திட்டமிட்ட வகையில் குளத்தின் துருசுக் கதவை பூட்டிய பின்பு அதனை மீண்டும் திறக்க முடியாதவாறு அடித்து சேதமாக்கியுள்ளனர்.

அதனால் நீர்ப்பாசனத்தின் கீழான வாய்க்கால் மூலமாக தண்ணீர் வெளியேற்றப்படுவது முற்றாகத் தடைப்பட்டுள்ளது. பிரதேசத்தில் பயிரிடப்பட்ட 60 ஏக்கர் சிறு தானியச் செய்கைகளும் அழிவடைவது உறுதியாகியுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

நீண்ட காலத்தின் பின்பு மாவட்டச் செயலகத்தின் கோரிக்கையை ஏற்று ஏக்கருக்கு 5 ஆயிரம் முதல் 8 ஆயிரம் வரையில் செலவு செய்து பயிரிட்ட நிலத்துக்கான நீரை வேண்டுமென்றே தடை செய்த விசமிகளைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டும் என இராமநாதபுரம் மேற்குகமக்கார அமைப்பின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ற-ஜ-4-101)

காப்புறுதிப் பத்திரமில்லை; ரூ.10 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

காப்புறுதிப்பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய சாரதிக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் சாவகச்சேரி நீதிமன்றால் விதிக்கப்பட்டது

போக்குவரத்து விதிமுறையை மீறி வாகனம் செலுத்தும் நபர்களுக்கு குறைந்தளவு தண்டமே கடந்த காலங்களில் அபராதமாக விதிக்கப்பட்டது.

காப்புறுதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்துபவர்களுக்கு பொதுவாக 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்படுவது வழமை. அத்தகைய விதி மீறல்கள் தொடரும் நிலையில் குறித்த சாரதிக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

(ற-ஜ-4-107)

பாடசாலையின் முன் குழப்பம் ; மாணவனுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம் மார்ச் 14

வடக்கின் போர் துடுப்பாட்டப்போட்டியில் குழப்பத்தை ஏற்படுத்தமுனைந்தமாணவன் ஒருவன் கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதி மன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளான்.

யாழ். சென். ஜோன்ஸ் மற்றும் யாழ். மத்திய கல்லூரிகளுக்கிடையிலான வருடாந்தத்துடுப்பாட்டப்போட்டி, யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை முதல் நடந்து வந்தது. இந்தப்போட்டியில் இரண்டு பாடசாலைகளின் மாணவர்கள் பலரும் மற்றும் ரசிகர்களென ஆயிரக்கணக்கானோர்கலந்துகொண்டனர்.

இந்த நிலையில் போட்டியின் தொடக்க நாளன்று குறித்த கல்லூரிகளின் மாணவர்கள் மேளங்கள் அடித்து உற்சாகத்துடன் நகரப்பகுதியில் திரிந்ததை அவதானிக்க முடிந்தது.

இவ்வாறு மாணவர் குழுவொன்று வேறொரு முன்னணிப் பாடசாலைக்கு முன்னால் சென்று மேளம் அடித்து ஆரவாரம் செய்த போது, அந்தப் பாடசாலையின் அதிபரால் அவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தனர்.

எனினும்அவர்கள்தொடர்ந்து குழப்பத்தில் ஈடுபட்டதால், குறித்த பாடசாலையின் ஆசிரியர்கள் அவர்களைப் பிடிக்க முற்பட்டபோது, ஏனையோர் தப்பியோடிவிட குறித்தமாணவன்மாத்திரம் அகப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து குறித்த மாணவன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டான். பொலிஸாரின் விசாரணையின் போது, அவனுக்கெதிராக ஏற்கெனவே நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அவரை பொலிஸார், யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். அவரை எதிர்வரும்திங்கட்கிழமை வரை விளக்கமறியலில்வைக்குமாறுநீதிமன்றம்உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, குறித்த மாணவர் பாடசாலைக்கு ஒழுங்காக சமுகமளிப்பதில்லையெனவும் மதுப்பாவனைக்கும் போதைப் பழக்கத்துக்கும் உட்பட்டவரெனவும் யாழ்ப்பாண பிரதேச செயலகத்தினால் பல தடவைகள் பொலிஸாருக்குமுறைப்பாடுசெய்யப் பட்டுள்ளதாகவும், அதன் அடிப்படையில் யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில்அவருக்கெதிரானவழக்கொன்றும் நடந்து வருவதாகவும் தெரியவருகின்றது.

(கு-வ-4,103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு மாகாண விவசாய கண்காட்சி இன்று ஆரம்பம்

மன்னார் விவசாயப் பயிற்சி நிலையத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 14

"சந்தையை நோக்கிய சூழல் நேயமான விவசாயம்" என்னும் தொனிப்பொருளிலான வட மாகாண விவசாயக் கண்காட்சி இன்று முதல் தொடர்ந்து 3 தினங்களுக்கு நடைபெறவுள் ளது.

உயிலங்குளத்தில் அமைந் துள்ள மன்னார் மாவட்ட விவ சாயப் பயிற்சி நிலையத்தில், வடமாகாண விவசாயத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறும் இந்தக் கண்காட்சியைப் பிரதம விருந்தினராகக் கலந்து கொள் ளும் வடமாகாண முதலமைச் சர் க.வி.விக்னேஸ்வரன் வைப வரீதியாக ஆரம்பித்து வைக்க வுள்ளார்.

இன்று முதல் எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை வரை யான மூன்று தினங்களுக்கு நடைபெறும் இந்தக் கண்காட்சி யில், எதிர்காலத்தில் விவசாயத் துறை எதிர்நோக்கும் சவால் களுக்குமுகம்கொடுக்கக்கூடிய வகையிலான சூழலுடன் நேய மான பயிர்ச் செய்கை முறை கள், ஆராய்ச்சித் தகவல்கள், விலங்கு வேளாண்மை, விவ சாய இயந்திரமாக்கல், நீர்ப் பாசனம், மூலிகை வளர்ப்பு, தென்னைப் பயிர்ச் செய்கை, பனைவள அபிவிருத்தி மற்றும் முந்திரிகை அபிவிருத்தி தொடர் பான தொழில்நுட்பங்களை உள்ளடக்கியதாக கண்காட்சி அமையவுள்ளது.

அனைத்து வகையான விவ சாய முறைகளும் கண்காட் சியில் உள்ளடக்கப்பட்டுள் ளன.

இவை மட்டுமன்றி விவசாயம் தொடர்பான பிரசுரங்கள், விதைகள், பழமரக்கன்றுகள், அலங்காரத் தாவரங்கள், தனி யார் நிறுவன விவசாய உற்பத்தி கள், பெறுமதிசேர் உணவுப் பொருள்கள் என்பன விற்பனை செய்யப்படவுள்ளன.

இதில் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு வடமாகாண விவசாயப் பணிப் பாளர் சி.சிவகுமார் குறிப்பிட் டுள்ளார். (ற-ஜ-ரி5)

2020ஆம் ஆண்டிலும் கூட மிதிவெடி அகற்றி முடியாது

ஆய்வாளர் வித்யா அபே குணவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 14

2020 ஆண்டிலும் இலங்கை யில் முற்றுமுழுதாக மிதி வெடி கள் அகற்றப்பட்டிருக்காது. அத னால் 15 ஆயிரம் குடும்பங்கள் தமது சொந்த இடத்தில் குடியமர முடியாத சூழ்நிலை காணப் படும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் நிலக் கண்ணிவெடிகள் தொடர் பான ஆய்வாளர் வித்யா அபே குணவர்த்தன.

வடபகுதியில் மிதிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக ஹலோட்ரஸ்ட் நிறு வனத்தின் இலங்கையின் வதி விட முகாமையாளரான டேமி யன் ஒப்ரெய்ன், 2020 ஆம் ஆண்டில் மிதிவெடிகள் அற்ற நாடாக இலங்கை மாற்றப்படும் என்று தெரிவித்துள்ளார்.

ஆயினும் 2011ஆம் ஆண்டு 53 சதுர கிலோமீற்றர் மிதிவெடி கள் அகற்றவிடப்பட்டிருந்த போதும், 2012 ஆம் ஆண்டு அந்த அளவு 22 சதுர கிலோ மீற்றர் எனக்கீழிறங்கியிருந்தது.

> நவீன தொழில் நுட்ப முறை களில் மிதிவெடிகளை அகற்றுதல் நிலக் கண்ணிவெடிகள் சம் பந்தப்பட்ட சர்வதேசப் பிரகடனத்தில் இலங்கை கையெழுத்திடுவதால் மாத்திரமே இது சாத் தியமாகும்.

2013மற்றும் 2014 ஆம் ஆண்டு களில் அந்த அளவு முறையே எட்டு மற்றும் ஐந்து வரையில் கீழிறங்கியுள்ளது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இன்னமும் 64 சதுரக் கிலோ மீற்றர் நிலப் பரப்பில் மிதிவெடி கள் அகற்ற வேண்டியுள்ளது. எதிர்வரும் 5 ஆண்டுகளுக்குள் அவற்றை முற்றாக அகற்று வதற்கான ஆற்றல் இல்லை என்று ஆய்வாளர் வித்யா அபேகுணவர்த்தன தெரிவித் துள்ளார்.

இலங்கை சர்வதேச நிலக் கண்ணிவெடிகள் பிரகடனத்தில் கையெழுத்திடாதிருப்பது மிதி வெடிகளை அகற்றும் செயற் பாடுகள் மந்த கதியை அடை வதற்குக் காரணமாக உள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள் ளார்.

நவீன தொழிநுட்ப முறைகளில் மிதிவெடிகளை அகற்றுதல் நிலக்கண்ணிவெடிகள் சம்பந் தப்பட்ட சர்வதேசப் பிரகடனத் தில் இலங்கை கையெழுத்திடுவ தால் மாத்திரமே இது சாத்திய மாகும் எனவும் அவர் குறிப்பிட் டுள்ளார். போரால் இடம் பெயர்ந்துள்ள 15 ஆயிரம் குடும் பங்களை இன்னமும் அவர் களது சொந்தக் கிராமங்களில் மீளக் குடியமர்த்த முடியாத நிலை காணப்படுகின்றது என் றும், வடக்கு- கிழக்கு மாகாண மக்களே இதனால் பெரிதும் பாதிக்கப்படு கின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள் ளார். (ற-ஜ-22)

குளிரூட்டியில் வைக்கப்பட்ட உணவு சூடாக்கப்பட்டு மறுநாள் விற்பனை

பொதுமக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,மார்ச் 14

யாழ். நகரில் உள்ள சில உண வகங்கள் குளிரூட்டியில் உண வுப் பொருள்களை வைத்தி ருந்து மறுநாள் சூடாக்கி அத னைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்கின்றனர் என்று குற்றச்சாட்டப்படுகின் றது.

அத்தகைய உணவகங்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்று சுகாதா ரத் தரப்பினரால் தெரிவிக்கப் பட்டுள்ளது.

யாழ்.மாநகரப் பகுதியில் உள்ள உணவகங்கள் மற்றும் தேநீர்ச் சாலைகள் போன்றவற்றில் சுகாதார நடைமுறைகள் மிக வும் இறுக்கமான முறையில் பாதுகாக்கப்படுகின்றது என்று மாநகர சுகாதார பொதுச்சந்தை பரிசோதகர் ஒருவர் தெரிவித் தார்.

உணவு கையாளும் நிலையங் கள் போன்றவற்றில் உள்ள பணியாளர்கள் அதற்கான சீருடை அணிந்தே பணியாற்ற வேண்டும். அதனைவிட உணவகங்களில் உள்ள உணவுப் பண்டங்கள் யாவும் உரிய முறையில் சுகாதார நடைமுறைக்கு ஏற்றவாறு பாதுகாக்கப்பட வேண்டும். எனினும் குளிரூட்டப்பட்ட உணவுப் பொருள் களை சூடாக்கி பின்னர் அவை விற்கப்படுவதாக முறைப்பாடு கள் கிடைக்கப் பெற்றன. இவை குறித்து உணவகங்கள் கண் காணிக்கப்பட்டும் வருகின் றன.

இறுக்கமான நடைமுறையால் வயிற்றோட்டம் போன்ற தொற்று நோய்த்தாக்கங்கள் குறைந் துள்ளன. அதனை விட உண வகங்களில் உள்ள குடிதண் ணீரும் சுகாதாரப் பகுதியின ரால் சோதனை செய்யப்பட்டும் வருகின்றன என்றும் தெரிவிக் கப்பட்டது. (ற-ஜ-4-17)

நாதஸ்வர இசைப்பதில் சிறுவயதிலேயே சிறந்த ஆற்றலை வெளிப்படுத்தி வரும் பாலமுருகன் சாரங்கனுக்கு திரு நெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினர் 'நாதஸ்வர உதயபானு' எனும் பட்டத்தை வழங்கி கௌரவித்துள்ளனர். இந்த விருதை பேராசிரியர் சிவலிங்கராஜா வழங்கினார். (ற-ஜ)

உடைந்த பாலத்தால் மக்கள் சிரமம்

கொழும்பு, மார்ச் 13

திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலர் பிரிவுக்குட் பட்ட புல்மோட்டை மற்றும் அரிசிமலைக்கு இடையி லான பாலம் உடைந்துள்ள தால் பொதுமக்கள் போக்கு வரத்துக்களை மேற்கொள் வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அரிசிமலை, பொன்மலைக் குடா மற்றும் சுனாமிக் கிரா மம் என்ற மூன்று கிராமங் களில்வாழும்மக்களால்பயன் படுத்தப்பட்டு வந்த இந்தப் பாலம் 2008 ஆம் ஆண்டில் ஏற்பட்டிருந்த வெள்ளப் பெருக்கின் காரணமாக உடைந்து, நீண்டகாலம் கடந் துள்ளபோதிலும்மீள அமைத் துக் கொடுக்கப் படவில்லை.

இந்தப் பாலத்தின் ஊடாக பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் நீரில் இறங்கி சுமார் 100 மீற்றர் வரையில் கடந்து சென்றே அக்கரைக்குச் செல்ல வேண்டி நேர்ந்திருப்பதோடு, தரைமார்க்கமாகப் பாதை யொன்று இருந்த போதிலும் இந்தப் பாதையின் தூரம் 6 மீற்றர் வரையிலானது என வும் அந்தப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுசம்பந்தமாக திருகோண மலை அரச அதிபர் என்.ஏ.ஏ. புஸ்பகுமாரவிடம் கேட்ட போது, 2016ஆம் ஆண்டின் திருகோணமலை மாவட்ட அபிவிருத்தித் திட்ட யோச னையில் இந்தப் பாலம் அமைத்துக் கொடுக்கப்பட வுள்ளது என்று பதலளித் திருந்தார். (ற-ஜ-22)

அடையாளம் காட்டப்பட்டார் கப்பம் பெற்ற கெற்பேலி வாசி

விளக்கமறியலில் வைத்தது நீதிமன்று

சாவகச்சேரி, மார்ச் 14

பொலிஸ் எனக் கூறி அப்பாவிப் பொதுமகனிடம் 5 ஆயிரம் ரூபா கப்பமாகப் பெற்ற கெற்பேலி வாசி, பணம் கொடுத்தவரால் சாவகச்சேரி நீதிமன்றில் அடை யாளம் காட்டப்பட்டார்.

மிருசுவிலைச் சேர்ந்த ஒருவருக் குத் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தித்தான் பளைப் பொலிஸ் நிலையத்தில் எட்டு வருடங்களாகக் கடமையாற்று வதாகவும், தங்களது தம்பி சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியதால் பொலி ஸார் பிடித்துள்ளனர் என்றும், அவரிடம் ஆயிரத்து 500 ரூபா இருப்பதால் இன்னும் 3 ஆயி ரத்து 500 ரூபா தந்தால் விடு விப்பதாகவும் கூறி நாவற்காடு, வரணிக்குப் பணத்துடன் வரு மாறு கதைத்துள்ளார்.

இதனை நம்பி கெற்பேலி வாசி பணத்துடன் அங்கு சென்ற வேளை கறுப்புக் கண்ணாடி பொருத்திய தலைக் கவசம் அணிந்து கறுப்பு நீளக் காற்சட் டையும், வெள்ளை சேர்ட்டும் அணிந்த நிலையில் குறித்த நபர் வந்து அவரிடம் பணம் பெற் றுச் சென்றுள்ளார்.

இந்தவிடயமாகப் பளைப் பொலிஸ் நிலையத்துடன்தொடர்புகொண்ட போது, தாங்கள் அவ்வாறு எவரையும்கைதுசெய்யவில்லை யெனக்கூறியதால்கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்ததாக அவர் குறிப் பிட்டார். இந்தச் சம்பவம் தொடர் பாகக் கொடிகாமம் பொலிஸார் மோட்டார் சைக்கிள் இலக் கத்தை வைத்துக் கொண்டு கொடிகாமம் கெற்பேலியைச் சேர்ந்த ஒருவரைக்கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்தினர். இவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட் நீதிவான் அடையாள அணிவகுப்பையும் நடத்த எற்பாடுகள் மேற் கொள் ளுமாறும் பொலிஸாருக்குக் கட்டளையிட்டார்.

இதன்பிரகாரம் நீதிமன்ற அடை யாள அணிவகுப்பு அறையில் பதில் நீதிவான் செ.கணபதிப் பிள்ளை முன்னிலையில் அடை யாள அணிவகுப்பு நடத்தப் போது, ஒரேதடவையில் குறித்த நபர் அடையாளம் காட்டப்பட் டார். குறித்த வழக்கு நீதிமன் றில் விசாரணைக்கு எடுக்கப் பட்டபோது, இந்த நபரை எதிர் வரும் 23 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதி வான் உத்தரவிட்டார். (த-ஜ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோசடிகளை சுட்டிக்காட்டியபோது கோபப்பட்டாராம் மகிந்த ராஜபக்ச

ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 14

முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தில் அவர்களது ஊழல் மோசடிகளை, மகிந்தவுக்குச் சுட்டிக்காட்ட முனைந்த போது அவரது கோபத்துக்குத் தான் உள்ளாகினேன் என்று தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால, எதிர் காலத்தில் குற்றவாளிகளைத் தேடித் தண்டனை வழங்கும் நிலையை விட, குற்றவாளிகளை உருவாக்கும் சமூக முறைமையை மாற்றியமைப்பதே சிறந்தது என்று குறிப்பிட்டார்.

'மார்ச் 12' அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் நிறைவு பெறுவதை முன்னிட்டு நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்பகல் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

ஒரு அரசியல் கட்சியின் பிரதானமான முன்மாதிரியாக இருக்க வேண்டியது அதன் தலைமையாகும். தலைமையிடம் இருக்கும் நல்ல பண்பாடுகளே கீழ் மட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. தலைவர் ஒரு ஊழல் மோசடிக்காரராக, கள்வராக இருக்கும் பட்சத்தில் அந்த முன்மாதிரியே கீழ்மட்டங்களில் உள்ள ஏனைய உறுப்பினர்களுக்கும் கிடைக்கின்றது.

முன்பிருந்த அரசின் ஊழல் மோசடிகளைச் சுட்டிக்காட்டச் சென்று அரசின் கோபத்தைச் சம்பாதித்துக் கொண்ட சந்தர்ப்பங்கள்ஏராளமாகஉள்ளன.அவற்றைச் சுட்டிக் காட்டுவது வேறு ஒரு பயணத்தை மேற்கொள்வதற்காகவா? என்று அப்போதைய தலைமை என்னிடம் கேள்வி எழுப்பியது.

நான் வேறு ஒரு பயணத்தை

> **"எனது ஆட்சிக் காலப் பகுதியில் இந்த நாட்டில் எல்லா விடயங் களையும் கொண்டு வந்து ஒரு இலட்சியவாத உலகை அமைக்கும் வாக்குறுதிகளை நான் வழங்கப் போவதில்லை."**

ஆரம்பிப்பதற்கு உள்ளத்தில் எண்ணியது ஊழல், மோசடி, களவு மற்றும் அதிகார மோகத்திலிருந்து நாட்டின் அரசியலை விடுவித்து நல்லதொரு அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதற்காகவே.

கடந்தகால அனுபவங்களை நினைவில் வைத்துக் கொண்டு எதிர்காலத்தைத் திட்டமிட வேண்டியது அவசியமானது. குற்றவாளிகளைத் தேடித் தண்டனை வழங்குவதைவிடகுற்றவாளிகள் உருவாகும் சமூக முறைமையை மாற்றியமைப்பதே மிகவும் முக்கியமானதாகும்.

எனது ஆட்சிக் காலப் பகுதியில் இந்த நாட்டில் எல்லா விடயங்களையும் கொண்டு வந்து ஒரு இலட்சியவாத உலகை அமைக்கும் வாக்குறுதிகளை நான் வழங்கப் போவதில்லை.

எனது முயற்சி அதிவேக நெடுஞ்சாலைகள் அல்லது வானளாவ உயர்ந்த கட்டடங்களை அமைப்பது மட்டுமன்றி தூய்மையான ஒரு அரசியலையும் பண்பாடான ஒரு எதிர்கால தலைமுறையையும் கட்டியெழுப்புவதாகும் – என்றார்.

அரசியல் சீர்திருத்தத்தினூடாக ஒரு ஜனநாயக முறைமையைப் பின்பற்றி ஒரு சிறந்த அரசியல் கலாசாரத்தை ஸ்தாபிப்பதற்காக சிவில் நிறுவனங்கள் உள்ளிட்ட முற்போக்கு சிந்தனையாளர்கள் ஒன்று சேர்ந்து 'மார்ச் 12' அமைப்பை ஆரம்பித்தனர்.

'மார்ச் 12' அமைப்பின் உத்தியோக பூர்வ இணையத் தளத்தையும் ஜனாதிபதி இன்றுதிறந்து வைத்தார். தூய்மையான அரசியலை அடையாளப்படுத்தும் சின்னமும் ஜனாதிபதிக்கு அணிவிக்கப்பட்டது. (ற-ஜ-5)

தென்கொரியாவுக்கு செல்லும் இலங்கையர்கள் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 14

இலங்கையர்கள் தென்கொரியாவுக்கு வேலை வாய்ப்புக்களுக்குச் செல்வது 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது 2015 ஆம் ஆண்டில் 14 வீதத்தால் அதிகரித்துள்ளது என்று வெளிநாட்டுச் சேவைகள் செயற்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய 2015 ஆம் ஆண்டில் தென்கொரியாவுக்கு வேலை வாய்ப்புக்களுக்காகச் சென்றுள்ள உழைப்பாளிகளின் எண்ணிக்கை 5007 ஆகும்.

தற்போது தென்கொரியாவில் 28 ஆயிரம் பேர் வரையிலான இலங்கையின் உழைப்பாளிகள் பணியாற்றி வருகின்றனர்.

உற்பத்திகள், மீன்பிடி, நிர்மாணங்கள், விவசாயம் மற்றும் சேவைகள் போன்ற பிரிவுகளில் அதிகரித்த வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கான பேச்சை நடத்துவதற்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் அமைச்சரான திருமதி தலதா அத்துக்கோரள மற்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் வெகு விரைவில் தென்கொரியா வுக்கான பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-22)

தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார் துமிந்த சில்வா

கொழும்பு, மார்ச் 14

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா மூன்று வருடங்களுக்கான சொத்துத் தொடர்பான தகவல்களை வெளியிடாத குற்றீச் சாட்டுத் தொடர்பான வழக்கில், தனது குற்றத்தைக் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் ஒப்புக் கொண்டுள்ளார்.

அதற்கமைய இந்தகுற்றச்சாட்டுக்கான தண்டனை வழங்கும் திகதியை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதற்கு கொழும்பு பிரதான நீதிவான் கிஹான் பிலப்பிட்டிய உத்தரவிட்டுள்ளார்.

2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் துமிந்த சில்வாவின் சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட்டவில்லை என்று தெரிவித்துலஞ்ச ஊழல் ஆணைக் குழுவினால் குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (த-ஜ-5)

வெள்ளைக் கொடி விவகாரத்தில் குற்றவாளியாகக் காட்ட முயற்சி

கோத்தபாய ராஜபக்ச கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 14

வெள்ளைக் கொடி விவகாரத்தில் என்னைக் குற்றவாளியாக்குவதற்கு சரத் பொன்சேகா முயற்சிக்கின்றார் என்று தெரிவித்துள்ளார் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச. அத்துடன் வெள்ளைக்கொடிவிசாரணைக்கு முன்பதாக ஊடகவியலாளர் லசந்த படுகொலை தொடர்பான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பெரும் ஊழல்கள், மோசடிகள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்குவாக்குமூலம் அளிக்க கடந்த வெள்ளிக்கிழமை சென்றபோதே கோத்தபாய மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை கன்னியுரை நிகழ்த்தியமுன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, போரின் இறுதியில் நடைபெற்ற வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும். போரின் இறுதி வாரத்திலேயே நெறிமுறை தவறிய போர் நடைபெற்றது என்று குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவை பல இடங்களில் மறைமுகமாகச் சாடியும் உரையாற்றியிருந்தார். அதற்குப் பதிலளித்துள்ள கோத்தபாய ராஜபக்ச, வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பாக உண்மையைக் கண்டறியவேண்டும். முறையான சட்டங்களுக்கு உட்பட்ட வகையிலேயே போரை முன்னெடுத்தோம். போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக உரிய விசாரணைகளை முன்னெடுத்து அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று சரத் பொன்சேகா தெரிவித்திருக்கிறார்.

அவர் இத்தகைய கருத்துக்களை முன்வைப்பது புதிய விடயமல்ல. முன்னர் அமெரிக்கா சென்றிருந்த போதும் அவர் இதனையே வலியுறுத்தியிருந்தார். வெள்ளைக் கொடி விவகாரத்தை முன்னிலைப்படுத்தி, சரத் பொன்சேகா என்னைக் குற்றவாளியாகச் சித்தரிக்கவே உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் இவ்வாறு கூறி வருகிறார்.

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு முன்னதாக, ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் – என்று குறிப்பிட்டுள்ளார். (ற-ஜ-5)

பசிலின் கட்சி உரிமை நீக்கம்

கொழும்பு, மார்ச் 14

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சநீங்கிக்கொண்டவராகக் கருதப்படுகின்றார் என்று அந்தக் கட்சியின் இளைஞர் அமைப்பின் தேசிய அமைப்பாளர் ரவி கிரிஷாந்த தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் தயவில், அமைச்சராகவும் – சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளராகவும் இவர் செயற்பட்டுள்ளார்.

2005 ஆம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து இலங்கை வந்த இவர், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் 10 ரூபா பணத்தைக்கூடகட்சியின்உறுப்புரிமைக் காக செலுத்தியதில்லை. அதனால், இவர் உறுப்புரிமையை இழக்கின்றார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் வருடாந்தம் தமது உறுப்புரிமையைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். இருந்தும் பசில் ராஜபக்ச இதனை ஒருபோதும் செய்ததில்லை.

இதுபோன்ற ஒருவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை இரண்டாகப் பிரித்து, புதிய கட்சியொன்றை உருவாக்க முயற்சிப்பது, புதுமையான ஒன்று அல்ல என வும் அவர் மேலும் கூறியுள்ளார். (ற-ஜ-5)

காலாவதியான டைனமற் விற்பனை அரசுக்கு 22 மில்லியன் ரூபா நட்டம்

கொழும்பு, மார்ச் 14

கடந்த ஆட்சிக் காலத்தில் காலாவதியான 100 மெற்றிக் தொன் டைனமற்றைவிற்பனைசெய்தமையால் அரசுக்கு 22 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று ஜனாதிபதி சட்டத் தரணி ஜனக பண்டார, ஜனாதிபதி ஆணைக் குழு முன்னிலையில் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

வெலிசர கடற்படை முகாமில் உள்ள களஞ்சியமொன்றில் 100 மெற்றிக் தொன் டைனமற் வைக்கப்பட்டிருந்தது. இவை காலவதியாகி உள்ளன என்று கடற்படை முகாம் அதிகாரிகளால் பல தடவை, அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும்இந்தஅறிவிப்புக்களுக்கு எந்தவொரு பதிலும் வழங்கப் படவில்லை. டைனமற்றைக்கொள்வதற்கு சில தரப்பினர் தயாராக இருந்த போதும், அதனைக் காலாவதியாகும் வரையில் வைத்திருந்து அதன் பின்னர் அரசு விற்பனை செய்துள்ளது. இதன் மூலம் அரசுக்கு 22 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

கடந்த அரசின் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் எதேச்சதிகாரமாகச்செயற்பட்டுள்ளனர். இதனால் நாட்டுக்கும் மக்களுக்கும் பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளதுஎன்றுஅரசதுறைசட்டத்தரணி ஜனக பண்டார, ஜனாதிபதி ஆணைக் குழுவின் முன்னிலையில் தெரிவித்துள்ளார். (த-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபாகரனுக்கு நடந்தது என்ன? கேட்கின்றார் மகிந்த சமரசிங்க

கொழும்பு, மார்ச் 14
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு உண்மையில் என்ன நடந்தது என்ற உண்மைகளைக் கண்டறிய வேண்டும் என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.
போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பாக சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று முன்னாள் இராணுவத் தளபதியான அமைச்சர் சரத் பொன்சேகா நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தார். இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளதாவது:-

திருப்பு முனை

இத்தனை காலமாக வெளிவராத உண்மைகள் இன்று உரிய நபரின் மூலமாக வெளிவந்திருப்பது முக்கியமான திருப்பு முனையாக உள்ளது. இறுதிப்போரை வழிநடத்திய அப்போதைய இராணுவத் தளபதியான சரத் பொன்சேகா மூலமாக இவ்வாறு கருத்துகள் முன்வைக்கப்பட்டிருக் கின்றதையிட்டு அரசு கவனம் செலுத்த வேண்டும்.
தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது ஆரோக்கியமானது. ஆனால், போரை எவ்வாறு முடித்தனர் என்பதில் தான் சர்வதேச தரப்பில் இருந்து கேள்வி எழுந்துள்ளது.
போரின் இறுதித் தருணங்களில் நடந்ததாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பாக, இது வரை மகிந்த ராஜபக்ச தரப்பு மறுப்பு தெரிவித்து வந்த நிலையில், போரை முன்னெடுத்துச் சென்ற தளபதியே இறுதி தருணத்தில் குற்றங்கள் இடம்பெற்றன எனவும் வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பாக சர்வதேச விசாரணை வேண்டும் எனவும் கூறுவதைச் சாதாரணமாகக் கருதக் கூடாது.

அடுத்த கட்ட நடவடிக்கை

சர்வதேச தரப்பின் பரிந்துரைகள் தொடர்பாக நாம் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டிய கட்டாயம் உள்ளது. இறுதிப் போரில் மோசமான தவறுகள் நடைபெற்றிருந்தால் உண்மையான குற்றவாளிகள் எவர் என்று இனங்காணப்பட்டு, அவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
சரத் பொன்சேகா முன்வைத்துள்ள கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுக்க வேண்டும். இறுதிப் போரில் இராணுவம் மனித உரிமை மீறல்களை மேற்கொண்டிருந்தால் அவை தொடர்பாக விசாரிக்க வேண்டும்.
இறுதிக் கட்டத்தில் ஒரு சிலரின் தூண்டுதலின் பேரிலோ அல்லது புகழையும்,பெயரையும் தக்க வைக்கும் வகையிலோ, ஒரு சிலர் மோசமான வகையில் செயற்பட்டிருந்தால், சரத் பொன்சேகா கூறியதைப் போல் மோசமான வகையில் இவர்கள் மக்களைக் கொன்று குவித்திருந்தால், அந்தக் குற்றங்கள் தொடர்பாக தனிப்பட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பிரபாகரன் உயிருடன் இருந்தாரா ?

ஒரு சிலர் செய்ததாகக் கூறப்படும் தவறுகளுக்காக ஒட்டு மொத்த இராணுவத்தையும் குற்றவாளிகளாக நிறுத்த முடியாது. இராணுவத்தைத் தலைமை தாங்கும் எவரேனும் தமது தனிப்பட்ட அதிகாரத்தில் மக்களை அழித்திருந்தால் அதைக்கண்டறிந்து அவர்களைத் தண்டிக்க வேண்டியது எமது கடமையாகும்.
விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இறுதி நேரத்தில் உயிருடன் இருந்தாரா? அல்லது கொல்லப்பட்டாரா? என்ற உண்மைகளில் கூட இப்போது சந்தேகம் எழுந்துள்ளது. இந்த உண்மைகள் அனைத்தையும் கண்டறிய அரசு முன்வரும்.
சமாதானம், நாட்டின் அமைதியான சூழல் மீண்டும் பாதிக்கப்படக்கூடாது. இப்போது வெளிவரும் உண்மைகளினால் மீண்டும் குழப்பகரமான சூழல் ஒன்று உருவாகிவிடக் கூடாது- என்றார். (ற-ஐ-5)

பொன்சேகா தொடங்கியது தொடர்கதை இனிமேல்தான் திடுக்கிடும் காட்சிகள்

அமைச்சர் மனோ கணேசன் கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 14
அமைச்சர் சரத் பொன்சேகாவின் அதிரடிக் கருத்துப் பகிர்வுகள் ஓர் ஆரம்பம் மட்டும் தான். இதன் தொடர்ச்சியாக பல்வேறு புதுப்புது உண்மைகள், திடுக்கிடும் காட்சிகள் இன்னமும் பல வரவுள்ளன என்று நான் நினைக்கின்றேன். இது ஒரு சிறுகதை அல்ல. ஒரு தொடர்கதை. இதையே நாங்கள் சொன்னால் இட்டுக்கட்டிய புனைக் கதை. அதையே அவர் சொல்லும்போது அது உண்மைகளைப் புட்டு வைக்கும் வாக்கு மூலம் என்பதை உலகம் புரிந்து கொள்ளும்.
- இவ்வாறு தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சரும் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.
கொழும்பு புனித அந்தோனியார் ஆண்கள் கல்லூரி விளையாட்டு விழாவில் கலந்து கொண்டு பெற்றோர் மத்தியில் உரையாற்றும் போதே அமைச்சர் மனோ கணேசன் இதைக் கூறினார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;- நமது கொழும்பு மாவட்ட மக்கள் சார்பாக இன்று நாடாளுமன்றத்திலும், மாகாண சபையிலும், மாநகர சபையிலும், நகர சபையிலும் இருப்பது நமது கட்சி மட்டுமே. வெறும் ஓட்டை உடைசல்கள் நம்மை பிரதிநிதித்துவப்படுத்த முடியாது.
எங்கள் பத்து வருட போராட்டப் பணிகளின் காரணமாக மகிந்த அரசு வீழ்ச்சியடையும் சூழல் உருவான பின் பலர் எங்களோடு இணைந்து இந்த அரசு உருவாக்கத்துக்கு ஒத்துழைத்தார்கள்.
இன்னமும் சிலர் மகிந்தவுடன் இருந்து விட்டு நாங்கள் இந்த அரசை உருவாக்கிய பின் எங்களுடன்வந்து இணைந்து கொண்டார்கள்.
இன்னும் சிலர் இன்னமும் மகிந்தவுடன் குடித்தனம் செய்கிறார்கள். இவர்களை மக்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். இந்த அரசை உருவாக்கிய முதல் ஐந்து பேரில் நானும் ஒருவன். நாங்கள் கடந்த பத்து வருடங்களுக்கு மேற்பட்ட பாட்டின் பிரதிபயன் தான் இந்த அரசு.
இன்று இந்த அரசை உருவாக்கி, மகிந்த கூட்டத்தை வீட்டுக்கு அனுப்பியதில் மாத்திரம் நின்றுவிடாமல் போர் நடத்திய இராணுவத் தளபதியின் வாயின் மூலமாகவே உண்மைகளை எங்கள் அரசு வெளியே கொண்டு வருகின்றது. போரைத் தலைமை தாங்கி நடத்தியதில் தனக்கு உள்ள நியாயமான பெருமையைக் கோரும் அமைச்சர் சரத் பொன்சேகா, அந்தப் போரின் போது தனது கட்டுப்பாட்டையும், அதிகாரத்தையும் மீறி நடந்த மானிட உரிமை மீறல்களையும், அதனால் முழு நாட்டுக்கும், முழு இராணுவத்துக்கும் ஏற்பட்டுள்ள அபகீர்த்தியையும் பற்றி மனந்திறந்து சொல்லுகிறார். உலகம் கேட்கத் தொடங்கியுள்ளது - என்றார். (ற-ஐ-5)

> இது ஒரு சிறுகதை அல்ல. ஒரு தொடர் கதை. இதையே நாங்கள் சொன்னால் இட்டுக்கட்டிய புனைக் கதை. அதையே அவர் சொல்லும் போது அது உண்மைகளைப் புட்டு வைக்கும் வாக்கு மூலம் என்பதை உலகம் புரிந்து கொள்ளும்.

ஐ.நா. சபைக்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 14
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்துடன் இலங்கை அரசு அதிகம் ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது. ஜெனிவாவில் நடந்து வரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 31 ஆவது அமர்வில், உரையாற்றிய ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்துடன் இலங்கை அரசு இணங்கிச் செயற்படுவதை வரவேற்றார்.
கடந்த ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையான நடைமுறைப்படுத்துவதற்கு, இலங்கை அரசு ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்துடன் இன்னும் கூடுதலாக ஒத்துழைத்துச் செயற்படுவதை ஐரோப்பிய ஒன்றியம் விரும்புகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். இந்தச் சூழலில், இலங்கைக்கு சர்வதேச சமூகம் எவ்வாறு உதவலாம் என்பது தொடர்பான ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம் என்றும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி குறிப்பிட்டார். (ற-ஐ-5)

மகிந்த பெற்ற கடன்களால் அரசுக்கு பெரும் தலைவலி

கொழும்பு, மார்ச் 14
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலப் பகுதியில் அரச நிறுவனங்களால் பெறப்பட்ட கணக்கில் காட்டப்படாத வெளிநாட்டுக் கடன்களால், தற்போதைய அரசு பெரும் தலைவலியை எதிர்நோக்கியுள்ளது.
அரச நிறுவனங்கள் மகிந்த ஆட்சிக் காலத்தில் வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டன. அந்த விவரங்கள் வரவு - செலவுத் திட்டங்களில் உள்ளடக்கப்படவில்லை என்று மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.
கணக்கில் காட்டப்படாத கடன்களாக எவ்வளவு தொகை பெறப்பட்டுள்ளது என்று விசாரணை செய்ய வேண்டிய பொறுப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏற்பட்டுள்ளது.
இந்தக் கடன்களால், இலங்கையின் கடன் தர நிலை கீழ் இறங்கியுள்ளது. அடுத்து 12 மாதங்களுக்குள் இந்த நிலையை சீர் செய்யாது போனால், தரநிலை மேலும் கீழ்ச் செல்லும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

பஸ்களில் இலத்திரனியல் அட்டை அனுமதி வழங்கியது அமைச்சரவை

கொழும்பு, மார்ச் 14
பொதுப் போக்குவரத்துச் சேவையில் சில்லறைக் காசு தட்டுப்பாட்டை நீக்கவும், பயணிகளிடமிருந்து சரியான கட்டணத்தை அறவிட்டுக்கொள்வதற்கும் இலத்திரனியல் அட்டைகளைப் பயன்படுத்துவதை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.
முற்செலுத்தல் அட்டைகள் ஊடாக இலத்திரனியல் கட்டணங்களை அறவிட்டுக் கொள்ளும் முறைமையொன்றை பயணிகள் போக்குவரத்துச் சேவை பஸ்கள் தொடர்பாக அறிமுகப்படுத்தி விடுவதற்கு போக்குவரத்துகள், சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் முன்வைக்கப்பட்டிருந்த பிரேரணையை அமைச்சரவை அனுமதித்துள்ளது.
சில்லறைக் காசு தட்டுப்பாட்டுக்குப் நீக்கவும் பயணிகளிடமிருந்து சம்பந்தப்பட்ட மிகச் சரியான கட்டணத்தை அறவிடவும், பஸ் உரிமையாளருக்கு முறையான வருமானம் கிடைப்பது என்பன போன்ற பயனைப் பெறமுடியும் என்றும் கூறப்பட்டுள்ளது.
அரச வங்கிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், சிறிலங்கா தகவல்கள் மற்றும் தொலைத் தொடர்புகள் தொழில்நுட்ப முகவர் நிறுவனம், இலங்கைப் போக்குவரத்துச் சபை, தனியார்துறை பஸ் உரிமையாளர்கள் மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் ஒத்துழைப்புடன் இந்த முற்செலுத்தல் அட்டைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.
ஏற்கனவே மேல்மாகாணத்தில் ஆயிரத்து 400 தனியார் துறை பஸ்களும், மத்திய மாகாணத்தில் 100 பஸ்களும், வடமத்திய மாகாணத்தில் சில பஸ்களிலும் முற்செலுத்தல் அட்டைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.
மேல், மத்திய மற்றும் வடமத்திய மாகாண வழித்தடங்களில் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைகளின் ஒழுங்குபடுத்தல்களின் மீது மக்கள் வங்கி, பயலொக் நிறுவனம் மற்றும் ஏ.ரீ.எஸ்.எல் ரெலிசொப் நிறுவனங்களின் ஒத்துழைப் புடன் முற்செலுத்தல் அட்டைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-4-22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

பொன்சேகா வெளியிட்ட திடுக்கிடும் தகவல்கள்

2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி இலங்கை இராணுவத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குமிடையில் ஏறத்தாழ 30 ஆண்டுகாலமாக நடைபெற்று வந்த ஆயுதப் போரானது முடிவுற்றதாக அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அரசு அறிவித்திருந்தது. அதன்படியே கடந்த ஐந்து ஆண்டுகளாக போரில் வெற்றியை மிக ஆடம்பரமாக ராஜபக்ச ஆட்சியாளர்கள் கொண்டாடி வந்துள்ளார்கள்.

ஆனால், அந்தப் போரை பல வருடகாலமாக முன்னின்று நடத்தியவரான முன்னாள் இராணுவத் தளபதியும் இப்போது நல்லாட்சி அரசின் அமைச்சர்களில் ஒருவருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கடந்த வாரம் வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய தமது கன்னி உரையில் அதனை மறுத்திருப்பது அரசியல் வட்டாரங்களில் அதிர்வை ஏற்படுத்தியிருக்கின்றது. அதுமட்டுமல்ல தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அன்றைய நாள் வரை உயிருடன்தான் இருந்தார் என்று அவர் கூறியிருப்பதானது ஆச்சரியத்தை மட்டுமல்ல பிரபாகரனின் இறப்புத் தொடர்பாகப் பலவித சந்தேகங்களையும் கிளப்பியுள்ளது.

மார்ஷல் சரத்பொன்சேகா கூறியதாக வெளிவந்துள்ள செய்தியில், "2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி அலரி மாளிகைக்கு என்னை அழைத்து பதவி உயர்வு வழங்கினார்கள். அப்போதும் போர் முழுமையாக முடிவுற்றிருக்கவில்லை. 2009 ஆம் ஆண்டு மே 16 ஆம் திகதி வெளிநாட்டிலிருந்து வந்த அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நிலத்தை முத்தமிட்டார். மே 19 ஆம் திகதி போர் முடிந்துவிட்டதாக நாடாளுமன்றத்தில் விசேட அறிவித்தல் மூலம் அறிவித்தார்கள். அப்போதும் போர் முடிந்திருக்கவில்லை. பிரபாகரனும் உயிருடன் இருந்தார் எனினும் நாடாளுமன்ற அமர்வு முடிந்து நான் காரில் சென்று கொண்டிருந்தபோது பிரபாகரனின் சடலம் கண்டெடுக்கப்பட்டதாக எனக்கு அறிவிக்கப்பட்டது" என்று அவர் கூறியதாக அது காணப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவரின் இறப்பு எவ்வாறு நிகழ்ந்தது என்பதில் முன்னாள் இராணுவத் தளபதி கூறியுள்ள தகவல்களின்படி ஏதோ மர்மம் இருப்பது புலனாகின்றது. பிரபாகரன் உயிருடன் பிடிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருப்பாரானில் கண்டிப்பாக அது ஒரு பெரிய போர்க்குற்றம் என்பதில் சந்தேகமில்லை. பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அத்துடன் நிறுத்தவில்லை. தாம் அவசர தேவைக்காக வெளிநாடு சென்றிருந்த வேளையில் வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்கள் தொடர்பான சம்பவம் இடம்பெற்றிருந்தமையைத் தெரிவித்து இவை பற்றி வெளிப்படையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

அவர் தெரிவித்திருக்கும் வேறுபல குற்றச்சாட்டுக்களும் முன்னாள் ஆட்சியாளர்களின் கண்களைப் பிதுங்கச் செய்துள்ளன. 2005 ஆம் ஆண்டு ராஜபக்ச ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ் மக்களை வாக்களிக்காமல் இருக்கச் செய்வதற்காக இலங்கை பெறுமதியில் 200 மில்லியன் ரூபாவுக்கு மேல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச மூலமாக வழங்கப்பட்டதாக மற்றும் போரின்போது 400 கிலோவுக்கு அதிகமான தங்கம் மீட்கப்பட்டுப் பெரும் பகுதி சூறையாடப்பட்டுள்ளிட்டதாகவும் பல குற்றச்சாட்டுக்களை சபையில் முன்னாள் ஆட்சியாளர்கள் மீது அவர் சுமத்தினார்.

பீல்ட் மார்ஷல் பொன் சேகாவின் குற்றச்சாட்டுக்கள் வெறும் பொய் என்றவாறு முன்னாள் அமைச்சர்கள் சிலரும் முன்னாள் பாதுகாப்பு செயலாளரும் மறுப்புக்களை வெளியிட்டுள்ளனர். பொன்சேகாவின் குற்றச்சாட்டுக்களால் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் மறுப்புத் தெரிவிப்பதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. ஆனால், இந்தக் குற்றச்சாட்டுக்களும் அவை பற்றிய சர்வதேச அனுசரணையுடன் விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மைகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்றும் கூறியிருப்பவர் சாதாரண ஒரு மனிதரன்று. போரை முன்னின்று தலைமை வகித்து நடத்திய முன்னாள் இராணுவத் தளபதி, உலகின் தலைசிறந்த இராணுவத் தளபதியாக முன்னைய ஆட்சியாளர்களால் பாராட்டப்பட்டவர். பதவி உயர்வும் வழங்கப்பட்டவர். சில குற்றச்சாட்டுக்களின் பேரில் பின்னர் அவர் அதே ஆட்சியாளர்களால் சிறையில் அடைக்கப்பட்டு அவரது பட்டம் பதவிகள் பறிக்கப்பட்டிருந்தாலும், இப்போது மீண்டும் அந்தப் பட்டங்கள் எல்லாம் மீள் அளிக்கப்பட்டு பீல்ட் மார்ஷல் என்ற பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளவர். அது மட்டுமல்ல நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டு அமைச்சர் பதவியும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே அவர் இந்தக் குற்றச்சாட்டுக்களை ஏனோதானோ என்று கூறியிருக்க முடியாது. அவ்வாறு நினைப்பதும் தவறு.

அவருக்குள்ள தகுதிகளை மதித்து பீல்ட் மார்ஷல் என்ற உயர் பட்டத்தை வழங்கிய அரச நாடாளுமன்றத்தில் அவர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களை புறக்கணித்து விடும் என்று கருத இடமில்லை. அவர் கோரியிருப்பதுபோல் போரின் இறுதிக் கட்டங்களில் நிகழ்த்தப்பட்டதாகக் கருதப்படும் போர்க் குற்றங்களின் மர்மங்களை துலக்குவதற்குச் சரியான பொறிமுறை உருவாக்கப்படுவது அவசியம். அவ்வாறு பொறிமுறை ஒன்று அமைக்கப்பட்டு வெளிப்படையாக விசாரணைகள் நடைபெறுமானால் நிச்சயமாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும் அதன் முன்தோன்றி தனக்குத் தெரிந்த உண்மைகளை வெளியிடுவார் என்றே எதிர்பார்க்க வேண்டும்.

பொறுப்புக்களைச் சுமந்து நிற்கும் கூட்டமைப்பு

சேரலாதன்

தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளின் என்று கூறப்பட்டு வரும் நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நிறைவேற்றி வைக்க வேண்டிய பொறுப்புக்கள் ஏராளம் உள்ளன. எதிர்க்கட்சித் தலைமைப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு அரசுக்கு ஆதரவையும் வழங்கிக் கொண்டிருப்பதானது சாதாரணமான தொரு விடயமல்ல; மிதமான வேகத்தில் விடயங்களை நகர்த்திக் கொண்டிருக்கும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் சாணக்கியம் இன்னும் எவ்வளவு காலத்துக்குத் தாக்குப்பிடிக்கும் என்பதுதான் இன்றுள்ள முக்கியமான கேள்வியாகும்.

போர் இடம்பெற்ற காலப்பகுதியில் இயக்கங்களின் தலைவர்களே தமிழ் மக்களால் நாயகர்களாக மதிக்கப்பட்டனர். இவர்கள் சொல்வதுதான் வேதவாக்காகவும் இருந்தது. ஏனைய இயக்கங்களின் செயற்பாடுகள் விடுதலைப் புலிகளால் இல்லாதொழிக்கப்பட்டதன் பின்னர் புலிகளே தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்றதொரு நிலை உருவானது. புலிகளின் ஆட்சியில் அவர்களை மீறிச் செயற்படுவதற்கு எவருக்குமே துணிவு இருந்ததில்லை. அரசியல் நடவடிக்கைகளையும் அவர்கள் தமது கைகளில் முழுமையாக எடுத்துக் கொண்டார்கள். அரசுக்குச் சவால் விடுகின்ற நிலையில் ஆயுதப்பலமும் அவர்களிடம் இருந்ததால் இலங்கையில் மட்டுமல்லாது உலகம் முழுவதும் உள்ள தமிழர்களின் தலைமைப் பொறுப்பும் அவர்களைச் சென்றடைந்தது. தமிழ் அரசியல் வாதிகள் புலிகளின் ஆணைப்படியே நடக்க வேண்டியதொரு தவிர்க்க முடியாத சூழ்நிலையும் அன்று காணப்பட்டது. புலிகளின் காலத்தில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் அவர்களால் பரிந்துரைக்கப்பட்டவர்களே போட்டியிட முடிந்தது.

> மிதமான வேகத்தில் விடயங்களை நகர்த்திக் கொண்டிருக்கும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் சாணக்கியம் இன்னும் எவ்வளவு காலத்துக்குத் தாக்குப் பிடிக்கும் என்பது தான் இன்றுள்ள முக்கியமான கேள்வியாகும்.

தமது இஷ்டம்போன்று அரசியல்வாதிகள்

ஆனால் போர் ஓய்ந்து புலிகளும் இல்லாதொழிக்கப்பட்ட பின்னர் அரசியல்வாதிகள் தமது இஷ்டத்துக்கு ஏற்ப நடந்து கொள்ள முடிந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தமது கவசமாக எண்ணிய தமிழர்கள் ஆதரவையும் வழங்கினார்கள். இதன் காரணமாகவே பெருமளவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டமைப்பின் சார்பில் தெரிவு செய்யப்பட்டனர். உள்ளூராட்சிச் சபைகளும் கூட்டமைப்பின் வசமாகின. வடக்கு மாகாண சபையை முழுமையாகக் கைப்பற்றிய கூட்டமைப்பு கிழக்கு மாகாண சபையிலும் தனது ஆதிக்கத்தைச் செலுத்த முடிந்தது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவுக்கு எதிராகப் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்க வேண்டுமென கூட்டமைப்பின் தலைவர் விடுத்த வேண்டுகோளைத் தமிழர்கள் முற்றுமுழுதாக ஏற்றுக்கொண்டனர். தமிழர்களின் வாக்குகளே என்னைத் தோற்கடித்ததென மகிந்த புலம்பும் அளவுக்கு தமிழர்கள் தமது வாக்குப் பலத்தினால் அவரைத் தோற்கடித்தனர். மைத்திரியின் வெற்றியைத் தமிழர்களே உறுதி செய்தனர். வீழ்த்த முடியாதவர் என்ற இறுமாப்புடன் இருந்த மகிந்த அரசியலில் மட்டுமல்லாது தனது சொந்த வாழ்க்கையிலும் பெரும் பின்னடைவுகளை எதிர்கொண்டார்.

சம்பந்தரின் ஆதரவுடன் நிறுத்தப்பட்டவர் என்ற ஒரே காரணத்துக்காகவே க.வி.விக்னேஸ்வரன் வடக்கு மாகாண முதலமைச்சராகப் பெரும் ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்டார். கூட்டமைப்பின் வேட்பினர் என்ற வகையில் மக்கள் இவருக்குத் தமது பெரும் ஆதரவை வழங்கியிருந்தனர். ஆனால், கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது முதலமைச்சர் நடந்து கொண்ட விதம் மக்களை முகம் சுழிக்க வைத்தது.

இவரையா சம்பந்தர் தெரிவு செய்தார்? என்ற முணு முணுப்பும் மக்களிடம் எழாமல் இல்லை. இந்த நிலையில் தான் க.வி.விக்னேஸ்வரன் தமிழ்ப் பேரவையின் இணைத்தலைவர் பதவியிலும் அமர்ந்து கொண்டார். கூட்டமைப்புக்கு விரோதமான வர்களே பேரவையில் அதிகளவில் அங்கம் வகித்ததால் கூட்டமைப்புக்கு ஆதரவாளர்கள் இதை அங்கீகரிக்கவில்லை. இதனால் எழுந்த புகைச்சல் தற்போதும் தணியாத நிலையிலேயே காணப்படுகின்றது. ஆனால், கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தரோ எதையுமே அறியாதவர் போன்று வழக்கம் போன்று மெத்தனமாகவே செயற்படுகின்றார். இவரது ஆமை வேகத்திலான நடவடிக்கைகள் காரணமாக பிரச்சினைகளுக்குச் சுமுகமான தீர்வு என்பது கானல் நீராகவே மாறி விட்டது.

இந்த நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழ் மக்கள் மாறி மாறி இன்னல்களையே அனுபவித்து வருகின்றனர். தமிழர்களுக்குச் சிறு துரும்பைத் தானும் கொடுப்பதை இனவாதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமலேயே உள்ளன. இனப் பிரச்சினை ஒரு புறமிருக்க, இடம் பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்வு, காணாமற் போனவர்களின் விவகாரம், நீண்ட காலமாகச் சிறைகளில் அடைத்து வைக்கப்படிருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலை, பொதுமக்களின் காணிகளைப் படையினர் ஆக்கிரமித்துள்ளமை தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிட்ட முறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் தலைமையும் தமிழ்மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகத் துரிதமாகச் செயற்பட வேண்டிய தருணம் இதுதான். உணவுத் தவிர்ப்பில் இருந்த அரசியல்கைதிகள் கூட்டமைப்பினரின் உறுதிமொழியை ஏற்க மறுத்தமை கூட்டமைப்பின் மீது அவர்கள் கொண்டுள்ள அவநம்பிக்கையே எடுத்துக் காட்டுகின்றது.

இடம்பெறும் சிங்களக்குடியேற்றம், தமிழர் பகுதிகளில் புத்தர் சிலைகளை நிறுவி, பௌத்த ஆலயங்களை அமைத்தல், மகாணசபைகளுக்கு உரிய அதிகாரங்களை வழங்காமை இவ்வாறு பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. இவற்றுக்கான தீர்வுகள் விரைந்து எடுக்கப்படாவிட்டால் தமிழர்க்ள் விரும்பியோ விரும்பாமலோ மீண்டும் ஆயுதங்களை ஏந்தவேண்டியநிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும்.

துரிதமாகச் செயற்பட வேண்டிய தருணம்

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் தலைமையும் தமிழ்மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகத் துரிதமாகச் செயற்படவேண்டிய தருணம் இதுதான். உணவுத் தவிர்ப்பில் இருந்த அரசியல் கைதிகள் கூட்டமைப்பினரின் உறுதிமொழியை ஏற்க மறுத்தமை கூட்டமைப்பின் மீது அவர்கள் கொண்டுள்ள அவநம்பிக்கையே எடுத்துக் காட்டுகின்றது. மேலும், கலைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் மாகாண சபையின் வினைத்திறன் ஆகியனவும் கூட்டமைப்பின் மீது மக்களுக்கு வெறுப்பைத் தோற்றுவித்துள்ளது. இதற்கு ஏற்றாற் போன்று அந்த அமைப்பின் முக்கிய நிர்வாகிகள் சகல விடயங்களிலும் மெத்தனமாக நடந்து கொள்கின்றமை தெளிவாகத் தெரிகின்றது. மாகாணசபையில் ஆளும் தரப்பினரே ஒருவரோடு ஒருவர் மோதிக்கொள்கின்றனர். ஓர் அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப்பிரேரணை கூடகொண்டுவரப்பட்டது. ஆனால், முதலமைச்சர் அந்த அமைச்சர்களுக்கு ஆதரவாகப்பேசு, வேறு சிலர் இதை எதிர்க்க மாகாணசபையில் பெரும் களேபரமே இடம்பெற்று முடிந்துவிட்டது. மக்கள் இவையனைத்தையும் அவதானித்துக்கொண்டுதான் இருக்கின்றனர்.

கூட்டமைப்பின் தலையில் பொறுப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கமே தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தையும் ஒன்று சேர்ந்து பலமானதொரு கூட்டணியை அமைப்பதற்காகத்தான் கடந்த மாகாண சபைத் தேர்தலின் போது கூட்டமைப்புடன் முற்று முழுதாக முரண்பட்டு நின்ற ஆனந்த சங்கரியும் கூட்டமைப்புடன் இணைந்து கொண்டார். ஆனால், தேர்தல் முடிவுகள் அவருக்குச் சாதகமாக அமைந்துவிட்டதால் மீண்டும் கூட்டமைப்புடன் முரண்பட்டு நிற்கின்றார். தற்போது அமைக்கப்பட்டுள்ள தமிழர் பேரவைக்கு அவரது பூரணமான ஆசீர்வாதமும் உண்டு. இந்தத்தமிழர் பேரவையில்தமிழரசுக்கட்சி அங்கம் வகிக்காத போதிலும், கூட்டமைப்பிலுள்ள வேறு கட்சிகள் இணைந்திருப்பதைக் காணமுடிகின்றது. கூட்டமைப்பில் இதில்கூடப் பிளவுகள் காணப்படுகின்றன. ஆனால் எவரும் கூட்டமைப்பிலிருந்து விலகிச் செல்வதாகத் தெரியவில்லை. அதனால், ஏற்படக்கூடிய நட்டத்தை அவர்கள் புரிந்து கொண்டிருப்பதால் இன்னமும் கூட்டமைப்பில் இணைந்திருக்கின்றனர். எது எப்படியோ தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற வகையில் கூட்டமைப்பினரின் தலைகளில் மிகப் பெரிய பொறுப்பு சுமத்தப் பட்டுள்ளது. இதை இவர்கள் தட்டிக்கழித்துவிட முடியாது. தமிழர்கள் மோசமானதொரு கட்டத்தைத் தற்போது கடந்து கொண்டிருக்கின்றனர். என்னதான் ஆட்சி மாறினாலும் ஆளுகின்ற இனத்தில் மாற்றம் ஏற்பட்டுவிடப் போவதில்லை. இந்த யதார்த்தத்தை உணர்ந்து காய் நகர்த்துவதே கூட்டமைப்பின் முக்கிய பணியாகும். தமக்குள் தாம் மோதிக் கொண்டிருப்பதை விடுத்து மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் இனியும் தயக்கம் காட்டினால் மக்கள் அதைப் பொறுத்துக்கொள்வார்களென எவரும் எதிர்பார்க்க முடியாது.

அரசியல்வாதிகளால் அலைக்கழிக்கப்படும் தொழில் தேடிச் செல்லும் இளைஞர்கள்

யாழ்.பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்து மூன்று வருடங்களாகியும் தொழிலின்றிய நிலையில் அரசியல்வாதிகளின் பரிந்துரையைத் தொழில் வழங்குனர்கள் எதிர்பார்ப்பதால் நான் எனது தொகுதியிலுள்ள பிரபல அரசியல் கட்சியின் அலுவலகத்துக்குச் சென்றேன். அந்த கட்சியின் தொகுதிப் பொறுப்பாளர் தமது கட்சியிடமிருந்து தொழிலை பெறுவதற்கோ அல்லது நேர்முக பரீட்சைகளுக்கு தமது கட்சியின் பரிந்துரையைப் பெறவோ வேண்டுமாயின் தினமும் மாலை நேரங்களில் 5 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை கட்சி அலுவலகத்துக்கு வருகை தந்து அலுவலக பராமரிப்பு வேலைகளையும் தமது தனிப்பட்ட வேலைகளைச் செய்து தரும்படி வினாவியதோடு அவ்வாறு செய்தால் தான் தங்கள் முகம் தனக்கு நினைவிலிருக்கும் என்றும் கூறினார்.

அரச திறைசேரியிலிருந்து குறிப்பிட்ட தொகைப் பணம் தேவையான சம்பளத்தை வழங்குவதற்கும் கட்சி இதர செலவுகளுக்கும் மாதாந்தம் ஒதுக்கப்படும் நிலையில் தொழில் வாய்ப்பு தேடிச் செல்லும் யாழ். இளைஞர், யுவதிகளின் மூலம் அந்த வேலைகளைச் செய்வதற்கு கட்சிப் பொறுப்பாளர்கள் பணிப்பது கவலைக்குரிய விடயம். தினமும் தொழில் தேடிச்செல்லும்யாழ். இளைஞர்,யுவதிகள்பல்வேறுகட்சிஅலுவலகங்களில் காத்திருந்து இந்தக் கட்சிகளின் ஊடாக தமக்கான தொழிலை பெறமுடியும் என்ற எதிர்பார்ப்புடன் சென்று கொண்டிருக்கின்றனர்.

யாழ்.நகரில் அண்மைக்காலமாக தொழிலின்மையின் வீதம் அதிகரித்துச் செல்கின்றது. அதேவேளை அரசியல்வாதிகளின் செல்வாக்கு மூலம் தொழில் தகைமையற்றவர்கள் தொழில் வாய்ப்பைப் பெறுகின்றனர். இதனால் பட்டதாரிகள் உட்படதொழில் தகைமையுள்ள இளைஞர் சமுதாயம் பாதிக்கப்படுகின்றது.

எனவே இந்த நிலை மாறி எதிர்வரும் காலங்களில் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படும் தகுதியானவர்கள் அரசியல்வாதிகளின் தலையீடுகளின்றி நேர்மையான பாதையில் அரச திணைக்களங்களில் ஆட்சேர்ப்பு செய்யப்படல் வேண்டும் என்பதே படித்த சமுதாயத்தின் எதிர் பார்ப்பாகும்.

செ.மகிந்தன், ஆலங்கேணி.

கிளை வீதிகளின் புனரமைப்பில் அக்கறை காட்டுவார்களா?

உரும்பிராய் கிழக்கில் பலாலி வீதியிலிருந்து ஆரம்பித்து கரந்தன் நீர்வேலி வீதியில் சென்று இணையும் சிவன் வீதியும், அதனோடிணைந்த கிளை வீதியான செல்லப்பா வீதியும் அந்த வீதிகளைப் பயன்படுத்துவோருக்குச் சிரமத்தை ஏற்படுத்தும் அளவுக்குக் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன.

கடந்த பல ஆண்டுகளாக புனரமைக்கப்படாத நிலையிலுள்ள இந்த வீதிகளால் தினமும் பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், இந்தப் பகுதி வாழ் பொதுமக்கள் எனப் பெருமளவிலானோர் பயணிக்கவேண்டியுள்ளது.

வலி.கிழக்கு பிரதேச சபையின் நிர்வாகத்துக்கு உட்பட்ட இந்த வீதிகளில் புனரமைப்பின் அவசியம் குறித்துப் பலதடவைகள் சம்பந்தப்பட்ட நிர்வாகத் தரப்புக்கள் மற்றும் அரசியல் துறைப் பிரமுகர்களது கவனத்துக்குக் கொண்டு வந்து, எல்லாமே செவிடன் காதில் ஊதிய சங்கின் ஒலிபோன்று பயனேதுமற்றுப் போயுள்ளன.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்குக் கட்டியம் கூறப்பட்டு வரும் இந்நிலையில், குறித்த மன்றங்களது உறுப்பினர்கள் பதவியைப் பெற்றிட கங்கணம் கட்டிவரும் பிரமுகர்கள் தத்தமது வெற்றி வாய்ப்பைக் கருத்தில் கொண்டாவது குறித்த இந்த வீதிகளது புனரமைப்புக் குறித்து அக்கறை எடுத்து, சம்பந்தப்பட்ட அதிகாரத் தரப்புக்களுக்கு அழுத்தம் கொடுத்து புனரமைப்பிக்க மனம் கொள்வார்களா?

உள்ளூராட்சி மன்றங்களது ஆயுட்காலம் பூர்த்தியாகியுள்ள நிலையில் பிரதேச சபைச் செயலாளரின் பார்வை இந்த வீதிகள் நோக்கி திரும்புமா என்பது சந்தேகமே. இவ்வாறு சீரற்ற நிலையில் இரண்டு வீதிகள் இருப்பது குறித்துக் கூட அவரது காதுகளுக்குச் செய்தி எட்டியிருக்கும் என்பதும் சந்தேகமே.

அந்த வகையில் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் போட்டியிட மனம் கொண்டுள்ள பிரமுகர்கள் இந்தப்பகுதிவாக்காளர்களது விருப்பு வாக்குகளைப் பெறவேண்டுமென எண்ணினால் குறித்த இந்த வீதிகளது புனரமைப்புக்கு ஆவன செய்ய அக்கறை எடுப்பார்களென எதிர் பார்க்கிறோம்.

குறித்த பகுதிவாழ் பொதுமக்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

லண்டனின் வடக்குப் பகுதியில் வீதித் திருத்தப் பணியின் போது பெரிய எலி ஒன்று இறந்தநிலையில் கண்டெடுக்கப்பட்டது. கிட்டத்தட்ட 4 அடி நீளமாக அது இருப் பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கின்னஸ் உலக சாதனைப் பட்டியலின் படி 3 அடி, 3 அங்குல நீளமான எலியே மிகப்பெரியதாகப் பதியப்பட்டுள்ளது. (ஜ-ரி4)

மலேசியாவில் வெளிநாட்டவர்களுக்குத் தடை

கோலாலம்பூர், மார்ச் 14

மலேசியாவில் இந்தியா, இந்தோனேசியா, பங்களாதேஷ் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து ஏராளமான தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். குறிப்பாக இந்தியாவில் தமிழ்நாட்டில் இருந்து அதிக தொழிலாளர்கள் அங்கு சென்று பணியாற்றி வருகின்றனர். பெரும்பாலும் அவர்கள் கட்டுமானத் தொழில்மற்றும்தோட்டவேலைகளில் பயன்படுத்தப்படுகிறார்கள்.

இதன் காரணமாக பங்களாதேஷைச் சேர்ந்த 15 லட்சம் பேர் மலேசியாவில் பணிபுரிகின்றனர். இதற்கு அந்த நாட்டில் கடும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் இனி வெளிநாட்டு தொழிலாளர்களை வேலையில் சேர்க்கக் கூடாது என மலேசிய அரசு தடை விதித்துள்ளது. இது தொடர்பாக துணைப் பிரதமர் அகமது சாகித் கூறும் போது, 'மலேசியாவில் தேவைக்கு அதிகமாக வெளிநாட்டுத் தொழிலாளர்கள் உள்ளனர். இனியும் அவர்கள் தேவை இல்லை என்பதால் தான் தடை விதித்துள்ளோம்' என்று கூறினார். (ஜ-ரி4)

பாரிஸில் இளம்பெண்கள் கைது

பாரிஸ்,மார்ச் 14

பிரான்ஸ் தலைநகரான பாரிஸில் தாக்குதல் நடத்த பேஸ்புக் மூலமாக சதித் திட்டம் தீட்டிய குற்றத்துக்காக இரண்டு இளம்பெண்களைப் பொலிஸார் அதிரடியாகக் கைது செய்துள்ளனர்.

பாரிஸில் கடந்த நவம்பர் மாதம் பாட்டக்லான் இசை அரங்கில் தீவிரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலுக்கு பிறகு, இதே பாணியில் இசை அரங்கில் தாக்குதல் நடத்த இந்த இளம்பெண்கள் திட்டமிட்டுள்ளனர்.

சமூக வலைத்தளமான பேஸ்புக்கில் சில தினங்களுக்கு முன்னர் 15 மற்றும் 17 வயதுடைய இரண்டு இளம் பெண்கள் நடத்தவுள்ள தாக்குதல் குறித்துத் திட்டங்களை பரிமாற்றிக் கொண்டுள்ளனர்.

இந்தத் தகவல்கள் பொலிஸாரின் கவனத்துக்குச் சென்றவுடன், இரு வரையும் பொலிஸார் அதிரடியாகக் கைது செய்தனர்.

பேஸ்புக்கில் இருவரும் தாக்குதல் குறித்துக் கருத்துக்களை மட்டுமே பகிர்ந்துள்ளதாகவும், இருவரின் இருப்பிடங்களிலும் எந்தவிதமான ஆயுதங்களையும் பறிமுதல் செய்ய வில்லை எனவும் பொலிஸார் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

பாரிஸில் நடந்த தீவிரவாதத் தாக்குதலில் 130 பேர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து நாடு முழுவதும் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

தெ
கை

வட கொ

சியோல், மார்ச். 14

வடகொரியாவை எச்சரி
கொரியாவும், அமெரிக்
கையில் ஈடுபடுகின்றன
படைகளும் கொரியக்
கப்பட்டுள்ளன.

அத்துடன் வடகொரியா
தென் கொரியாவைத் தா
இதற்காக அண்மையில்
கண்டம் விட்டுக் கண்
சோதனை போன்றவற்
இந்த நிலையில் வட
அறிவிப்பு வெளியிட்டுள்
கூறியிருப்பதாவது, தெ
ரிக்காவும் சேர்ந்து வட
தாக்கும் நோக்கத்தில் இ
நடத்துகின்றன. அவர்
தாக்குவார்கள் என எதிர்
எனவே நாங்கள் மு
கூட்டியே போருக்கு
தயாராகி விட்டோம். எ
கள் படைகள் எல்லையி
உடனடித் தாக்குதல் ந
தும் வகையில் தயாரா
வுள்ளன. எந்த நேரத்
லும் நாங்கள் தாக்
தலைத் தொடங்குவோ
நாங்கள் போரைத்தொடங்
விட்டால் நிறுத்த மா
டோம். ஒட்டு மொத்த தெ
கொரியாவையும் கைப்ப
உட்பட அனைத்துப்பகுதி
இவ்வாறு அந்த அறிக்
இதன் காரணமாக வட
கடும் பதற்றம் நிலவுகிற

கிரீஸில் அதிகரிக்கும் அக

பச்சிளங்குழந்தைகளும் பரிதவிப்பு

ஏதன்ஸ், மார்ச் 14

கிரீஸ் எல்லையருகே உள்ள முகாமில் அகதிகள் சந்திக்கும் அவலங்கள் தொடர்பாக வெளியாகியுள்ள புகைப்படங்கள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

உள்நாட்டுப் போர், பஞ்சம் போன்ற காரணங்களால் ஆபிரிக்கா மற்றும் ஆசியாவைச் சேர்ந்த ஏராளமானோர் அகதிகளாக ஐரோப்பியாவுக்குச் செல்கின்றனர்.

அகதிகளை ஏற்றுக்கொள்ள பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் மறுத்து வருவதால் கிரீஸ் மற்றும் மெக்டோனியன் நாடுகளில் எல்லையருகே உள்ள இடொமினி என்ற கிராமத்தில் உள்ள முகாம்களில் இவர்கள் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

சுமார் 14 ஆயிரம் பேர்கள் தங்கவைக்கப்பட்டுள்ள இந்த முகாமில் அடிப்படை வசதிகளேதும்இல்லைஎன்றுகூறப்படுகிறது. இதனால் அங்கு அகதிகளுக்கு இடையே மோதல் சம்பவங்களும் நிகழ்கின்றன.

இந்த நிலையில் முகாம்களில் வசிக்கும் அகதிகள் சந்திக்கும் அவலங்கள் தொடர்பானபுகைப்படங்கள்வெளியாகியுள்ளன. புதிதாகப் பிறந்த குழந்தையைக் குளிப்பாட்டுவதற்குக் கூட வழியில்லாமல் சேற்றில்வைத்துத் தாய் ஒருவர் குளிப்பாட்டும் புகைப்படம், உள்ளிட்ட பல்வேறு புகைப்படங்கள் அதில் இடம்பெற்றுள்ளன.

அதிகமான மக்கள் அங்கு தங்க வைக்கப்பட்டுள்ளதால், கழிவறை, உணவு போன்றவை இல்லாமல் பலர் சிரமப்படுகின்றனர்.

மழை காரணமாக ஏற்பட்ட சேற்றுப் பகுதியில்அவர்கள்தங்கவைக்கப்பட்டுள்ளதால் தொற்றுநோய் பரவும் வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இது குறித்து முகாமில் வசிக்கும் மகிர் அஸ்போர் என்பவர் அங்குள்ள நிலை குறித்துக் கூறியதாவது, எங்கள் கூடாரம் முழுவதும் நனைந்துள்ளது. அது தண்ணீரில் மூழ்கியுள்ளது. இதன் காரணமாக இரவில் நாங்க
எங்களுக்கு உண
குழந்தைக்கு பழ
இரண்டு மணி
மழையில் நனை
காத்துக்கொண்
வித்துள்ளார்.
அகதிகளை அ
டால் ஜனாதிகளின்
விடும். அதனால்
றுக்கொள்ளவில்
ஜனாதிபதி தெரி
பேச்சுக்கு பல
கண்டனம் தெரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் கொரியாவை கைப்பற்றுவோம்

ட கொரியா மிரட்டல்

ார்ச். 14

ாவை எச்சரிக்கும் வகையில் தென் ம், அமெரிக்காவும் கூட்டுப் போர் ஒத்தி டுபடுகின்றன. இதற்காக இரு நாட்டுப் ம் கொரியக் கடற்பகுதியில் குவிக் ான.

வடகொரியா நாடு தனது அயல் நாடான ரியாவைத் தொடர்ந்து மிரட்டி வருகிறது. அண்மையில் அணுகுண்டு சோதனை, ிட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைச் போன்றவற்றை நடத்தியது.

லயில் வட கொரிய இராணுவம் ஒரு வெளியிட்டுள்ளது. அந்த அறிவிப்பில் பதாவது, தென்கொரியாவும், அமெ சேர்ந்து வடகொரியாவில் ஊடுருவித் நாக்கத்தில் இந்தப் போர் ஒத்திகையை றன. அவர்கள் வடகொரியாவைத் கள் என எதிர் பார்க்கிறோம்.



ாங்கள் முன் போருக்குத் விட்டோம். எங் ள் எல்லையில் நாக்குதல் நடத் யில் தயாராக எந்த நேரத்தி கள் தாக்கு நாடங்குவோம். ணைத்தொடங்கி நிறுத்த மாட் மொத்த தென்

> "எங்கள் படைகள் எல்லையில் உடனடி தாக்குதல் நடத்தும் வகையில் தயாராகவுள்ளன. எந்த நேரத்திலும் நாங்கள் தாக்குதலைத் தொடங்குவோம்."

வும் கைப்பற்றுவோம். தலை நகரம் சியோல் னத்துப்பகுதியையும்எங்கள்கைவசப்படுத்துவோம். அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ணமாக வட கொரியா, தென் கொரியா இடையே ும் நிலவுகிறது.

வடகொரியாவின் கப்பல் மாயம்

வடகொரியாவின் நீர் மூழ்க்கிக்கப்பல் ஒன்று திடீரென மாயமாகி விட்டது. வடகொரியாவின் கிழக்குக் கடற்பகுதியில் இயங்கிக் கொண்டிருந்த அந்தக் கப்பலுக்கு என்ன நடந்தது எனத் தெரிய வில்லை. அது திசை தெரியாமல் எங்காவது போய்விட்டதா? அல்லது மூழ்கி விட்டதா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

வடகொரிய நீர் மூழ்கிக் கப்பல் காணாமற் போய்விட்டதாக வெளியான தகவல் பற்றி தென்கொரியா விசாரித்துக் கொண்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதே நேரத்தில் இந்தக் கப்பல் மாயமானது குறித்து அமெரிக்கா கருத்துத் தெரிவிக்க மறுத்து விட்டது. மாயமான கப்பலை வடகொரியாவின் கடற்படை தேடி வருவதை அமெரிக்க உளவு செயற்கைக்கோள்கள், விமானம், கப்பல் என்பன கண்காணித்து வருவதாகவும் அந்தத் தகவல்கள் மேலும் கூறுகின்றன. (ஐ-ரி4)

உலகின் அதிக வயதான மனிதர் 112 வயது இஸ்ரேலியர் சாதனை

வொசிங்டன், மார்ச்.14

இஸ்ரேலில் வசித்து வரும் இஸ்ரேல் கிறிஸ்டல், உலகில் அதிக வயதானவர் எனும் கின்னஸ் சாதனையைப் படைத்துள்ளார்.

இவர் போலந்து நாட்டில் ஜார்னவ் நகர் அருகே 1903 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி பிறந்தார்.

இரண்டாம் உலகப் போரின்போது, 11 ஆவது வயதில் உயிரைப் பாதுகாக்க பெற்றோரை விட்டுப் பிரிந்தார். மேலும் ஆஸ்விட்ச் நகரில் நாஜிக்களின் சித்திரவதை முகாமில் உயிர் தப்பியவர் ஆவார்.

கடந்த வெள்ளிக்கிழமையுடன் அவரது வயது 112 வருடங்கள் 178 நாள்கள். இதனால் உலகிலேயே அதிக வயதான மனிதர் என்று அவர் கின்னஸ் சாதனை படைத்துள்ளார். அவருக்கு வீடு தேடிச்சென்று கின்னஸ் அதிகாரிகள் சான்றிதழ் வழங்கினர். (ஐ-ரி4)

கிறிஸ்தவ புத்தகங்களை தீயிட்ட ஐ.எஸ்.

மொசூல், மார்ச் 14

நூற்றுக்கணக்கான கிறிஸ்தவ புத்தகங்களை ஐ.எஸ். அமைப்பு தீயிட்டு எரிக்கும் வீடியோவை வெளியிட்டுள்ளது. அந்த வீடியோவில் துண்டுப் பிரசுரங்களை பூவா, தலையா எனப் போட்டுப் பார்த்துவிட்டு எரிப்பது பதியப்பட்டுள்ளது.

இந்த வீடியோ வட ஈராக்கின் மொசூல் நகரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இஸ்லாத்துக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு ஐ.எஸ். வன்முறையான செயலில் ஈடுபட்டுள்ளது.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் மொசூல் நகர நூல் நிலையத்தில் இருந்த 10 ஆயிரம் புத்தகங்கள் எரிக்கப்பட்டதுடன், 700 இற்கும் மேற்பட்ட கையெழுத்துப்பிரதிகளைளித்துள்ளனர். இவ்வாறான புத்தகங்கள் அல்லாவின் ஆணைக்கு முரணானவை என ஐ.எஸ். அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (ஐ-ரி4)

கதிகள்

வில் நாங்கள் தூங்குவதில்லை. களுக்கு உணவுவாங்குவதற்காகவும், ந்தைக்கு பழம் வாங்குவதற்காகவும் ண்டு மணி நேரமாக எனது மனைவி ழயில் நனைந்தபடி வரிசையில் த்துக்கொண்டிருக்கிறார் என்று தெரி துள்ளார்.

கதிகளை அதிகமாக ஏற்றுக்கொண் ஜிகாதிகளின் எண்ணிக்கை அதிகரித்து ம். அதனால் தான் அகதிகளை ஏற் கொள்ளவில்லை என்று மெக்டோனியா னாதிபதி தெரிவித்துள்ளார். அவரது ச்சுக்கு பல்வேறு தலைவர்களும் ண்டனம் தெரிவித்துள்ளனர். (ஐ-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காக உழைத்தவர், போராடியவர்

மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்

தமிழர் போராட்ட வரலாற்றில் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்து தமிழ் பேசும் மக்களினதும் தமிழர் தேசங்களினதும் விடுதலைக்காக உழைத்தவர், போராடியவர் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆவார். அன்னார் இலண்டனில் காலமாகிவிட்டார் என்ற செய்தி எமக்கு மிகுந்த அதிர்ச்சியையும் துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழர் தலைவரான எமது தலைவர் அமிர்தலிங்கத்தின் துணைவியாக விளங்கியதிலிருந்து தமிழர் விடுதலைப் போராட்டத்தில் தலைவருடன் இணைந்து போராடியவர், தலைவருடன் சிறை சென்றவர் மங்கையர்க்கரசி எனும் மாதர் தலைவி.

தந்தை செல்வநாயகம் இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்ததிலிருந்து தளபதியாய் நின்று தமிழரசுக் கட்சியைக் கட்டியெழுப்பியவர் தலைவர் அமிர்தலிங்கம். இதே நாளில் கோப்பாய் கோமான் வன்னியசிங்கம், மருத்துவர் ஈ.எம்.வி.நாகநாதன், மட்டக்களப்பு இராசதுரை, இராசமாணிக்கம், திருமலை இராஜவரோதயம், வன்னிச்சுப்பிரமணியம், அம்பாறை ஆர்.டபிள்யூ.அரியநாயகம், முதலானோர் தமிழரசுக் கொள்கையை, இலட்சியத்தை பற்றி நின்றுழைத்தவர்கள். அந்தத் தலைவர்கள் வரிசையில் கோமதி வன்னியசிங்கம், இராஜபூபதி அருணாசலம், மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் திருமதி வேலுப்பிள்ளை முதலான மாதரசிகள் தமிழினத்துக்கும் ஜனநாயக, அஹிம்சைப் போராட்டங்களுக்கும் தலைமை தாங்கியவர்கள். இவை வரலாற்றில் பதியப்பட்டனவாகும்.

தலைவர், தளபதி அமிர்தலிங்கம். தமிழரசுக் கட்சிக்காக தமிழர் நிலமெங்கும் சென்ற பொழுது மங்கையர்க்கரசியும் துணை நின்றார். மங்கையர்க்கரசி வளமான, இனிய குரலில் கேட்போரை ஈர்க்கும் தமிழரசு தேசிய கீதம், பாரதியார் விடுதலைப் பாடல்கள், விடுதலைப் போர்ப் பரணிகளைப் பாடி மக்களை ஈர்த்தவர். மக்களைக் குறிப்பாக இளைஞர் சமுதாயத்தை அணிதிரட்டியவர். அப்பொழுது பள்ளி மாணவர்களாயிருந்த நாமெல்லாம் அமிர் அண்ணாவின் உணர்வுமிக்க, கருத்தாளமிக்க அரசியல், இலக்கிய பேச்சுக்களையும் மங்கையர்க்கரசியின் எழுச்சி மிகு பாடல்களையும் கேட்கக் கூட்டங்களில் கூடியிருந்த காலங்களை எண்ணிப்பார்க்கிறோம். குறிப்பாக 1961ஆம் ஆண்டுகாலத் தொடர் சத்தியாக்கிரகங்களில் மாணவர்களாய் நாம் மட்டுமல்லாது பெருமளவில் முஸ்லிம் மக்களும், முஸ்லிம் மாதர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

தலைவர் அமிர்தலிங்கம் தமிழர் வரலாற்றில் எத்தகைய மதிப்பையும் மாண்பையும் பெற்றிருந்தாரோ, திருமதி மங்கையர்க்கரசியும் அம்மாண்பின் பங்காளியாகவே இருந்து வந்துள்ளார். தமிழரசுக் கட்சியின் வளர்ச்சியிலும், தமிழர் வரலாற்றிலும் நிறைவான பங்களிப்பையும் அர்ப்பணிப்பையும் நிறைவு செய்த பெருமையும் அவருக்குண்டு. அன்னார் விடுதலைக்கு அளித்த பங்களிப்பும், அவர் வாழ்வில் பட்ட துயரங்களையும் தாங்கி நின்ற காலங்களும் தமிழர் வரலாற்றிலும், மனங்களிலும் என்றும் பதிந்திருக்கும், நீங்காத நினைவுகளாய் நிலைத்திருக்கும் எனும் செய்தியோடு எமது இதயம் நிறைந்த அஞ்சலியையும் செலுத்தி நிற்கின்றோம்.

மாவை.சோ.சேனாதிராசா,
நாடாளுமன்ற உறுப்பினர் தலைவர்,
இலங்கைத் தமிழரசுக் கட்சி.

ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள்

சிங்கம்

ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள் வரிசையில் சிங்க ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றிய விவரங்கள் இன்றும் தொடர்கின்றன)

கேதுவின் பலன்கள்:

இதுவரை உங்கள் ராசிக்கு எட்டில் அமர்ந்துக் கொண்டு ஏகப்பட்ட தொந்தரவுகளையும், விரக்தியையும் தந்துகொண்டிருந்த கேது இப்போது ராசிக்கு 7 இல் அமர்வதால் இனி விபத்துகள், ஏமாற்றங்களிலிருந்து மீள்வீர்கள். எப்போது பார்த்தாலும் எந்த நேரம் எப்படி பிரச்சினை வருமோ என்ற ஒரு புயல் மனதில் வீசிக்கொண்டிருந்தே இனி அமைதியடைவீர்கள். எதையும் சமாளிக்கும் சாமர்த்தியத்தைக் கற்றுக் கொள்வீர்கள்.

உங்களை ஏளனமாகவும், இழிவாகவும் பார்த்தவர்கள் வலிய வந்து நட்புப் பாராட்டுவார்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தைப் புரிந்துக் கொள்வீர்கள். ஆனால் களத்திர ஸ்தானமான 7ஆம் வீட்டில் கேது அமர்வதால் கணவன்–மனைவிக்குள் மனக்கசப்புகள் வரும். வதந்திகளை நம்பாதீர்கள். உங்கள் இருவருக்குள் வீண் சந்தேகத்தை ஏற்படுத்தி பிரிவை உண்டாக்க சிலர் முயற்சி செய்வார்கள்.

பழைய கசப்பான சம்பவங்களையெல்லாம் அவ்வப்போது நினைக்கூர்ந்து பேசாதீர்கள். அதன் மூலமாக இருவருக்குள்ளும் பிரச்சினைகள் வரக்கூடும். எனவே பரஸ்பரம் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. தாம்பத்தியம் கசக்கும். மனைவி உரிமையுடன் எதையாவது பேசினால் அதை உரிமையுடன் ஏற்றுக்கொள்ளுங்கள் மனைவியின் ஆரோக்யத்தில் கூடுதல் கவனம் செலுத்தப் பாருங்கள். முதுகு எலும்புத் தோய்வு, பித்தப் பையில் கல், கர்பப்பையில் நீர் கட்டிகள் வரக்கூடும். சின்னச்சின்ன அறுவைசிகிச்சைகளும் வந்துப்போகும். அரசுக்கு முரணான விடயங்களில் தலையிடாதீர்கள். வழக்குகளில் வழக்கறிஞரின் போக்கு சரியாக இருக்கிறதா என்பதை அவ்வப்போது நீங்கள் ஆராய்வது நல்லது. கல்யாண முயற்சிகள் தாமதமாகும். வங்கிக் கடனை நினைத்தும் கலங்குவீர்கள்.

கேது பகவானின் நட்சத்திர சஞ்சாரம்:

உங்கள் பூர்வ புண்யாதிபதியும்– அஷ்டமாதிபதியுமான குருவின் பூரட்டாதி நட்சத்திரத்தில் 08.01.2016 முதல் 12.07.2016 வரை கேதுபகவான் செல்வதால் பழைமையான புத்தகங்கள், நாவல்கள் மீது நாட்டம் அதிகரிக்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். புண்ணிய ஸ்தலங்களுக்கு குடும்பத்தினருடன் சென்று நேர்த்திக் கடனைச் செலுத்துவீர்கள்.

பூர்வீக சொத்தை விரிவுப்படுத்துவது, அழகுப்படுத்துவது போன்ற முயற்சிகள் நல்ல விதத்தில் முடியும். மகளின் திருமணத்தை ஊரே மெச்சும்படி நடத்தி முடிப்பீர்கள். மகனுக்கு அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். சொந்த–பந்தங்களின் அன்புத்தொல்லைகள் குறையும். ராகுவின் சதயம் நட்சத்திரத்தில் 13.07.2016 முதல் 20.03.2017 வரை கேதுபகவான் செல்வதால் உங்களிடம் இருக்கும் சில பலவீனங்களை ஒவ்வொன்றாக சரி செய்து கொள்ளப்பாருங்கள். எல்லாப் பிரச்சினைகளுக்கும் மற்றவர்களை நீங்கள் காரணம் கூறுவது அவ்வளவு நல்லதல்ல.

இலவசமாக சில கூடாப்பழக்க வழக்கங்கள் உங்களைத் தொற்றிக் கொள்ள வாய்ப்பிருக்கிறது. எனவே, உங்களுடைய அடிப்படை நடத்தைக் கோலங்களை மாற்றிக் கொள்ளாதீர்கள். ஐம்பது ரூபாயில் முடியக் கூடிய விடயங்களைக் கூட ஐநூறு ரூபாய் செலவு செய்து முடிக்க வேண்டி வரும். கொஞ்சம் சிக்கனமாக இருங்கள்.

உங்கள் சுக–பாக்கிய அதிபதியான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் 21.03.2017 முதல் 25.07.2017 வரை கேதுபகவான் செல்வதால் எதிர்பாராத பணவரவு உண்டு. பழைய கடன் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைப்பீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் இலாபம் குறைவாக வருவதற்கான காரணத்தைக் கண்டறிவீர்கள். வேலையாள்களுடன் போராட வேண்டி வரும். புது முகவர்களை யோசித்து ஏற்பது நல்லது. கூட்டுத் தொழிலை முடிந்த வரை தவிர்ப்பது நல்லது. வேறு வழியில்லாமல் கூட்டுத் தொழில் செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டால் முறைப்படி ஒப்பந்தங்களை பதிவு செய்வது நல்லது.

உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்கள் திறமையை சோதிப்பார்கள். வளைந்துக் கொடுத்துப் போவது நல்லது. நீங்கள் பொறுப்பாக நடந்து கொண்டாலும், மேலதிகாரி குறை கூறத்தான் செய்வார். சக ஊழியர்கள் செய்யும் தவறுகளை மேலிடத்துக்குத் தெரிவித்துக் கொண்டிருக்காதீர்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நவீன தென்னைச் செய்கை" எனும் நூல் தென்னைச் செய்கையாளருக்கு ஒரு வரப்பிரசாதமே!!

ஜெ.சத்தியேந்திரன்

நாளாந்த மனித வாழ்க்கையில் பின்னிப்பிணைந்த அன்றாடம் தேவைக்கு அதி முக்கியமான பொருள் தேங்காய் ஆகும். உலகிலே தென்னை மரம் மட்டும் தான், நீர் ஆகாரங்களையும், ஏனைய உணவையும், அன்றாடம் பாவிக்கின்ற, கைத் தொழில் பொருள்களையும் வழங்குகின்றது. எனவே தான் இதனை பூலோக கற்பகதரு எனவும் அழைக்கின்றனர். இந்தக் கற்பகதருவான தென்னைச் செய்கையில் குறிப்பாக இந்தநூல் பெருந்தோட்டத்துறையில் பல புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப் படுத்தியுள்ளது. இலங்கையில் பெருந் தோட்டப் பயிர்களில் தென்னை முக்கிய மான பொருளாதாரப் பயிர் ஆகும். எனவே தென்னைச் செய்கைக்கு தனித்துவம் கொடுத்து, தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை எனும் அரச சபையின் மூலம் பல்வேறு வகையான, மானியத் திட்டங்களையும், பல தொழில் நுட்பங்களையும் தென்னைச் செய்கையாளர் களுக்கு வழங்கி வருகின்றது. இதன் பிரதி பலனாக தெங்கு உற்பத்தி மேம்படு வதுடன் பொருளாதாரமும் உயர்த்தப்படு கின்றது.

இதுவரை தமிழ் மொழியில் வெளிவராத நிலையில் இந்த நூல் நவீன தென்னைச் செய்கை என்ற பெயருடன் வெளிவந்துள்ளது. புதிய தொழில் நுட்பரீதியாக, விளக்கமாக, வர்ணப்படங்களுடன், 20 அதிகாரங்கள் உள்ளன. உலகில் எந்த தொழில் நுட்பம் ஆனாலும், அதனைத் தாய் மொழியில் வாசிக்கும் போது தான் விளக்கமாக விளங்கிக் கொள்ள முடியும், என்பது யதார்த்தம்.

மேலும் கல்விசார் துறைகளில் பாடசாலை மட்டத்துக்குத் தேவையான தாவரவியல் இயல்புகள், பாகுபாட்டியல், உருவவியல், இழையவியல், கூழலியல் போன்ற விடயங்களுடனும், பல்கலைக்கழக மட்டத்துக்கு தேவையான தகவல்களுடனும், விவசாயத்துறைசார் உத்தியோகத்தர் களுக்கு மற்றும் முக்கியமாக தென்னைச் செய்கையாளர்களுக்கும் நவீன தென்னைச் செய்கை நூல் வழிகாட்டியாக அமைந்துள்ளது.

இந்த நூலில் பல புள்ளி விவரங்கள், பல தென்னைத் தகவல்கள், பல புதிய தொழில் நுட்ப தென்னை ஆராய்ச்சி நிலையக் கண்டுபிடிப்புக்கள், நுண்ணுயிர் உரங்கள், சேதனப் பசளைகள், கிளிரிசிடியா (இது இலங்கையில் 4வது பெருந் தோட்டப் பயிர்) விலிருந்து மின்சாரம் எடுக்கும் தொழில் நுட்பம் பற்றியும், ஏனைய பிரயோ சனங்கள் பற்றியும், மரவர்க்கங்களில் தென்னைகளுக்கு இடையில் நட்டு வருமானம் பெறக்கூடிய கஜு, தேக்கு, குறுங்கால பயிர்கள் பற்றியும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது தென்னை சார் கைத்தொழில் பொருள்கள், தேங்காய் எண்ணெயின் மகத்துவம், தூய தேங்காய் எண்ணெய் தயாரிப்பு, சிறப்கள், இளநீரின் முக்கியத்துவம், ஆயுள் வேத மருத்துவத்தின் பயன்பாடு பற்றியும் மேலும் தென்னைச் செய்கையாளர்களின் தகவலுக்காக வெளி நாட்டிலுள்ள தென்னை நோய்கள், பீடைகள் பற்றியும் பட விளக்கங்களுடன் தரப் பட்டுள்ளது. மற்றும் தென்னந்தோட்டத்தை நிர்வகிக்கும் முறை, நீர்ப்பாசன முறைகள், ஈரப்பாதுகாப்பு முறைகள், மகளிருக்கான அழகுக் குறிப்புக்கள் பற்றியும் விரிவாக எழுதப்பட்டுள்ளது.

தென்னைச் செய்கையாளர்கள் கடந்த காலங்களைப் போல் அல்லாது இந்த நூலை உடன் வாசிப்பதன் மூலம் தங்கள் தோட்டங்களில் உள்ள பிரச்சினைகளை உடனே தீர்த்துக் கொள்ள முடியும்.

இன்றைய உலகில் தென்னையிலிருந்து பெறப்படும் கைத்தொழில் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு பல பேர் ஆவலாக உள்ளனர். ஆனால் அதன் தொழில் நுட்பம் தெரியாது இருக்கின்றனர். தேங்காய் கைத்தொழிலுக்கு பாவிக்கப்படும் உபகரணங்கள், கருவிகள், இயந்திரங்கள், ஆகியவற்றை வேறுபடுத்தி படத்தின் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

பல தென்னைச் செய்கையாளர்கள் தென்னங்கன்று நடுவதிலும், உரமிடு தலிலும், மற்றும் நோய் பீடைத்தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதிலும் பல சந்தேகங்களைக் கொண்டுள்ளனர். உதாரணமாக தென்னையின் அடியில் 4 அடி ஆழமாக வட்டமாக வெட்டி பசளை யிடுகின்றனர்.

இது ஒரு தவறான முறையாகும். காரணம், தென்னை மரத்தின் அடியில் வேர்களை வெட்டிச் சேதப்படுத்தினால், 3 மாதங்கள் தொடர்ச்சியாக பாளையில் எந்த வித குரும்பட்டியும் பிடிக்காது.

ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ஓலையும், ஒவ்வொரு பாளையும் வெளிவரும். வருடத்தில் 12 முறை தேங்காய் பறிக்கலாம். தென்னை மரம் ஒரு நாளைக்கு 3 லீற்றரிலிருந்து 24 லீற்றர் நீரை உறிஞ்சும் திறன் கொண்டது. இப்படியாகப் பல தரப்பட்ட விவரங்களையும் தென்னைச் செய்கையாளர்கள் அறிந்து கொள்வதற்கு வசதியாக இந்த நூல் சகல விடயங்களையும் தெளிவுபடுத்தியுள்ளது.

எனவே இந்த அரியநூலானது தமிழ் பேசும் மக்களுக்குக் கிடைத்திருக்கும் அரும்பெரும் பொக்கிஷம் ஆகும். இதனை தென்னைச் செய்கை மேற் கொள்ளும் ஒவ்வொருவரும் கட்டாயம் வாசித்தல் அவசியம். இந்தப் புத்தகம் வர்ணப் படங்களுடன் கூடிய 336 பக்கங்களைக் கொண்ட நூலாக வெளிவந்துள்ளது.

கட்டுரையாளர் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணிபுரிகின்றார்.

பல தென்னைச் செய்கையாளர்கள் தென்னங்கன்று நடுவதிலும், உரமிடு தலிலும், மற்றும் நோய் பீடைத்தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதிலும் பல சந்தேகங்களைக் கொண்டுள்ளனர். உதாரணமாக தென்னையின் அடியில் 4 அடி ஆழமாக வட்டமாக வெட்டி பசளை யிடுகின்றனர். இது ஒரு தவறான முறையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணை பிரியாத தோழிகள்

சோலையூர் ஓர் அழகிய கிராமம் ஆகும். பசுமை நிறைந்த வயல் வெளிகளும், நீர் நிரம்பி வழியும் குளங்களும், கிளை பரப்பி நிற்கும் மரங்களும் அந்தக் கிராமத்தை ஒரு சொர்க்கபுரியாகவே மாற்றிவிட்டன. அந்தக் கிராமத்தில் அமைந்துள்ள ஆரம்ப பாடசாலையில் புனிதாவும், சுமதியும் கல்வி கற்று வந்தனர். புனிதா அந்த ஊரின் நாட்டாமையின் புதல்வி. சுமதி நாட்டாமையின் கீழ் ஊழியம் புரியும் ஒருவரின் மகள். அந்தஸ்தில் மிகப்பெரிய வேறுபாடு இருந்தாலும் புனிதாவும், சுமதியும் நெருங்கிய தோழிகளாக விளங்கினார்கள். இவர்கள் இருவரும் தாக்கான மதிய உணவை வீட்டிலிருந்து எடுத்துச் செல்வது வழக்கம். புனிதா அறுசுவை உணவுகள் நிரம்பிய உணவுப் பாத்திரத்தை எடுத்து வருவாள். ஆனால் சுமதியின் உணவுப் பாத்திரத்தில் எப்போதுமே சாதாரண உணவுதான் காணப்படும். புனிதா இதை அவதானித்துக் கொண்டதால் தான் எடுத்து வருகின்ற உணவில் ஒரு பகுதியைச் சுமதிக்குக் கொடுத்து விடுவாள். சுமதி வேண்டாவென்று தடுத்த போதிலும் புனிதா விடுவதாக இல்லை. புனிதாவின் நல்ல உள்ளத்தைச் சுமதி பூரணமாக அறிந்து கொண்டதால் தனது தோழியின் மீது உயிரையே வைத்திருந்தாள்.

இதேவேளை – இருவரது ஆரம்பக் கல்வி முடிவுறுவற்றதால் உயர் கல்வியைத் தொடருவதற்காக வெவ்வேறு பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். இதனால் புனிதாவும், சுமதியும் கடுமையான சோகத்தில் தவித்தனர். கண்ணீர்விட்டு அழுதனர். ஆனால் பிரிவதைத் தவிர அவர்களால் வேறொன்றும் செய்ய முடியவில்லை. காலம் வேகமாகச் சுழன்றது. சுமதியின் குடும்பத்தினர் வேறொரு ஊருக்குச் சென்று வாழத் தொடங்கினார்கள். இதனால் சிநேகிதிகள் இருவரும் சந்திக்க முடியாத சூழ்நிலையும் உருவானது. புனிதா தனது பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்து கொண்டாள். ஆனால், அவளது தந்தையொரு செல்வந்தராக இருந்ததால் வேலை எதற்கும் செல்லாமல் வீட்டிலேயே இருந்தாள்.

ஒருநாள் அவள் தனது மோட்டார் சைக்கிளில் செல்லும் போது எதிரே வந்த கார் மோதிவிட்டுத் தப்பிச் சென்றது. இரத்த வெள்ளத்தில் கிடந்த புனிதாவை பெரிய நகரமொன்றில் அமைந்திருந்த மருத்துவமனையில் சேர்த்தனர். அதே மருத்துவமனையில் தான் சுமதியும் ஒரு மருத்துவராகப் பணிபுரிந்து வந்தாள். அவள் தற்செயலாக வந்தபோது புனிதாவின் நிலையைக்கண்டு கதறி அழுதாள். அப்போது அங்கு வந்த தலைமை மருத்துவர் புனிதாவுக்கு குறிப்பிட்ட வகைக் குருதி உடனடியாக வழங்கப்படவேண்டுமெனக் கூறினார். உடனே சுமதியின் முகத்தில் மகிழ்ச்சி ஏற்பட்டது. தனது உடலில் ஓடுவது புனிதாவுக்குத் தேவையான குருதிதான் என்பதை உணர்ந்து கொண்ட அவள் உடனடியாக செயலில் இறங்கினாள். தேவையான குருதி வழங்கியதால் புனிதா மயக்கம் தெளிந்து கண் விழித்துப் பார்த்தாள். தனது அன்புத் தோழி சுமதி மருத்துவரின் உடையில் நிற்பதையும் தனக்கு குருதியை வழங்கி உயிரைக் காத்தவள் அவளே என்பதையும் புரிந்து கொண்ட புனிதா சுமதியைக் கட்டிப்பிடித்து அன்பு மழை பொழிந்தாள்.

வரலாற்றில் இன்றைய தினம்

1489 – சைப்பிரஸ் அரசி கதரீன் கார்னாரோ, தனது இராச்சியத்தை கிறீஸ்க்கு விற்றார்.

1757 – ஆர்டிக்கிள்ஸ் ஒப்வோர் மீது விமர் சனம் செய்த அட்மிரல் சேர் ஜோன் பிங், துப்பாக்கி அணியால் எச்.எம்.எஸ் மொனார்ச் கப்பலில் வைத்து சாவுத் தண்டனைக்கு உள்ளானார்.

1931 – இந்தியாவின் முதலாவது பேசும் படமான ஆலம் ஆரர் வெளியிடப்பட்டது.

1988 – 125 சி.சி.மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்துவதற்கு இந்திய அமைதிப் படையினர் அனுமதி.

1939 – ஸ்லோவோக்கியர தனது சுதந்திரத்தை ஜேர்மனின் அழுத்தத்தின் மத்தியிலும் பிரகடனம் செய்தது.

1979 – சீனாவின் பீஜிங்குக்கு அருகில் தொழிற் சாலை ஒன்றில் விமானம் மோதி விபத்துக்குள்ளானதில் 14 அமெரிக்க குத்துச் சண்டை வீரர்கள் உட்பட 87 பேர் சாவு.

2007 – முதலாவது உலக கணித தினம் கொண்டாடப்பட்டது

வர்ணம் தீட்டுவோம் வாருங்கள்...

தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை

"தாயிற் சிறந்த கோயிலுமில்லை. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்பது எமது தமிழறிஞர்களின் வழிகாட்டல். அம்மா என்றால் அன்பு. அப்பா என்றால் ஆசான் என்றால் கல்வி என்றும் நாம் பாடிக் களிக்கின்றோம். அவ்வாறே செயற்படுகின்றோம். வெற்றிபெற்ற மனிதர்களின் வரலாறுகள் இதற்குச் சான்று பகர்கின்றன. எமது வாழ்வின் வெற்றியில் அக்கறை கொண்ட முதன்மையாளர்களாக, மாதா, பிதா, குரு ஆகியோரே உள்ளனர். தெய்வமும் நமக்குத் துணைதான். இவர்களில் அன்புக்கு அம்மாவையும் அறிவுக்கு அப்பாவையும் நாம் அடையாளம் காண்கின்றோம். அத்தகைய அறிவார்ந்த அப்பா, நமக்கு அறிவை ஊட்டுவதுடன் நின்றுவிடுவதில்லை. மேலும் அறிவை நாம் பெறுவதற்காக அவர்கள் அயராது பாடுபடுகின்றனர்.

தந்தை மகற்காற்று நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்' என்பது வள்ளுவர் வாக்கு. தகப்பன் மகனுக்குச் செய்ய வேண்டிய நன்மை எதுவென்றால், கற்றறிந்தோர் சபையில், மகன் சிறப்பு டையவனாக விளங்கும்படி செய்து வைப்பதுதான் என்பது இதன் பொருள். தம்மைக் காட்டிலும் தம்முடைய மக்கள் அறிவுடையவர்களாக இருப்பதைக் காண்பது, உலகில் மக்களைப் பெற்ற எல்லோருக்கும் இன்பம் உண்டாக்கக் கூடியது ஆகும். அதனால்தகப்பன் எம் கல்வியில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றார். இவ்வாறுள்ள அப்பாவுக்கு, நாம் கைமாறு செய்ய வேண்டாமா?

நாம் அறிவு பெற தந்தை சொற்கேட்டு நடப்பதே ஒரேயொரு வழியாகும். அதற்கு மந்திர சக்தி உண்டு. எந்த ஒரு தந்தையும் தனது பிள்ளை வழி தவறிச் செல்வதை விரும்பமாட்டார்கள். அதனால் பிள்ளைக்கு மட்டும் அவமானமல்ல. தாய் தந்தையருக்கும் அவமானம். ஆகவே தந்தை தம்பிள்ளை, நேரிய வழியில் செல்வதையே விரும்புவர். அவர்களது சொற்களைக் கேட்டு நடப்பதன் மூலம் நாம் முன்னேறலாம். அதற்கு இப்போதே திட சங்கற்பம் கொள்வோம்."

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒத்துழைக்க மறுக்கும் படகு உரிமையாளர்கள்

■ ஊரவன்

கடல் அன்னை தாலாட்டும் இடம் தான் நெடுந்தீவுப் பிரதேசம். இதன் நுழை வாயில் மாவலித் துறைமுகம். இதன் மூலம் தான் தீவினுள்ளே செல்ல வேண்டும். இதனை இன்று கடற் படையினரும், எம்மூரவரும் சேர்த்து ஆக்கிர மித்து வைத்துள்ள காட்சி, ஆட்சி என்பவற்றை மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் எம்மூரவர்கள் சகித்துக் கொண்டும், தாங்கிக் கொண்டும் பயணத்தைத் தொடருகின்றனர்.

இந்த வகையில் காலா காலமாக இருந்த மாவ லித் துறைமுகப் பாலம் இன்று கடற்படையினரது கட்டுக்குள் உள்ளது. அதிலும் பாதி எமது உயிர் காக்கும் அம்புலன்ஸ் படகுக்கு உரியது. புதிய பாலம் அமைத்து விட்தால் அதில் எமது ஊருக்கு வந்தோர், குடியேறியோர் என பலரது படகுகள் வரிசையாய் அணிவகுத்து துறைமுகத்தை அலங்கரித்து நிற்கின்றன. அதனால் ஏற்படும் அசௌகரியத்தை எம்மால் தான் கண்டு கொள்ளமுடியும். பயணிகள் படகு சேவை செய் யும் படகுகள் துறைமுகத்தை அடையும்போது அலங்கரித்து நிற்கும் தனியார் படகுகள் இடம் கொடுப்பதில்லை. வழி விடுவதில்லை.

இருப்பினும் ஏதோ ஊருக்கு வந்து விட்டோம், கரைசேர்ந்துவிட்டோம் என்ற நம்பிக்கையில் தடை தாண்டி துறைமுகத்தை எட்டிப் பிடித்து ஊருக்குள் நுழைகிறோம். இத்தனைக்கும் எம்மூரவரின் துணிச்சல் தான் முன்னோக்கி நிற்கிறது. துறைமுகத்தை அலங்கரித்து நிற்கும் எம்மவர்களது படகுகளில் பெரும்பாலானவை பயணிகள் சேவை செய்வதில்லை, எப்போதாவது இருந்து விட்டு வாடகைச் சேவை செய்வதுடன் தனிப்பட்ட சேவையும் தான் இடம்பெறு கின்றது.

இந்த நிலையில் நாளாந்தம் சேவையில் ஈடுபடும் வடதாரகை, குமுதினி மற்றும் பல நோ.கூ.சங் கப்படகுகள் தீவை அடையும்போதும் அங்கே பாலத்தை அலங்கரித்து (ஆக்கிரமித்து) நிற்கும் படகுகளை விட்டு எட்ட நின்றே தான் கடல் தாண் டிச் சுமந்து வந்த பயணிகளைத் தரை இறக்க முடி யும். இதிலே இறங்கும் பயணிகளில் முதியோர், கர்ப்பிணிகள், அங்கவீனர்கள் என அனை வருமே தமது உடைமைகளைத் தூக்கியவாறு இரண்டு அல்லது மூன்று படகுகளைத் தாண்டிக் கடந்து தான் தாய்நிலத்தை எட்ட முடியும்.

இத்தனைக்கும் நகைப்பான விடயம் கடற்படை துறைமுகத்தை ஆக்கிரமித்து நிற்பதால் பய ணிகள் சேவை கடினம் என்பது தான். எம்மூரவர் படகுகள் துறைமுகத்தை ஆக்கிரமித்து இடம் விடாமல் நிற்பதையோ அன்றி அவர்களை எதிர்த்துப் பேசுவதையோ விட்டு விட்டு பழிசுமத் தும் நிலைதான் தொடர்கிறது.

துறைமுகப்பகுதியை ஆக்கிரமித்து நிற்கும் நெடுந்தீவு மக்களது படகுகளின் உரிமை யாளர்கள் கொஞ்சம், சிந்தித்து உணர்ந்து செயற் பட வேண்டும்.

இந்தப் படகுகள் சேவையாற்றி முடிந்தவுடன் பாலத்தை விட்டு விலக்கி நங்கூரமிட்டு தரித்தி ருப்பதற்கான வழிகளைக் கைக்கொள்ளலாம். இதனைச் செய்வதற்கேற்றவாறு துறைமுகப் பகுதியும் இன்று ஆழமாக்கப்பட்டுள்ளது. எனவே அன்பான படகு உரிமையாளர்களின் கையில் தான் துறைமுகப் பாவனை உள்ளது.

இதனை கருத்திற் கொண்டு எம்மூர் படகு உரிமை யாளர்களும். அதன் சங்கப் பிரதிநிதிகளும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வந்தால் மட்டுமே துறைமுகம் சீராகும், படகுகள் வரும் வேளைகளில் பயணிகள் சீராக இறங்கிச் செல்லமுடியும்

இதனைக் கருத்திற் கொண்டு சகல படகு உரி மையாளர்களும் ஒத்துழைக்க வேண்டும். ஒத்துழைப்பார்களா? எம்மை முதலில் நாமே திருத்துவோம். பின்னர் மற்றவற்றைப் பார்ப் போம்.

திருத்தி அமைதிக்கு அடிகோலும்

எமக்குத் தரப்படுகின்ற வாழ்வும் வசதியும் இறைவனின் அன்புக்கொடையாகும். மாட மாளிகையும் உண்டு. சேரிக்குடிசையும் உண்டு. எதுவானாலும் வாழ்வைச் சுவை யாக்குவது உள்ளதைக்கொண்டு திருப் திப்படுவதாகும். எமது நிலைக்கு மேல் உள்ளவர்களுடன் ஒப் பிட்டுப் பார்க்காது எம் மிலும்கீழேஉள்ளோரை எண்ணிப்பார்த்து அங் கலாய்ப்பு ஏக்கங் களைத்தவிர்த்துதிருப்தி யான மன்பாங்கை வளர்த்துச்கொள்வோம். வாழ்வில் ஆசைகளை வளர்த்துக் கொள்வதி லும் பார்க்க திருப்தியு டன் கூடிய விடாமுயற் சியும் நேர்மையுமே என்றும் உயர்வுக்கு வழிவகுக்கும் ஏணிப்படிகளாகும். எவ ரெவர்க்கு எவ்வகை வளங்களை எந்த நேரத்தில் வழங்க வேண்டுமென்பது இறை வனால் தீர்மானிக்கப்படுவதாகும்.

ஏனெனில் பறவைகள், காட்டுச் செடிகளைப் பாருங்கள் அவை விதைப்பதுமில்லை அறுப்பதுமில்லை சேர்த்து வைப்பது மில்லை - நூல்நூற்பதுமில்லை. ஆனால் அவற்றுக்கெல்லாம் கடவுள் உணவும், அழகும், வாழ்வும் வழங்கிக் காக்கின்றா ரென்றால் தமது சாய லான மனிதனை எந்த விதம் அணி செய்வா ரென்பதை சிந்திப்போம். உலகியல் இன்பங்கள், ஆசைகள், கவலைகளில் மூழ்குவதை விடுத்து நேர்மை, நம்பிக்கை, தூயஉள்ளத்துடன் இறை வனைத் தேடும்போது சகலதும் எம்மை நாடி வரும். திருப்தி கொள்ளும் உள்ளம் அமைதி வாழ்வைச் சுவைக்கும். அனைத்தையும் பகிர்ந்து வாழும். அதுவே இறைவனின் கோயில்.

எஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை.

வில்லங்கமாகியுள்ள வீட்டுத் திட்டம்

வடக்கு - கிழக்கில் 65 ஆயிரம் வீடுகளை அமைக்கும் மீள்குடியேற்ற அமைச்சின் வீட்டுத் திட்டம் சர்ச் சைக்குள்ளாகியுள்ளது. ஒரு லோக வீடுகளாக இவற்றை அமைக்க முயற்சிப்பதும், ஒரு வீட்டுக்கு 21 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டதுமே சர்ச்சைக்குத்தூபமிட்டுள்ளது. வடக்கு அரசியல் தரப்பினர், தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், - வடக்கு மாகாண முதலமைச்சர் உள்ளிட்டோர், உலோகத்தில் அமைக்கப்படும் வீட்டினை எதிர்க்கின்றனர். ஆனால் இந்த வீட்டுத் திட்டத்தை எதிர்க்கவில்லை. வீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இந்தப் பெறுமதியில் இரண்டு அல்லது மூன்று வீடுகள் எமது பாரம்பரிய முறையில் அமைக்கப்பட வேண்டும் என்பது அவர்களது வாதம்.

ஆனால் மீள்குடியேற்ற அமைச்சு, குறிப்பாக அதன் அமைச்சர் சுவாமிநாதன், உலோக வீடுகளே பொருத்த மானது என்கின்றார். எதிர்கால நோக்கில் சிந்தித்து இது அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றார். நாம் பழமை பேசிக் கொண்டிருக்காது, கால ஓட் டத்தில் - நவீன யுகத்திற்கு ஏற்றவாறு மாற வேண்டும் என்கின்றார் அமைச்சர்.

அமைச்சர் சுவாமிநாதனும், முதலமைச்சர் விக் னேஸ்வரனும், ஜனாதிபதி மைத்திரிபால முன் னிலையில் வீட்டுக்காக விவாதம் நடத்தினர். இதற் குப் பதிலளித்த ஜனாதிபதி மைத்திரிபால, இந்த வீட் டில் நாங்கள் யாரும் வாழப் போவதில்லை. மக்களே வாழப் போகின்றனர். அவர்களே முடிவெடுக்க வேண் டும் என்று தெரிவித்து இருக்கின்றார்.

மக்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு வீடு என்பது தேவையாக இருக்கின்றது. அதுவும் ஒரு பிராயில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி உலோ வீட் டைப் பார்த்தால், அதனை வேண்டாம் என்று எவ ருமே சொல்ல மாட்டார்கள். அந்தவகைக்கு வெளிப் பார்வைக்கு அழகாக இருக்கின்றது. ஆனால் இதைப் போன்று ஏனைய வீடுகளும் அமைக்கப்படுமா? இந்த வீட்டின் ஆயுள் காலம் எவ்வளவு? வீட்டில் தீ பரவின்ற அனர்த்தம் ஏற்பட்டால் என்ன நிலைமை? வீட்டுக்கு வழங்கப்படும் வை-பை இணைப்புக்கான கட்டணமும், காஸ் சிலிண்டரும் தொடர்ந்தும் வழங் கப்படுமா? வீட்டுக்கு வழங்கப்பட்ட ஆயுள் காலத்தி னுள் வீடு சேதமடைந்தால் மீளவும் புனரமைத்துக் கொடுக்கப்படுமா? என்று பல்வேறு கேள்விகளுக்குப் பதில் தெரியாமல் இருக்கின்றது. மக்கள் நீர்மானிக் கட்டும் என்று ஜனாதிபதி மைத்திரி தெரிவித்தி ருந்தாலும், மக்களுக்கு முதலில் இந்த வீடு தொடர்பில் பூரண அறிவைக் கொடுக்க வேண்டும். அதை விடுத்து, அரசியல் தரப்பினர் எதிர்க்கின்றனர் என்பதற்காக, மீள்குடியேற்ற அமைச்சு இந்த வீட்டுத் திட்டம் தொடர்பில் விளம்பரப்படுத்தி, ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படுவது பொருத்த மானது அல்ல.

மக்களுக்கு இந்த வீட்டின் நன்மை - தீமைகள் தெரியப்படுத்தப்பட வேண்டும். அதன் பின்னர் வீடில்லாத எத்தனை பேர் இந்த வீட் டை விரும்புகின்றனரோ அவர்களுக்கு இதனைக் கொடுக்கலாம். அப்போது பிரச்சினை எழுவதற்கான வாய்ப்புக்கள் குறைவு.

வீடுகள் இல்லாது தவிக்கும் மக்களுக்கு நிரந்தர வீடு அவசியம். வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தி னுள் வீடுகள் முழுவதும் தரைமட்டமாக்கப்பட்டுள் ளன. எனவே அந்தப் பிரதேசம் விடுவிக்கப்படும் போது அங்கே குடியமர்வதற்கு வீடுகள் உடனடியாக தேவை. இந்த வீட்டுத் திட்டத்தைப் புறக்கணிக்க முடியாது. வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தாமலும் விட முடியாது.

இவை எல்லாவற்றையும் விட, மீள்குடியேற்ற அமைச்சு தனது அமைச்சின் நிதியில் யாழ்ப்பாணத்தில் 3 ஆயிரம் வீடுகள் அமைக்கின்றது. ஒவ்வொரு வீடும் 8 லட்சம் ரூபா செலவில் கட்டப்படுகின்றது. - ஒரே அமைச்சு இரண்டு தரத்தில் ஒரே மக்களுக்கு வீடுகள் அமைப்பது நியாயமா? மக்களிடையே இது பாகு பாட்டை உருவாக்காதா? எனவே மீள்குடியேற்ற அமைச்சு இந்த விடயங்களை விவாதத்தை விடுத்து கருத்தில் உள்ளெடுத்து, வடக்கு - கிழக்கில் வீடிழந்தி ருக்கின்ற அனைத்து மக்களுக்கும் வீட்டுத் தேவை யைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வார உங்களுக்கு எப்படி?

மேடம்: சிரமம் குறுக்கிட்டாலும் சமாளித்து விடுவீர்கள். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் சிக்கனம் மூலம் சேமிப்பீர்.

இடபம்: உறவினர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். நிலுவைப் பணம் கிடைக்கும். எதிரியால் உருவான தொல்லை விலகும்.

மிதுனம்: உங்கள் நற்செயலை நண்பர் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் படிப்படியாக உயரும். பெண்கள் புத்தாடை நகை வாங்க யோகம் உண்டு. மாணவர்கள் பெற்றோருக்குப் பெருமை சேர்ப்பர்.

கடகம்: நல்லவர்களின் நட்புக் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் முதலீட்டை அதிகப்படுத்தி ஆதாயம் காண்பீர்கள். உபரி வருமானம் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

சிங்கம்: பிறருக்காக வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் மிதமாக இருக்கும். குடும்பச் செலவுக்காக பணக்கடன் பெறுவீர்கள். உடல்நலத்துக்குச் சிகிச்சை தேவைப்படலாம்.

கன்னி: வழக்கத்துக்கு மாறான பணி செய்ய நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் நிர்வாக சீர்திருத்தம் செய்வீர்கள். பணியாளர்கள், வெளியூர் பயணம் செல்ல நேரிடும். பெண்கள் ஆடம்பர நாட்டம் கொள்வர்.

துலாம்: சிறிய முயற்சியும் அதிக நன்மைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புக் கிடைக்கும். வருமானம் திருப்திகரமாகும். வீட்டுத் தேவை தாராள செலவில் நிறைவேற்றுவீர்கள்.

விருச்சிகம்: உறவினர் உங்கள் மீது நல்லெண்ணம் கொள்வர். தொழில், வியாபாரத்தில் விற்பனை அதிகரிப்பால் இலாபம் உயரும். பிள்ளைகள் வாழ்வில் முன்னேற்றம் உண்டாகும். குடும்ப ஒற்றுமை சிறக்கும்.

தனுசு: பொறுமையுடன் செயற்பட்டால் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சீராகும். பணியாளர்கள், புதிய தொழில் நுட்பங்களை அறிந்து கொள்வர். மதிப்பு மிக்க பொருள்களின் பாதுகாப்பில் கவனம் தேவை.

மகரம்: உங்களின் எதார்த்த பேச்சால் சிரமம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் இலக்கை அடைய கடினமாக உழைப்பீர்கள். வருமானம் சீராக இருக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.

கும்பம்: தாமதமான பணிகளில் முன்னேற்றம் உண்டாகும். தொழில் அபிவிருத்திக்கான மூலதனம் கிடைக்கும். உறவினர் இல்ல நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். பெண்கள் ஆடை ஆபரணம் வாங்க யோகம் உண்டு.

மீனம்: சுற்றுப்புற சூழ்நிலை அதிருப்தி அளிக்கலாம். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப முன்னேற்றம் உண்டாகும். புத்திரரைக் கண்டிப்பதில் நிதான அணுகுமுறை நல்லது.

லட்சுமி மேனனுக்காக காத்திருப்பு

இயக்குநர் பாண்டிராஜுக்கு பெரிய வெற்றி யாக அமைந்த படம் "கேடி பில்லா கில்லாடி ரங்கா". பாண்டிராஜுக்கு மட்டுமின்றி அந்தப் படத்தில் நடித்த சிவகார்த்திகேயன், விமல், பிந்துமாதவி, ரெஜினா என்று அத்தனை பேரின் தரத்தையும் ஒரே நாளில் உயர்த்தியது இந்தப் படம். இதன் இரண்டாம் பாகத்தை எடுக்க பாண்டிராஜ் தயார் செய்து வருவதாக ஒரு தகவல். இதில் ஜி.வி.பிரகாஷ் ஹீரோவாக நடிக்கிறாராம். இன்னும் பாண்டிராஜ் தரப்பு இந்தத் தகவலை உறுதி செய்யவில்லை. ஹீரோயினாக லட்சுமி மேனனிடம் கேட்டிருப்பதாகவும், எனினும் லட்சுமி தயங்குவதாகவும் மேலும் தகவல்கள் கசிகின்றன.

சுடோக்கு

எண் விளையாட்டு

4	2	6						
	1		9	8				
				1			6	
		5						1
	6		4		5		8	
9						3		
	7			6				
				3	2	6	1	
						9	2	5

நேற்றைய சுடோக்கின் விடை

5	6	4	2	7	1	3	8	9
8	2	7	9	3	5	6	1	4
9	3	1	6	8	4	5	2	7
3	5	6	7	4	2	8	9	1
2	4	9	1	6	8	7	5	3
1	7	8	5	9	3	4	6	2
6	1	2	3	5	7	9	4	8
4	9	3	8	2	6	1	7	5
7	8	5	4	1	9	2	3	6

சுடோக்குஒருஎண்விளையாட்டுதர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை.1–9வரையானஎண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்தவேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவேநிரப்பப்பட்டிருக்கும்.தர்க்கரீதியில்ஏனையவற்றைநிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானிய சொல். அதன் பொருள் தனி எண் என்பதா கும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

சட்டையின் பட்டன்கள்
எண்ணிக்கை குறையும்
போது
ஆண் பொறுக்கி என்ற
பெயரையும்.....

பெண் மாடர்ன் கேர்ள் என்ற
பெயரையும்
பெறுகின்றனர்.

பெண் : நீ எந்த மாதிரி பொண்ணைக் கல்யாணம் பண்ணனும் என்று நினைக்கிறே?
ஆண்: நிலா மாதிரிப் பொண்ணை.
பெண்: ஒஓஓ... உனக்கு நிலா மாதிரி அழகான பொண்ணு தான் வேணுமா?
ஆண்: நான் அழக சொல்லல... அவ நிலா மாதிரி இராத்திரில மட்டும் வரணும். பகல்ல எங்கயாவது தொலைஞ்சு போயிற ணும். எனக்கு பகல்ல நிம்மதி வேணும்.
பெண் : அடப்பாவி..!!!!

நாட்டை விட்டு ஓடிய ரூ.9000 கோடி கடனாளி விஜய் மல்லையா நாடாளுமன்றத்தில் அனல்
தஞ்சையில் டிராக்டர் கடன் கட்ட தாமதம்... விவசாயியை அடித்து இழுத்துச் சென்ற போலிஸ்

விடுப்பா விடுப்பா தொழிலதிபர்ன்னா
ஊரை விட்டுட்டு ஓடுறதும்
ஏழைன்னா இழுத்துட்டு போகுறதும் சகஜம்தானப்பா...

அப்பிள் கீழ விழுந்ததுக்கு நியூட்டன விட அதிகம் சிந்திக்க வேண்டியிருக்கு

"டிஸ்ப்ளே போயிருக்குமோ"

இமையரசன் Retweeted
மஹி...✨✨✨ @IAM_mahi1 · 18h
நாம் உதாசீனம் படுத்தும் பொருட்களையே மண்மீது வீசுகிறோம் பதிலுக்கு மண் நமக்கு உபயோகமானதை மட்டுமே விளைவிக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது புதுசு

காதணிகள்

பெரிய காதணிகள் அறிமுகமாகியுள்ளன. தொங்கட்டான்கள் இல்லாமல் அடர்ந்த கல் வேலைப்பாடுகளுடன் இவை அறிமுகமாகியுள்ளன. இவ்வாறான காதணிகளை அணியும் போது கழுத்துக்கான அணிகலன்கள் தேவையில்லை. இவற்றின் விலை 350 தொடக்கம் 400 ரூபா ஆகும்.

சமையல் குறிப்புகள்

- காளான்களை அலுமினியம் பாத்திரங்களில் சமைக்கக் கூடாது. ஏனென்றால் அவை பாத்திரத்தைக் கருமையாக மாற்றி விடும்.
- தோல் உரித்த உருளைக் கிழங்குகளைக் கெடாமல் வைப்பதற்கு சில துளிகள் வினிகரை அதில் தெளித்து வைக்கலாம்.
- எப்போதும் வெங்காயம் நறுக்கினால் கண்களிலிருந்து கண்ணீர் வரும். வெங்காயத்தை பாதியாக நறுக்கி நீரில் போட்டுவிட்டு பின்னர் நறுக்குங்கள். அழுகை குறையும்.
- கீரை சமைத்து இறக்கி வைத்த பின்பு உப்பு போடுதல் நலம். உப்பு, கீரையில் கரையும் பொழுது உண்டாகும் சில இரசாயன மாற்றங்களைத் தவிர்க்கலாம்.
- இட்லிக்கு ஊற்றிக் கொள்ள நல்லெண்ணெயை இலேசாகக் காய்ச்சி சிறிது கடுகு, பெருங்காயம் தாளித்து உபயோகப்படுத்தினால் இன்னும் இரண்டு இட்லி விருப்பமுடன் சாப்பிடத் தோன்றும்.
- சுவையான, மணமான வெங்காய அடை செய்வதற்கு, வெங்காய அடை செய்யும் போது, சீன்ன வெங்காயத்தைப் பொடியாக நறுக்கி, ஒரு கரண்டி எண்ணெய் விட்டு, வதக்கி, மாவில் கலந்து அடை செய்தால், கம்மென்று மணம் மூக்கைத் துளைக்கும்.

நாளை
பங்குனி -02
செவ்வாய்க்கிழமை
15.03.2016
திதி: ஸப்தமி
பி.ப.05.02 வரை
நட்சத்திரம்: ரோகினி
பி.ப.01.42 வரை
ராகுகாலம்:
03.20-04.50 வரை
சுபநேரம்:
10.50-12.20 வரை

நேற்றைய கடலுணவு

விலை நிலைவரம்

	பாழ்ப்பாணம்	மன்னார்	கிளிநொச்சி	கொழுகாமம்	மருத்தித்துறை	சாவகச்சேரி	மாதகல்
இறால்	600	600	600	700	700	600	650
நண்டு	250	400	300	400	400	200	–
கணவாய்	550	500	500	500	600	300	–
பாரை	550	500	500	600	500	600	450
சுறா	550	600	600	800	650	–	–
சீலா	250	450	400	450	450	500	350
விளை	600	450	400	500	450	400	400
முரல்	300	350	350	400	300	400	350
கும்பிளா	400	350	300	400	450	600	350
கிளாக்கன்	500	800	–	–	500	–	–
ஓரா	400	400	–	–	450	400	–
திரளி	250	300	200	200	300	200	250
நகரை	200	300	–	250	350	–	350
சூடை	150	200	100	200	200	100	–
ஒட்டி	250	250	150	250	200	–	200
திருக்கை	150	400	200	400	300	200	250
மதனம்	150	250	180	300	2500	300	200
கொய்	100	150	60	100	120	50	–
பாலை	350	200	250	350	400	400	–
வாழை	100	150	200	400	300	300	–

நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

முள்ளங்கி	30	40	40	40	40	40	20	30
கத்தரி	100	80	90–120	100	80	100	90	60
கரட்	100	120	80–140	100	120	160	120	130
மரவள்ளி	60	50	40	40	40	60	35	40
பயிற்றை	80	80	60	60	60	60	40	80
பாகல்	200	120	80	120	120	120	120	100
கருணைக்கிழங்கு	70	80	80	60	60	120	50	50
பெ.வெங்காயம்	70	80	80	80	70	80	65	60
சி.வெங்காயம்	50	60	50	60	60	90	70	60
பூசணி	60	40	40	50	40	60	35	40
தக்காளி	30	40	30	50	30	40	25	25
வாழைக்காய்	60	50	40	50	40	40	35	30
கீரை	40	50	30	20	30	30	15	20
பொன்னாங்காணி	30	40	30	35	20	30	20	10
பச்சை மிளகாய்	140	160	160	140	120	200	150	160
புடோல்	50	60	50	40	50	60	30	60
கோவா	50	60	50	40	40	60	30	45
வெண்டி	60	50	50	60	80	80	65	60
போஞ்சி	100	120	80	140	120	120	40	100
லீக்ஸ்	100	120	100	140	120	160	80	100
தேங்காய்	50	40	50	40–50	40	40	20–40	30
உருளைக்கிழங்கு	80	80	80	80	70	80	65	120
தேசிக்காய்	150	160	100	60	60	40	100	80
வல்லாரை	20	20	10	20	15	20	20	08
கறிமிளகாய்	100	120	100	120	140	160	100	100
இராசவள்ளி	150	140	140	120	140	140	100	80
முருங்கைக்காய்	400	400	300	250	400	400	300	250
பனங்கிழங்கு	05	02,50	05	02	05	–	03	03

பொட்டுக்கடலை வடை

செய்யும் முறை:
பொட்டுக்கடலையை மிக்ஸியில் பொடி செய்து கொள்ளுங்கள். அதனுடன் அரிசி மா, பொடியாக நறுக்கிய மிளகாய், வெங்காயம், உப்புச் சேர்த்து தேவையான தண்ணீரும் சேர்த்து நன்கு பிசைந்து சிறு வடைகளாகத் தட்டி, சூடான எண்ணெயில் பொரித்தெடுங்கள்.
சில நிமிடங்களிலேயே தயாரிக்கக் கூடிய துரித வடை இதுதான்.

தேவையானவை:
பொட்டுக்கடலை – 1 கப்
பச்சரிசி மா – 1 தேக்கரண்டி
பெரிய வெங்காயம் – 1
பச்சை மிளகாய் – 2
பெருங்காயம் – அரைத் தேக்கரண்டி
உப்பு – ருசிக்கேற்ப
எண்ணெய் – தேவையான அளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடெங்கிலும் வசிக்கும் பெண்களின் பெறுமதியை கொண்டாடும் வெல்வெட்

நாட்டின் முதல் தர அழகுசாதன சவர்க்கார மானது மங்கையின் மகத்துவம் என்ற நிகழ்ச்சியை நாடளாவிய ரீதியில் ஆரம் பித்துள்ளது

இலங்கையின் முன்னணி அழகுசாதான சவர்க்கரமான வெல்வெட், உங்களுடைய வாழ்க்கையில் உள்ள பெண்களைக் கொண் டாடுவதற்கும், அர்ப்பணிப்பதற்குமான சந் தர்ப்பத்தை தற்போது வழங்குகின்றது.

பெண் ஒருவரின் மென்மையான பக்கமானது அவரது நாளாந்த செயற்பாடுகளில் பிரதிபலிக்கின்றது. ஒரு தாயாக, ஒரு மனைவியாக, ஒரு மகளாக, ஒரு சகோதரி யாக மற்றும் ஒரு நண்பியாக அவர் தமது வாழ்க்கையை கனிவு, அன்பு மற்றும் இரக்கத்துடன் முன்னெடுக் கின்றார். வெல்வெட்டின் நறுமணமிக்க சவர்க்காரங்கள், மென்மையான சருமத்தை தருவதுடன், உங்களின் அழகை வெளிக்கொணருகின்றது. அதேவேளை பெண்களைக் கொண்டாடுகின்றது. பெரும்பாலும் கவனிக்கப்படாத இலங்கையெங்கிலும் உள்ள பெரும் எண்ணிக்கையிலான பெண்களின் அன்பையும், அர்ப் பணிப்பையும் வெளிக்கொண்டு வரும் மங்கையின் மகத்துவம் என்ற நிகழ்ச்சியை வெல்வெட் அறி முகப்படுத்துகின்றது.

சர்வதேச மகளிர் தினத்தின்போது ஆரம்பித்த இந்த நிகழ்ச்சி மார்ச் 14ஆம் திகதி வரை நடைபெறும். தமது வாழ்வில் பெண்கள் மீதான அங்கீகாரம் மற்றும் போற்று தலை தெரிவிப்பதற்கான சந்தர்ப்பத்தை இலங்கை முழுவதிலும் உள்ள மக்களுக்கு அது வழங்குகின்றது. மேல் மாகாணம், கிழக்கு மாகாணம் மற்றும் தெற்கு மாகாணங்களின் 42 நகரங்களுக்குப் பயணம் செய் யும்வெல்வெட் அணியானது, உயிர்ப்பூட்டும்பெண்களின் மென்மையான வாழ்க்கையைக் கொண்டாடுகின்றது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கு, நீங்கள் செய்ய வேண்டியது 9,900 என்ற ஹொட்லைனுக்கு அழைத்து அல்லது வெல்வெட் பேஸ்புக் பகுதியில் இணைந்து உங்களுடைய வாழ்க்கையில் அன்பான, கனிவான, சிந்தனை மிகு, சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தியவிடேபெண்மணிகுறித்தகதையை பகிர்ந்து கொள்ளுங்கள். எழுமாறாக 100 கதைகள் தெரிவு செய்யப்பட்டு பணப்பரிசில் களும், பரிசுகளும் வழங்கப்படும்.

இந்த கதைகள் தேசிய வானொலியில் ஒலிபரப்பப்படும், தொலைக்காட்சில் காட் சிப்படுத்தப்படும். பத்திரிகைகளில் அடுத்து வரும் வாரங்களில் அச்சிடப்படும்.

இளமையான சருமத்துக்கு ரோஜா, மாதுளை, போசாக் கான சருமத்துக்கு பால் மற்றும் பாதாம், பளபளப்பான சருமத்துக்கு சந்தனம் மற்றும் மரமஞ்சல் போன்ற நறு மணங்கள் உள்ளடங்கலாக பல வகைகளில் வெல் வெட் சவர்க்காரங்கள் கிடைக்கின்றன. வேம்பு மற்றும் கற்றாழை என்பன பொலிவான சருமத்துக்கும், நீலத் தாமரை மற்றும் லாவெண்டர் என்பன பிரகாசிக்கும் சருமத்துக்கும், நீர் அல்லி மற்றும் கடல் தாவரங்கள் புத்துணர்ச்சியான சருமத்துக்கும், தேனும், யோகர்ட்டும் ஈரப்பதமான சருமத்துக்கும் கிடைக்கின்றது.

இந்த நிகழ்வு குறித்து கருத்து தெரிவித்த வெல்வட் இன் சிரேஷ்ட வர்த்தக நாம முகாமையாளர் அனுஸ்கா சபா நாயகம் அவர்கள், வாழ்க்கையின் அனைத்து நிலைகளி லும் தமது அன்புக்குரியவர்களின் வாழ்க்கையில் மாற் றத்தைஏற்படுத்திவரும் இலங்கைப்பெண்களைக்கொண் டாடும் இந்த நிகழ்ச்சியை ஆரம்பிப்பதில் நாம் பெருமை கொள்கின்றோம். நாடெங்கிலும் உள்ளூர் நுகர்வோரின் இதயங்களை வெல்வெட் சவர்க்காரங்கள் வென்றுள்ளன. வெல்வெட் உற்பத்திகளுடன் தமது தொடர்பை வலுப் படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை இந்த முயற்சி வழங்கும் என நாம் நம்புகின்றோம். எமது நாட்டின் பெண்களுக்கு மீண்டும் வழங்குவதற்கான சந்தர்ப் பத்தை இந்த முயற்சி வழங்கும் என நாம் நம்புகின் றோம். அத்துடன், குடும்பங்களுக்கு, சக ஊழியர் களுக்கு, அயலவர்களுக்கு மற்றும் நண்பர்களுக்கு அவர்களது அன்புக்கான வெகுமதியாகவும் அது அமையும் -என்றார். (த)

லிட்ரோ காஸ் முன்னெடுத்திருந்த லைவ் குக் ஓவ்

மாபெரும் தேசிய திரவ பெற்றோலிய வாயு இறக்குமதி யாளரான லிட்ரோ காஸ், (Live Cooking Competition) எனும் போட்டியை அண்மையில் ஏற்பாடு செய்தி ருந்தது. அதிகளவு மகிழ்ச்சி, களிப்பு நிறைந்த சமையல் கலை போட்டியில் இலங்கையின் மிஸ் ரூறிசம் சிறிலங்கா இன்ரநஷனல் அழகுராணி போட்டியில் பங்குபற்றிய 20 போட்டியாளர்கள் பங்கேற்றிருந்தனர். இலங்கை சமையல்கலை நிபுணர்களின் சம்மேள னத்துடன் இணைந்து இந்த போட்டி முன்னெடுக் கப்பட்டிருந்தது.

பெப்ரவரி 15 ஆம் திகதி கொழும்பு ஹில்டன் ஹோட்ட லில் நடைபெற்ற இந்தப் போட்டியில், நாட்டின் அதிகளவு அனுபவம் வாய்ந்த சமையல் கலை நிபுணர்கள் பலர் பங்கேற் றிருந்தனர். இந்த அழகுராணி கள் ஐந்து அணிகளில் ஏ, பி, சி, டி மற்றும் ஈ என பிரிக்கப்பட்டிருந்த னர். இவர்களுக்கு உணவுக்கு முன்னரான சிற்றுணவு மற்றும் பிரதான உணவு ஆகியவற்றை தயாரித்துக் கொள்வதற்கு போதி யளவு சேர்மானங்கள் வழங் கப்பட்டிருந்தன. இந்த சமையல்கலை செயற்பாட்டுக் கான தீச்சுவாலையை லிட்ரோ வழங்கியிருந்தது. சிறந்த சமையல்கலை நிபுணர்களுக்கு சிறந்த எரிபொருள் அவசியமாகும்.

சி அணியில் மிஸ் லக்சம்பேர்க், மிஸ் மலேசியா, மிஸ் நெதர்லாந்து மற்றும் மிஸ் பிலிப்பின்ஸ் ஆகியோர் உள்ளடங்கியிருந்தனர். இந்த அணி வெற்றியாளராக தெரிவாகியிருந்தது. இவர்களின் சுவை நிறைந்த ஸ்பைஸி சிக்கன் என்பது அதிகளவானோரின் தெரி வாக அமைந்தி ருந்ததுடன், பஸ்டா மற்றும் சலாட் வகைகளும் கவ னத்தை ஈர்த்தி ருந்தன. ஆஸ்திரே லியா, பெல்ஜியம், சீனா, டென்மார்க், இந்தியா, இத் தாலி, ஜப்பான், லிதுவேனியா, லக்சம்பேர்க், மலேசியா, நெதர்லாந்து, பிலிப்பின்ஸ், போலந்து, ரஷ்ய குடியரசு, சிங்கப்பூர், இலங்கை, சுவீடன், தாய்லாந்து, பிரித் தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த அழகிகள் சமையல் செயற்பாட்டை மட்டும் முன்னெடுக் காமல், இந்த செயற்பாட்டை முன்னெடுக்கும் போது பாடல் மற்றும் ஆடல் செயற்பாடுகளையும் முன் னெடுத்திருந்தனர்.

லிட்ரோ காஸ் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பணிப் பாளர் சமிந்த எதிரிவிக்ரம கருத்து தெரிவிக்கையில், வெவ்வேறு நாடுகளைச்சேர்ந்த அழகு ராணிகளுக்காக சமையல்கலை போட்டி ஒன்றை ஏற்பாடு செய்தமைக் காக நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். மகிழ்ச்சி, களிப்பு மற்றும் ஈடுபாடு ஆகியன சிறப்பாக அமைந்தி ருந்ததுடன், பங்குபற்றிய அனைவரின் முகங்களிலும் புன்முறுவலை ஏற்படுத்தியிருந்தது. லிட்ரோ உடன் சமையல் செயற்பாட்டை முன்னெடுத்திருந்தமையானது மறக்கமுடியாத அனுபவமாக அமைந்திருந்தது- என்றார்.

மிஸ் பிரித்தானியாவான லோரா ஜேன் கிரெகரி கருத்து தெரிவிக்கையில், நான்கு பேரைக் கொண்ட அணிகளில் நாம் போட்டியிட்டிருந்தோம். அனைவருக்கும் ஒரே மாதிரியான சேர்மானங்கள் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறான உணவுகளை தயாரிக்க முடியும் என்பதை பற்றி நாம் யோசித்தோம். ஒவ் வொரு அணியும் வெவ்வேறு வகையான உணவை தயா ரிக்க ஆரம்பித்தது. ஒவ்வொரு வருடனும் கலந்துரையாடி திட்ட மிடுவதற்கு சிறிது காலம் சென் றது. எமக்கு வழங்கப்பட்டிருந்த ஒவ்வொரு சேர்மானமும் மிகவும் சவால் நிறைந்ததாக அமைந்திருந்தது. ஏனெனில், நாம் உணவுக்கு முன்னரான ஆரம்ப சிற் றுணவையும், பிரதான உணவையும் மட்டுமே தயாரித் திருந்தோம். அணியாக நாம் இந்த உணவு தயாரிப்பின் போது அதிகளவு மகிழ்ச்சியை அனு பவித்தோம். ஒரு வரை ஒருவர் நன்றாக அறிந்து கொள்ள முடிந்தது -என்றார்.

மிஸ் லிதுவேனியா என்றிகா ட்ரெப்குடே எலிலின்ஸ்கீன் கருத்து தெரிவிக்கையில், நாம் நன்றாக மகிழ்ச்சியடைந் திருந்ததுடன், வெவ்வேறு நாடுகளிலிருந்து நாம் பங் கேற்ற போதிலும், சிறந்த நண்பர்களானோம். சமையல் தொடர்பில் நாம் அதிகளவு மகிழ்ச்சியடைந் திருந்தோம் -என்றார்.

இலங்கையில் திரவ பெற்றோலிய வாயு விற்பனை யிலும் சந்தைப்படுத்தலிலும் சந்தை முன்னோடியாக லிட்ரோ காஸ் லங்கா லிமிட்டெட் செயற்படுகிறது. இணை நிறுவனமான லிட்ரோ காஸ் டேர்மினல் லங்கா பிரைவேட் லிமிட்டெட் உடன் இணைந்து தனது செயற் பாடுகளை முன்னெடுத்து வருகிறது. லிட்ரோ காஸ் வர்த்தக நாமத்தின உரிமையாண்மையை நிறுவனம் தன்னகத்தே கொண்டுள்ளதுடன், நாடு முழுவதையும் சேர்ந்த தனது 5,000 விற்பனை மையங்களின் மூலம் வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்கி வரு கிறது. பாதுகாப்பு நியமங்களைக் கடுமையாக பேணு வதற்காக லிட்ரோ காஸ் நன்மதிப்பைக் கொண்டுள்ளது. கம்பனியின் கொள்கையில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அங்கமாக கருதப்படுகிறது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்பம்

கைரேகை உணர்திறன் கொண்ட கைபேசி

ஜியோமி நிறுவனம் கைரேகை உணர்திறன் வசதியைக் கொண்டி ரெட்மி 3 தொடுதிரைக் கைபேசிகளை அறிமுகம் செய்துள்ளது.

கைபேசிச் சந்தையில் ஜியோமி நிறுவன தயாரிப்புகளுக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது.

அந்த வகையில் இந்த நிறுவனம் கைரேகை உணர்திறன் வசதி கொண்ட ரெட்மி 3 தொடு திரைக் கைபேசிகளை அறிமுகம் செய் துள்ளது.

5 அங்குல எச்டி திரையுடன், 720X1280 பிக் சல் தீர்மானம் கொண்டதுடன் அன்ரொய்ட் இயங்கு தளத்துடன் இயங்குகின்றது.

கலக்சி எஸ் 7க்கு அமோக வரவேற்பு

அப்பிள் நிறுவனத்துக்கு போட்டியாக சம்சுங் நிறுவனம் இரு புதிய ஸமார்ட் கைபேசிகளை அறிமுகம் செய்துள்ளது.

அவை சாம்சுங் கலக்சி எஸ் 7 மற்றும் எஸ் 7 எடெஜ் என்பனவாகும்.

சம்சுங் நிறுவனத்தால் முன்னர் அறிமுகம் செய்யப்பட்ட கலக்சி எஸ் 6 மற்றும் ஸ் 6 எடெஜ் கைபேசிகனை விடவும் இப் புதிய கைப்பேசிகளுக்கு ஐரோப்பிய நாடுகளில் சிறந்த வரவேற்பு காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை- இக் கைபேசிகள் அமெ ரிக்கா, தென்கொரியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள நிலையில் விரைவில் ஏனைய நாடுகளில் அறிமுகம் செய்யப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வணிகம்

குடாநாட்டில்

வருகை தந்திருந்தார்.

நேற்றுமுற்பகல்யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அமைச்சர் சாகல ரத்னாயக்க, யாழ். துரையப்பா விளையாட்டு அரங்குக்கு அருகில் அமைக்கப்படும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்துக்கான புதிய கட்டடத்தைப் பார்வையிட்டதுடன், யாழ்.மாவட்டப் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் அனைத்துப்பொலிஸ்நிலையபொறுப்பதிகாரிகளையும் சந்தித்து விசேட கலந்துரையாடலையும் நடத்தியுள்ளார்.

இதன்போது, யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலமாக அதிகரித்துள்ள போதைப் பொருள் கடத்தல்களை முறியடிப்பது, மற்றும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், குற்றச்செயல்கள் தொடர்பில் உடன் விசாரணைகளை மேற்கொண்டு, அவற்றில் ஈடுபடுபவர்களைக் கைது செய்து மக்களின் இயல்பு வாழ்வை பொலிஸார் உறுதிப்படுத்தவேண்டும்.

மேலும், பொதுமக்களுடன், பொலிஸார் நட்புறவை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது, தமக்கு மிகவும் பிடித்த மாவட்டம் யாழ்ப்பாணம் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது, மிகவிரைவில் யாழ்ப்பாணப் பொலிஸ்நிலையத்துக்கான புதிய கட்டடத்தை திறந்து வைப்பதற்கான பணிகளை முன்னெடுக்குமாறு, பொலிஸ்மா அதிபருக்குப் பணித்த அமைச்சர், குறித்த கட்டடத்தின் கட்டுமானப் பணியில் ஈடுபடும் நிறுவனத்தின் அதிகாரியையும் சந்தித்து, பணிகளை விரைவாகப் பூர்த்தி செய்யுமாறு குறிப்பிட்டார்.

மேலும், வடக்கு-கிழக்கில் அரசினால் முன்னெடுக்கப்படவுள்ள 65 ஆயிரம் வீட்டுத்திட்டத்தில் உரும்பிராயில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி வீட்டையும் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்க நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இதன்போது, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதனும் உடனிருந்தார்.

குறித்த வீட்டுத்திட்டத்தில் வீடொன்றை அமைப்பதற்கு 21 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதை மறுபரிசீலனை செய்வதற்கு, அமைச்சரவை உபகுழு அமைக்கப்பட்டுள்ள நிலையில் சட்டம் ஒழுங்கு அமைச்சர் நேற்றுக் குறித்த மாதிரி வீட்டை நேரில் சென்று பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-வ-4-5-10)

நாடு முழுவதும்

கூறுகையில்,

குறித்த மின் தடைப்பட்டதற்கு பியகம உபமின் நிலையத்தில் ஏற்பட்ட கோளாறே காரணம். அத்துடன் நுரைச்சோலை மின் விநியோக நிலையத்தின் 3 மின்பிறப்பாக்கிகள் பழுதடைந்துள்ளன.

குறித்த மின் பிறப்பாக்கிகள் திருத்தப்படும் வரை சீரான மின்விநியோகத்தை வழங்க முடியாது.

எனினும் கடந்த 3 வாரங்களுக்குள் இரண்டுதடவைகள் நாடுமுழுவதும் மின் தடை ஏற்படுவதற்கு நாசகாரவேலையெனச்சந்தேகிக்கின்றோம். எனினும் அதற்குரிய உறுதியான ஆதாரங்கள்கண்டறியப்படவில்லை.

இது போன்ற மின் தடை இனிவரும் காலங்களில் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

நேற்றுக் கொழும்பு மற்றும்கண்டிஆகியபிரதேசங்களுக்கான மின் விநி யோகம் நேற்று முன்னிரவு 7 மணிமுதல் வழமைக்குத் திரும்பின. எனினும் பின்னர் தடைப்பட்டதாக, தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இலங்கை மின்சார சபையின் தலைவர் அனுர விஜேபால தனது பதவியில் இருந்து விலகுவதற்குத் தீர்மானித்துள்ளார்.

ஆறு மாத காலப்பகுதிக்குள் மூன்று தடவைகள் நாடு முழுவதும் மின்சாரம் தடைப்பட்டமைக்கான பொறுப்பை ஏற்று, தமது பதவியிலிருந்து விலகுவதற்குத் தீர்மானித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடு முழுவதும் மின்சார விநியோகத்தை வழமைக்குக் கொண்டுவந்த பின்னர், தமது பதவி விலகல் கடிதத்தை விடயத்துக்குப்பொறுப்பான அமைச்சரிடம்கையளிக்க வுள்ளதாகவும் அனுர விஜேபால குறிப்பிட்டுள்ளார். (த-வ)

பேரணியில்

பேரணியில் பங்கேற்பவர்கள் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஏற்கனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

இந்த நிலையிலேயே, இந்தப் பேரணியில், மகிந்த ராஜபக்ச பங்கேற்றால், அவரைக் கட்சியில் இருந்து இடைநிறுத்த மைத்திரிபால சிறிசேன முடிவு செய்துள்ளார்.

இது தொடர்பாகத் தேவையான அறிவுறுத்தல்களை கட்சியின் பொதுச் செயலாளரான துமிந்த சில்வாவுக்கு, ஜனாதிபதி வழங்கியுள்ளார். அத்துடன், ஜனாதிபதியின் இந்த நடவடிக்கைக்கு, சந்திரிகா குமாரதுங்கவும் ஆதரவு தெரிவித்துள்ளார்.

(த-வ-5)

தங்கொட்டுவ

கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை, நீர்கொழும்பு, தங்கொட்டுவ பிரதேசத்தில், எரிந்த வான் ஒன்றிலிருந்து கருகிய நிலையில் 5 சடலங்கள் மீட்கப்பட்டிருந்தன. குறித்த சடலங்கள் அடையாளம் காண முடியாதவாறு எரிவடைந்திருந்தன. சம்பவ இடத்திலிருந்த கத்தி, கைபேசி என்பனவும் மீட்கப்பட்டிருந்தன. இந்தப் பயங்கரமான சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

ஆரம்பக் கட்டத் தகவல்களின் அடிப்படையில், பாதாள உலகக் கோஷ்டியினருக்கு இடையிலான மோதலில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கக் கூடும் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலதிக விசாரணைகளின்போது, கப்பம் பெறுதல் தொடர்பிலான முரண்பாடு காரணமாக இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையிலேயே, குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 5 பேரைப் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

(த-வ-5)

4 மாதக்

குற்றச்சாட்டில் அந்தத்தாயாரைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி, திருவையாறுப் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் தகவல் தருகையில்:-

கிளிநொச்சியிலுள்ள அரச திணைக் களத்தில் பணிபுரியும் குறித்த பெண், நான்கு மாதங்களுக்கு முன்பு ஆண் குழந்தை ஒன்றைப் பிரசவித்துள்ளார். குறித்த ஆண் குழந்தையை நேற்றுத் தாயார் வீட்டுச் சுவரில் அடித் துக் கொலை செய்துள்ளார்.

குழந்தை அழுதபோது, அதை கட்டுப்படுத்த முடியாமல் கோபம் அடைந்த குறித்த பெண், குழந்தையின் காலில் பிடித்து எதிரில் உள்ளசுவரில்அடித்துள்ளார். இதனால் சம்பவ இடத்திலேயே குழந்தை உயிரிழந்துள்ளதாக, ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள் ளது.

இவ்வாறு உயிரிழந்த குழந்தையின் சடலம், பரிசோதனை மற்றும் இறப்பு விசாரணைகளுக்காகக் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணையை முன்னெடுத்துள்ளதாகக் கிளிநொச்சிப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-வ-4-21-10)

மரண அறிவித்தல்

திருமதி பரமேஸ்வரி சண்முகரத்தினம்

(சிவக்கொழுந்து ரீச்சர்)

(ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியை- யா/கொக்குவில் இந்துக்கல்லூரி)

தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சண்முகரத்தினம் நேற்று (13.03.2016) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - பொன்னம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற சண்முகரத்தினத்தின் (ஓய்வுபெற்ற கணித ஆசிரியர் - யா/கோண்டா வில் மகா வித்தியாலயம்) மனைவியும், அன்னலட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை- யா/கோண்டாவில் மகா வித்தியாலயம்), சரஸ்வதி (ஓய்வுபெற்ற ஆசிரியை - லண்டன்), காலஞ் சென்றவர்களான கமலேஸ் வரி, இராஜேஸ்வரி செல்வரட்ணம், ஆனந்தகிருஷ்ணன், சச்சிதானந்தன் மற்றும் தருமராஜா (பிரான்ஸ்), தவமலர் (ஓய்வுபெற்ற ஆயுள்வேத வைத்தியர்), செல்வராஜா (ஓய்வுபெற்ற பொறியிய லாளர்- வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலை) ஆகியோரின் சகோதரியும், தம்பிராசா மாஸ்டர் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - கோண்டாவில்), இராஜரட்ணம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - லண்டன்), காலஞ்சென்ற ஜெயராஜசிங்கம் (நூறாணி ஓட்டுக்கம்பனி - நீர்கொழும்பு), காலஞ்சென்ற இந்திரன் மற்றும் சீவரட்ணம், சொர்ணகாந்தி, சறோஜா, பங்கயச்செல்வி (பிரான்ஸ்), இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற பாலஸ்காந்தன் மற்றும் சிவபாலன் (கனடா), கலையரசி (இணுவில் மத்திய கல்லூரி ஆசிரியை), கருணாபாலன் (கனடா), கலாறஜனி, இராஜன் (லண்டன்), ரஞ்சித் (லண்டன்), வித்தியகலா (லண்டன்)ஆகியோரின் சிறிய தாயாரும், மயூரன் (ஜேர்மனி), சசி(பிரான்ஸ்), சுவி(பிரான்ஸ்), ரோகினி (பிரான்ஸ்), குமுதா (பிரான்ஸ்), லதா (இந்தியா), கௌசல்யா (பிரான்ஸ்), சிவப்பிரியன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - கிளிநொச்சி), தர்சனா (ஆசிரியை - கொழும்பு விவேகானந்த கல்லூரி), பபியா ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மு.சி.சிவக்கொழுந்து
குடும்பத்தினர்.

(69935)(11,18,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்

நாகநாதி ராஜசேகரன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



தோற்றம்: 22.11.1947 — மறைவு: 13.03.2016

யாழ்ப்பாணம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், நீர்கொழும்பு பெரியமுல்லையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதி ராஜசேகரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) நேற்று (13.03.2016) ஞாயிற்றுக்கிழமை சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதி - பார்வதிப் பிள்ளை தம்பதியரின் புதல்வரும், அனஸ்ராவின் (ஆசிரியை - நீர்கொழும்பு விஜயரட்ணம் இந்து மத்திய கல்லூரி) கணவரும், அனுரனின் பாசமிகு தந்தையும், ராஜ குமார், ராஜமலர், ராஜநாயகி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், துஷானி, தர்மேஷ் ஆகியோரின் மாமாவும், நாவாந்துறையைச் சேர்ந்த அன்ரன், மேகலா, சியாமா, ராஜி, யூஜின் (பிரான்ஸ்), சுபோ, யோசப், அலெக்ஸ், நீல்பிறான், குயின்ரா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் 134, சிலாபம் வீதி, நீர்கொழும்பு, W.S பெர்னாந்து மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இன்று (14.03.2016) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கிரியைகள் நடைபெற்றுத் தகனக்கிரியைக்காக பிற்பகல் 4 மணியளவில் நீர்கொழும்பு இந்து பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(69932)
(11,17,18)

தகவல்: மனைவி
அனஸ்ரா ராஜசேகரன்

076 715 6015, 077 266 5464,
031 331 4439

நிருமதி தர்மாம்பாள் (லோசினி) நவரட்ணராஜா

பிறப்பு 12 . 12 . 1952 — இறப்பு 12 . 03 . 2016

இல.05, முதலியார் வீதி, நல்லூர் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மாம்பாள் நவரட்ண ராஜா 2016.03.12 சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கம்மா தம்பதியரின் ஏக புத்திரியும் காலஞ்சென்றவர்களான குணரத் தினம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், நவரட்ணராஜாவின் அன்பு மனைவியும், தர்சினியின் பாசமிகு தாயும், விஜயகுமாரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் மகேந்திரன் காலஞ்சென்ற குலேந்திரன் மற்றும் விக்கினேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மங்களாதேவி, லோகேஸ்வரி, வரதலட்சுமி, காந்தினி ஆகியோ ரின் மைத்துனியும், றமேஸ்கரன் (கனடா), சுபாஸ்கரன் (கனடா), அருங்கரன், மீரா, அபிராமி, பிரியங்கா (லண்டன்), ஆரூரன், கிருத்திகா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2016) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.05, முதலியார் வீதி,
நல்லூர் தெற்கு.

(69931) (13.18)

தகவல்:
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்கள்

ஆசீர்வாதம் செல்லத்துரை (ஐஸ் வியாபாரி)

பிறப்பு 14 . 04 . 1921 — இறப்பு 13 . 03 . 2016

யாழ்ப்பாணம் 57/2, கார்மேல் வீதி, குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் செல்லத்துரை 95 வயதில் (13.03.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசீர்வாதம் - சுவானம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரிபூரணம் - அன்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற கிறேஸ் இன் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வென்ரகோன் மற்றும் யூலன், விமலா, **வேவி, சாந்தி, வசந்தி, விஜியன், காலஞ்சென்ற செல்லா ஆகியோரின் அன்புத் தந்தையும், கட்டைக்கிளி, குணசீலன்,** யஸ்ரின், பேபிரட்டினம், தேவகுமார், சுகிர், காலஞ்சென்ற ஜீவா, ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2016) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

57/2, கார்மேல் வீதி,
குருநகர். (69936) (13.18.17) **தகவல்: குடும்பத்தினர்.**

பொன்னுத்துரை அருட்செல்வம்

சரவணையைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை அருட்செல்வம் (உடுவில் பிரதேசசபை சாரதி) ஞாயிற்றுக்கிழமைகாலமானார்.

அன்னார் பொன்னுத்துரை காலஞ்சென்ற பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்ற சபாபதி-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் யோகராணி (நல்லூர் பிரதேச செயலகம்) அவர்களின் அன்புக் கணவரும் மதுவந்தி, மதுராங்கன் ஆகியோரின் அன்புத் தந்தையும் அருள்மதியின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2016) திங்கட் கிழமை ந.ப. 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக் காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் கட்டை,
கல்வியங்காடு. **தகவல்**
0771275272 **குடும்பத்தினர்.**

திருமதி
யோகேஸ்வரி பரராஜசேகரம்

அல்வாய் வடமேற்கு, திக்கத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோகேஸ்வரி பரராஜசேகரம் 12.03.2016 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம்- தேவசுந்தரம்மா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற பரராஜசேகரம் அவர்களின் அன்பு மனைவியும் வனிதா (UK), வனஜா (UK), பிரதீபன் (கனடா), பார்த்தீபன் (ஆசிரிய ஆலோசகர்- வலயக்கல்வி அலுவலகம் கிளி நொச்சி), காண்டீபன் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்- பருத்தித்துறை நகரசபை), சுரேந்திரன்(ஆசிரியர்- யா/ புங்குடுதீவு ஸ்ரீ . கணேசா.ம.வி) ஆகியோரின் அன்புத் தாயாரும் மனோகரன்(UK), சுஜதாசன்(UK), கார்த்திகா (கனடா), அபிராமி (E.D.Oபருத்தித்துறை பிரதேச செயலகம்), யாழினி, வினோதினி(ஆசிரியை-யா/ திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் யாதவன், ஹரேஸ், அபிஷா, ஹபிசன், சரண்யா, அஸ்வின், அர்ச்சனா, நிதர்சனா, ஹரிணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2016) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வட்டதெணி,அல்வாய்
வடமேற்கு, திக்கம். (68232) (22780) **தகவல்:**
குடும்பத்தினர்.

077 632 0504,021 320 5931

கஞ்சாவுடன் கைதான இருவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 14

7 கிராம் கஞ்சாவை உடைமையில் வைந்திருந்த குற்றச்சாட்டில் 2 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாதகல், சம்பில்துறை மற்றும் பள்ளசுட்டி பகுதியில் குறித்த இருவரும் விசாரணை செய்யப்பட்டபோதே கஞ்சா நுகரும் நோக்கில் அதனைத் தமது உடைமையில் மறைத்து வைத்திருந்தமை தெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முதலில் பனிப்புலம் காலையடி பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய நபரும் பின்னர் அதே பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய நபருமே கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான இருவரையும் மல்லாகம் நீதிவானிடம் முன்னிலைப்படுத்திய போது அவர்களை 12 நாள்கள் விளக்கமறியலில்வைக்க உத்தரவிடப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-ஐ-4-107)

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த வான் புளியங்குளம் சந்திப்பகுதியில் வீதியோரம் நின்ற மின்கம்பத்துடன் மோதி நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளானது. சாரதி காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணை மேற்கொண்டுள்ளதாகப் புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-4)

உர மானியத்துக்குப் பதிலாக இனிப் பணமே வழங்கப்படும்

விவசாய அமைச்சர் திட்டவட்டம்

கொழும்பு, மார்ச் 14

உர மானிய நிவாரணத்துக்குப் பதிலாக பணம் வழங்கும் திட்டத்தில் எவ்வித மாற்றமும் கிடையாது என்று விவசாய அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.சிங்கள ஊடகத்துக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே இவ் வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

உரமானிய நிவாரணத்துக்குப் பதிலாக விவசாயிகள் உரத்தைக் கொள்வனவு செய்யப்பணம் வழங்க அரசு தீர்மானித்துள்ளது. இந்த தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் கிடையாது. உள்நாட்டு விவசாயிகளின் விவசாயத்தை பாதுகாக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளைச் சீர்குலைக்க ஒரு சில அரசியல்வாதிகள் முயற்சிக்கின்றனர். இவ்வாறான அரசியல்வாதிகள் ஆங்காங்கே விவசாயிகளை ஏமாற்றிப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். விவசாயிகளுக்கு நலன் வழங்குவது இவர்களது நோக்கமன்று. விவசாயிகள் மீது ஏறி சவாரி செய்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதே மக்களின் நோக்கமாகும்.கடந்த காலங்களில் உர நிறுவனங்களை செல்வம் கொழிக்கச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நாமோ விவசாயிகள் சொந்தக் காலில் நிற்கக்கூடிய ஓர் நிலைமையை உருவாக்க முயற்சித்து வருகின்றோம். -என்று தெரிவித்துள்ளார்.

(ற-ஐ-5)

தட்டாதெருவில்

மடைந்த குறித்த சிறுவன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

இது தொடர்பில் பொலிஸ் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- யாழ்.தட்டாதெருவிலுள்ள நண்பனின் தந்தையின் மரக்காலையில் குறித்த சிறுவன் நின்றிருந்த வேளையில், அங்கு வந்த பத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் வாள் , பொல்லுகள் சகிதம் தாக்கியுள்ளனர்.

முதலில் சிறுவனைத் தாக்கியவர்கள் பின்பு மரக்காலை உரிமையாளரையும் தாக்கத்தொடங்கினர் . இதன் போது எழுந்த சத்தத்தை அடுத்து, அயலவர்கள் திரண்டவேளை, அங்கு தரித்து நின்ற வாகனங்களையும் குறித்த இளைஞர் கூட்டம் அடித்து நொறுக்கியுள்ளது.

இதனால் ஒன்று திரண்ட மக்கள் இளைஞர்களை மடக்கிப் பிடிக்க முற்பட்ட வேளையில், தாம் பயணித்த மோட்டார் சைக்கிளையும் கைவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுவன் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறையிட்டதையடுத்து யாழ்.போதனாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு கொலைவெறித் தாக்குதலில் ஈடுபட்டவர்களில் சிலர் யாழ். நகரப்பாடசாலை ஒன்றின் மாணவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், குறித்த சிறுவனுடன் முன்னர் ஏற்பட்ட தகராறில் இந்த இளைஞர்கள் பொலிஸாரால் எச்சரிக்கப்பட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(த-வ-4,101,106)

மரண அறிவித்தல்



பிறப்பு 05 . 02 . 1966 — இறப்பு 09 . 03 . 2016

சுப்பிரமணியம் நாகராசா(சுவிஸ்)

பலாலி தெற்கு மாரிசிட்டி வயாவிளானை பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கு மற்றும் சுவிஸ் நகரை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நாகராசா 09.03.2016 புதன்கிழமை சுவிஸ் நகரில் அகாலமரணம் ஆனார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-தங்கமுத்து தம்பதியினரின் பாசமிகு மகனும் நடராசா-தவமணி தம்பதியினரின் அருமை மருமகனும் அருளினியின் அன்புக் கணவரும் ஜினானி, ஜெனானி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பராசக்தி(அளவெட்டி), யோகராசா(வவுனியா), காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, கிருஸ்ணபிள்ளை மற்றும் நாகேஸ்வரி(அளவெட்டி), சரஸ்வதி(அளவெட்டி), கணேசராசா(அளவெட்டி), சிவராசா(பிரான்ஸ்), காலஞ்சென்ற அழகேஸ்வரி மற்றும் விமலேஸ்வரி(அளவெட்டி) ஆகியோரின் அருமைச் சகோதரனுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நாளை (15.03.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் சுவிஸ் நகரில் நடைபெறும். அஞ்சலி நிகழ்வு அளவெட்டியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தம்பளாவத்தை
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி. **077 1605175** **தகவல்:**
சு.கணேசராசா
சகோதரன்.

தலைமன்னார்

என்பவரே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் அனுராதபுரத்தில் இயங்கி வரும் டி.ஜீ.ஜீ.கடல் உணவு ஏற்றுமதி நிறுவனத்தின் உரிமையாளர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரும் உதவியாளர்கள் இருவருமாக 3 பேர் நேற்று அதிகாலை அனுராதபுரத்தில் இருந்து தலைமன்னாரில் கடல் உணவுப் பொருள்களைக்கொள்வனவுசெய்வதற்காகக் கூலர் ரக வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்த போது, விபத்துஏற்பட்டது. குறித்த கூலர் வாகனத்தில் ஏற்பட்ட திடீர் கோளாறு காரணமாகக் குறித்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்திருக்கலாம் என்றும், அதனால் தோட்டவெளி பிரதான வீதிக்கு அருகாமையில் உள்ள பனை மரத்துடன் மோதி விபத்துக்கு உள்ளாகியது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனத்தைச் செலுத்திச்சென்ற சாரதி சிறு காயங்களுடன் தப்பினார். குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பில், மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(த-வ-4-56)

மகிந்த

அவர்கள் எமக்கு உதவத் தயாராக இருந்தார்கள். நாம் திட்டங்கள் தொடர்பான வரைவை வழங்கியிருக்கின்றோம். அவற்றுக்கான நிதி ஆதரவை சீனாவிடம் கேட்டிருக்கிறோம். ஆனால் இன்னமும் எதுவும் இறுதிப் படுத்தப்படவில்லை. இது அவர்களின் முன்னுரிமைப் பட்டியலில் இருக்கிறது. அம்பாந்தோட்டை பொருளாதார வலயத்தில் சைனா மேர்ச்சன்ட்ஸ் நிறுவனம் முதலீடு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தள விமான நிலையம் ஆகியவற்றைக் கூட்டு முயற்சியாக அபிவிருத்தி செய்யும் திட்டமும் முன்வைக்கப்பட்டுள்ளது.

மத்தள விமான நிலையத்தை இயக்குவதற்கு, அதனை அபிவிருத்தி செய்வதற்கான முன்மொழிவைச் சீனத் தரப்பு முன்வைக்கும் என்று எதிர்பார்க் கப்படுகிறது -என்றார்.

மகிந்த அரசின் ஆட்சிக் காலத்திலும் சீன வங்கிகளிலிருந்து கடன்கள் பெறப்பட்டதுடன், சீனாவுடனேயே நெருங்கிய தொடர்பும் பேணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

(த-வ-5)

கைக்குண்டு

காணியைத் துப்பரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, அந்தக் கைக்குண்டைக் கண்டதாக முறைப்பாடு செய்தார்.இந்த நிலையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன், குறித்த கைக்குண்டை மீட்டெடுத்தாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (த-வ-4-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாய மற்றும் விஞ்ஞான பீட மாணவர் பதிவு பிற்போடப்பட்டது

கிழக்குப் பல்கலை. பதிவாளர் அறிவிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 14

கிழக்குப் பல்கலைக்கழக விவசாய மற்றும் விஞ்ஞான பீடங்களில் 2014 2015 காலப்பகுதிக்குரிய மாணவர்களுக்கான பதிவுகள் பிற்போடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் இன்று 14 ஆம் திகதி கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 2014 2015 கல்வியாண்டிற்காக பதிவு செய்யுமாறு கோரப்பட்ட விவசாய மற்றும் விஞ்ஞான பீட மாணவர்களுக்கான பதிவுகளே பிற்போடப்பட்டுள்ளன.

குறித்த இரண்டு பீடங்களுக்கும் சேர்த்துக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக, மாணவர்களை சேர்த்துக்கொள்ளுமாறு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டதை அடுத்து இந்தச் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலதிகமாக சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, அவர்களுக்கான வசதிகளை உடனடியாக ஏற்படுத்திக் கொடுப்பதற்கான கால அவகாசத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கில், விவசாய மற்றும் விஞ்ஞான பீட மாணவர்களின் பதிவுகள் பிற்போடப்பட்டுள்ளதாக கிழக்குப் பல்கலைக் கழக பதிவாளர் அலுவலகம் சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கலை, கலாசார பீட மாணவர்களுக்கான பதிவுகள் திட்டமிட்டபடி நேற்று நடைபெற்றன.

(வ)

தேசிய மலரானது அல்லி

கொழும்பு, மார்ச் 14

இலங்கையின் தேசிய மலராக இது வரையில் நீலோற்பலம் எனப்படும் நீல அல்லி மலர் பெயரிடப்பட்டிருந்தது. எனினும் இனிமேல் அல்லி மலரே இலங்கையின் தேசிய பூவென்று அறிவிக்கப் பட்டுள்ளது.



உயிரியல் பல்வகைமை செயலகத்தின் பணிப்பாளர் பத்மா அபேகோன் இதனைத் தெரிவித்துள்ளார். இதற்காக அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீலோற்பலம் எனப்படும் நீல அல்லி வெளிநாட்டைச் சேர்ந்த மலர் என்பதால், அல்லி மலரை இலங்கையின் தேசிய மலராகக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, இதற்கு முன்னர் தேசிய மலராக காணப்பட்ட நீலோற்பலத்திற்குப் பதிலாக வேறொரு மலரின் நிழற்படங்கள் மற்றும் தவறான தகவல்கள் காணப்படுவதாக அண்மையில் பல விமர்சனங்கள் எழுந்தன.

இது தொடர்பில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களைத் தெளிவுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

(வ)

மகிந்தவுக்காக நேரத்தை விரயமாக்கிய ரூபவாஹினி

கொழும்பு, மார்ச் 14

கடந்த ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக்காக, ரூபவாஹினி கூட்டுத்தாபனம், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு 36.9 மில்லியன் ரூபா பெறுமதியான நேரத்தை இலவசமாக வழங்கியுள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது. கணக்காய்வு திணைக் களத்தின் பரீட்சிப்பின் போதே இந்த விடயம் வெளியாகியுள்ளது.

இதனைத் தவிர, ரூபவாஹினித் தயாரிப்புக்கள் மூலம் இந்த ஒளிபரப்பு நேரங்களின் போது 2.2 மில்லியன் ரூபா பெறுமதியான உதவிகள் மகிந்தவுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே ஜ.ரி.என்னில் தேர்தல் பரப்புரைகளுக்கு மகிந்த பல மில்லியன் ரூபாய்பணம்செலுத்தவேண்டியுள்ளமை குறித்து விசாரணைகள் இடம் பெற்று வரும் நிலையிலேயே ரூபவாஹினி மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

(ற-ஐ-5)

லசந்தவின் கொலை தொடர்பான தொலைபேசி அழைப்புகள் ஆராய்வு

கொழும்பு, மார்ச் 14

சண்டேலீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை இடம்பெற்ற வேளையில் இராணுவக் கூட்டுப் படைத் தலைமையகத்துக்குக் கிடைத்த தொலைபேசி அழைப்புக்கள் குறித்து விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

இதற்கான பணிப்புரை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுப்படைத் தலைமையகத்துக்கு வந்த தொலைபேசி அழைப்புக்களில் லசந்தவின் கொலை தொடர்பான விடயங்கள் இருந்திருக்கலாம் என்ற அடிப்படையிலேயே இந்த விசாரணைகள் நடத்தப் படவுள்ளன.

ஏற்கனவே தொலைபேசி கலந்துரையாடல் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்ட போதும் பின்னர் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ற-ஐ-5)

பங்குனித் திங்கள் பொங்கல் திருவிழா

மண்டைதீவு,மார்ச் 14

மண்டைதீவு, பூமாவடி பூம்புகார் அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலய பங்குனித் திங்கள் திருவிழா இன்று காலை 9 மணிக்கு அபிசேகங்களுடன் ஆரம்பமாகி, தொடர்ந்து விசேட பூசையும் பொங்கல் நிகழ்வும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து அன்னதான நிகழ்வும் நடைபெறவுள்ளது.

(வ)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் வாரித்தம்பி வீரவாகு

கடந்த 15.02.2016 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் வாரித்தம்பி வீரவாகு அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (14.03.2016) திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிரியைகள் எதிர்வரும் 16.03.2016 புதன் கிழமை அவரது இல்லத்திலும் நடைபெறும். அன்றைய தினம் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மருதடி வீதி,
சாவகச்சேரி வடக்கு,
மீசாலை.

குடும்பத்தினர்.

கண்ணீர் காணிக்கை

பாலசிங்கம் பிரதாஸ்

(ஊழியர், முத்துமாரி காட்வெயார் - பளை)

நேற்றுக்காலை ஒன்றாய் கதைத்தோம்
நேற்று மாலை ஒன்றாய் சிரித்தோம்
சிரித்து முடிந்ததும் உன் குடிப்பு நின்றதா
என்ன விதியடா உன்னை அழைத்தது
எங்கே போனாய் தோழா எங்கேபோனாய் !
தினமும் சாயும் தோள்கள் நிலத்தில் சாய்ந்ததா?
தினமும் காணும் உன் வதனம் நெருப்பில் போவதா?
இங்கே நாம் அழ விழியில் நீரும் இல்லையே...
இங்கே நாம் எழ உனது தோளும் இல்லையே...
மீண்டும் வா ! நண்பா மீண்டும்வா !
மீண்டும் வா ! நண்பா மீண்டும்வா !

உனது திடீர் இழப்பால் வாடும் உன் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்கள்

உனது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

உன் இழப்பால் தவிக்கும்
நிர்வாகத்தினரும், ஊழியர்களும் - முத்துமாரி காட்வெயார்.
புகையிரத வீதி, பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய மோதல்கள்

குணபாலசிங்கம் ஞாபகார்த்த தொடர்

யாழ்ப்பாணம், மார்ச் 14
யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குணபாலசிங்கம் குடும்பத்தினர் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்தும் குணபாலசிங்கம் கிண்ணத்துக்கான 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து பாசையூர் சென்.அன்ரனிஸ் அணி மோதவுள்ளது. தொடர்ந்து 7.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதவுள்ளது.

றோயல் வி.கழகத் தொடர்

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் கில்லறி அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதவுள்ளது.

வைகறை வி.கழகத் தொடர்

யாழ். மாவட்டதாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வள்ளுவர் அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் 'ஏ' அணி மோதவுள்ளது. (மு-23)

ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி, பெண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாகாண மட்ட ஊர்சுற்றும் போட்டியில் முதலிடங்களைப் பெற்றன

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாகாண மட்ட ஊர்சுற்றும்போட்டியில் ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி மாவட்டமும் பெண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்டமும் இந்த வருடத்தின் மாகாணச் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

போட்டிகள் கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. பெண்களுக்கான போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட, அணி முதலிடத்தையும் கிளிநொச்சி மாவட்ட அணி இரண்டாமிடத்தையும் பெற்றன. பெண்களுக்கான 8 கிலோமீற்றர் ஊர்சுற்றும் போட்டியில், கிளிநொச்சி மாவட்டம் சார்பாக கலந்து கொண்ட ரி.டென்சிகா 31நிமிடங்கள் 15 செக்கன்களில் இலக்கை அடைந்து முதலாமிடத்தையும், அதேமாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.தமிழினி 32 நிமிடங்கள் 16 செக்கன்களில் ஓடி முடித்து இரண்டாமிடத்தையும் முல்லைத்தீவு மாவட்டம் சார்பாக பங்குபற்றிய எஸ்.விதுசா 32 நிமிடங்கள் 32 செக்கன்களில் ஓடிமுடித்து மூன்றாமிடத்தையும் பெற்றனர். நான்காம் ஐந்தாம், ஆறாமிடங்களை முறையே முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.கேமா, எல்.சுடர்மதி, வை.புவேந்தினி ஆகியோரும், ஏழாமிடத்தை வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.சர்மிளாவும் எட்டாம், ஒன்பதாமிடங்களை கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கே.வான்மதி மற்றும் வி.பிரார்த்தனா ஆகியோரும்- பத்தாமிடத்தை வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எம்.பொன்சலாவும் பெற்றனர்.

ஆண்களுக்கான 12 கிலோ மீற்றர் ஊர்சுற்றும் போட்டியில் மொத்தப்புள்ளிகளின் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்ட அணி முதலாமிடத்தையும் வவுனியா மாவட்டம் இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டன. வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே.நவநீதன் 38 நிமிடங்கள் 45 செக்கன்களில் ஓடி முடித்து முதலாமிடத்தையும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பி.ஜனார்த்தனன் 39 நிமிடங்கள் 47 செக்கன்களில் ஓடிமுடித்து இரண்டாமிடத்தையும் கிளிநொச்சியைச் சேர்ந்த ஈ.அனுசன் 39 நிமிடங்கள் 49 செக்கன்களில் ஓடிமுடித்து மூன்றாமிடத்தையும் பெற்றனர். நான்காமிடத்தை வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஜெ.எம்.எஸ். ஏ.குமாரவும் ஐந்தாம், ஆறாமிடங்களை கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வி.யதுசன் மற்றும் எஸ்.நிர்மல் ஆகியோரும்- ஏழாமிடத்தை மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஜே.தயாசிறியும் எட்டாம் ஒன்பதாம் மற்றும் பத்தாமிடங்களை கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.ரேனுஜன், வி.சில்பரசன் மற்றும் ஏ.சதீஸ்குமார் ஆகியோரும் பெற்றனர். (மு-108)

கிண்ணங்களை வழித்துத் துடைத்தது புதுக்குளம் மகா வித்தியாலய அணி

வவுனியா, மார்ச் 14
வவுனியா வடக்கு கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்டத்தில் அனைத்துப் பிரிவிலும் புதுக்குளம் மகா வித்தியாலய அணி கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

கனகராயன்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இறுதியாட்டங்கள் நடைபெற்றன.

15வயதினருக்கான இறுதியாட்டத்தில் புதுக்குளம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து கனகராயன்குளம் மகா வித்தியாலய அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளாலும் கோல் எதனையும் பதிவுசெய்ய முடியவில்லை. இரண்டாம் பாதியிலும் இதே நிலைமை நீடித்தது.

ஆனால் ஆட்டம் முடிவடைவதற்கு ஒரு நிமிடம் இருக்கும் போது புதுக்குளம் மகா வித்தியாலய அணி ஆட்டத்தின் ஒரே கோலைப் பதிவுசெய்து கிண்ணம் வென்றது.

17வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் புதுக்குளம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து தரணிக்குளம் கனிஷ்ட வித்தியாலய அணி மோதியது.

இதில் இரு அணிகளும் ஆட்டம் முடிவடையும் வரை கோல் எதனையும் பதிவு செய்யவில்லை. இதனால் சமநிலை தவிர்ப்பு உதைகள் மூலம் கிண்ணம் தீர்மானமாகும் நிலைமை. சமநிலைத் தவிர்ப்பில் புதுக்குளம் மகா வித்தியாலய அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனாகியது.

19வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் புதுக்குளம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து தரணிக்குளம் கனிஷ்ட வித்தியாலய அணி மோதியது. இதில் ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய புதுக்குளம் மகா வித்தியாலய அணி, ஆட்டநேர முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. (மு-422)

வவுனியா மெய்வன்மை சங்கத்தின் தடகளத்தொடர்

கரணவாய், மார்ச் 14
வவுனியா மாவட்ட மெய்வன்மைச் சங்கம் நடத்தும் இளையோருக்கான தடகளப் போட்டிகளும் திறந்த வயதுப்பிரிவினருக்கான அஞ்சல் ஓட்ட நிகழ்வுகளும் எதிர்வரும் 19 ஆம் திகதி வவுனியா தமிழ் மத்தி மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளன.

16 வயதுக்குட்பட்டவர்களுக்கான இளையோர் விளையாட்டு நிகழ்வில் 100 மீற்றர், 400 மீற்றர், 1,500 மீற்றர் ஓட்டப் போட்டிகளும் அஞ்சலோட்ட நிகழ்வுகளும் முப்பாய்ச்சல், நீளம் பாய்தல், குண்டு போடுதல் மற்றும் தட்டெறிதல் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

திறந்த வயதுப்பிரிவினருக்கான போட்டியில் அஞ்சலோட்ட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதில் பங்குபற்ற விரும்புவோர் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்பாக மெய்வன்மைச் சங்கத்திடம் ஒப்படைக்குமாறு வவுனியா மாவட்ட மெய்வன்மைச் சங்கச் செயலாளர் கே.விஜிதரன் அறிவித்துள்ளார். (மு-108)

வடமராட்சி மெய்வன்மை

கரணவாய், மார்ச் 14
வடமராட்சி வலயப் பாட சாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் மூன்று தினங்கள் நெல்லியடி மத்திய கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இதில் பருத்தித்துறை, கரவெட்டி மற்றும் மருதங்கேணி ஆகிய கோட்டங்களுக்கு இடையில் இடம்பெற்ற போட்டிகளில் முதல் நான்கு இடங்களைப் பெற்ற வீர, வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-108)

வலிகாம வலைப்பந்தாட்டம்

வலிகாமம், மார்ச் 14
வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான வலைப் பந்தாட்டத் தொடர் நாளை திங்கட்கிழமை காலை 8.30மணி முதல் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (மு-422-23)

ஞானம்ஸ், மைக்கல் அணிகள் சம்பியனாகின

கரவெட்டி பிரதேச செயலக கழகங்களுக்கு இடையிலான கபடித் தொடரில் கரவெட்டி ஞானம்ஸ், மாலுசந்தி மைக்கல் அணிகள் கிண்ணங்களை சுவீகரித்துள்ளன.

யங்கம்பன்ஸ் விளையாட்டு கழக மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் ஞான ம்ஸ் அணியை எதிர்த்து மைக்கல் அணி மோதியது. இதில் ஞானம்ஸ் அணி 50:29 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சம்பியனாகியது. பெண்களுக்கான இறுதியாட்டத்தில் மைக்கல் அணியை எதிர்த்து டயமன்ஸ் அணி மோதியது.

இதில் மைக்கல் அணி 53:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியனாகியது. (மு-422)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிண்ணம் வென்றது ஹென்றிஸ் வலிகாமம் வலய துடுப்பாட்டத்தில்

வலிகாமம், மார்ச் 14

வலிகாம கல்வி வலய பாட சாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான துடுப்பாட்டத் தொடரில் இளவாலை ஹென் றிஸ் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள் ளது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரிஅணி நிர்ண யிக்கப்பட்ட 5ப்ந்துப் பரிமாற் றங்களில் 8 இலக்குகளை இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றது.

அதிகபட்சமாக நிரோஸ்குமார் 13 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஹென்றிஸ் கல் லூரி அணி சார்பில் ராஜ்குமார் 3 இலக்குகளையும் ஜனெக் சன் இரு இலக்குகளையும்,

கோவவர்ணன், அபிசன் இரு வரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். பதிலுக்குத் துடுப் பெடுத்தாடிய ஹென்றிஸ் கல் லூரி அணி 4.3 பந்துப் பரிமாற் றங்களில் 3 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. பந்து வீச்சில் மானிப்பாய் இந் துக் கல்லூரி அணியின் சார் பில் நிரோஸ்குமார், சசிகரன் ஆகியோர் தலா ஓர் இலக் கைக் கைப்பற்றினர். 3 ஆம் இடத்தை வசாவிளான் மகா வித்தியாலயம் பெற்றது.

(மு-422)

தென்மராட்சி வலய கால்பந்தாட்டத்தின் முடிவுகள்

தென்மராட்சி, மார்ச் 14

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான இருபாலாருக்குமான கால் பந்தாட்டத் தொடரில் 15வயது பிரிவில் முதலாமிடத்தை வரணி மத்திய கல்லூரி அணியும், 17வயதுப் பிரிவில் முதலாமி டத்தை நாவற்குழி மகா வித்தி யாலய அணியும், 19 வயதுப் பிரிவில்முதலாமிடத்தை சாவகச் சேரி இந்துக் கல்லூரி அணியும் தமதாக்கின.

நாவற்குழி மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த வாரம் இந்த ஆட்டங்கள் இடம்பெற் றன. இதன்படி 15வயதுப்பிரிவில் இரண்டாமிடத்தை சாவகச்சேரி ஹிறிபேக்கல்லூரி அணியும்மூன் றாமிடத்தை சந்திரபுர ஸ்கந் தவரோதயக்கல்லூரி அணியும் பெற்றன. 17வயதுப் பிரிவில் இரண்டாமிடத்தை சாவகச்சேரி இந்துக்கல்லூரி அணியும்மூன் றாமிடத்தை கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை அணியும் பெற்றன. 19வயதுப் பிரிவில் இரண்டாமிடத்தை நாவற்குழி மகா வித்தியாலய அணி தன தாக்கியது. (மு-422)

வடமராட்சி வலய வலைப்பந்தாட்டம்

வடமராட்சி, மார்ச் 14

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக் கிடையிலான பெண்களுக்கான வலைப்பந் தாட்டத்தில் வடமராட்சி மத்திய மகளிர் கல் லூரி, மெதடிஸ்த பெண்கள் பாடசாலை அணிகள் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித் துள்ளன.

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதா னத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இறுதியாட்டங்கள் நடைபெற்றன. 15 வயதுப் பிரிவில் முதலாமிடத்தை வடமராட்சி மத் திய மகளிர் கல்லூரியும் இரண்டாமிடத்தை வடஇந்து மகளிர் கல்லூரி அணியும் மூன் றாமிடத்தை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் பெற்றன. 17வயதுப் பிரிவில் முதலாமிடத்தை மெதடிஸ்த பெண் கள் உயர்தரப் பாட சாலை அணியும் இரண் டாமிடத்தை வடஇந்து மகளிர் கல்லூரி அணி யும் மூன்றாமிடத்தை வடமராட்சி மத்திய மக ளிர் கல்லூரி அணியும் பெற்றன. 19வயது பிரிவில் முதலாமிடத்தை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் இரண்டாமிடத்தை வட இந்து மகளிர் கல்லூரி அணியும் மூன்றாமிடத்தை உடுப்பிட்டி மக ளிர் கல்லூரி அணியும் பெற்றன.(மு-422)

இலங்கை பாடசாலைகள் மேசைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய 19 வயதுப் பிரிவு இருபாலாருக்குமான மேசைப்பந்தாட்டத் தொடரின் 19 வயதுப் பிரிவு ஆண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக்கல்லூரி மேசைப்பந்தாட்ட அணி மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. (மு-23)

யாழ். கோட்ட மெய்வன்மை

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ். கோட்டப் பாடசாலை களுக்கிடையிலான மெய்வல் லுநர் போட்டிகள் இன்று தொடக் கம் 3 நாள்களுக்கு கனகரத்தி னம் மத்திய மகா வித்தியால யத்தின் மைதானத்தில் காலை 8.30மணி முதல் நடை பெறவுள்ளது. (மு-422)

கரைதுறைப்பற்று கோட்ட பூப்பந்தாட்ட முடிவுகள்

கரணவாய், மார்ச் 14

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று கோட்டப் பாடசா லைகளுக்கிடையிலான பூப் பந்தாட்டத் தொடரில் 15 வயது ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை அம்பலவன் பொக் கணை மகாவித்தியாலயமும், 19 வயது ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை முள்ளிய வளை வித்தியானந்தாக் கல் லூரியும், 19 வயதுப்பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை வற்றாப்பளை மகா வித்தி யாலயமும் தமதாக்கின.

இதன்படி 15 வயது ஆண்கள் பிரிவில் இரண்டாமிடத்தை முள்ளியவளை வித்தியானந் தக் கல்லூரி தனதாக்கியது. 19 ஆண்கள் பிரிவில் இரண் டாமிடத்தை முல்லைத்தீவு மகா வித்தியாலயமும், மூன் றாமிடத்தை அம்பலவன் பொக்கணை மகாவித்தியா லயமும் பெற்றன.

19 பெண்கள் பிரிவில் இரண் டாமிடத்தை முல்லைத்தீவு றோ.க.த.க. பாடசாலையும் மூன்றாமிடத்தை முள்ளிய வளை வித்தியானந்தக் கல் லூரியும் தமதாக்கின.

(மு-108-433)

சென்.யூட், சந்திரன் அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம், மார்ச் 14

முல்லைத்தீவு கரைதுறைபற்றுப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் சென்.யூட், சந்திரன் அணிகள் இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

தொடர் முல்லைத்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த அரையிறுதி யாட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் சென்.யூட் அணியை எதிர்த்து உதயம் அணி மோதிக்கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை இழுபறிப்பட்டது, சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் சென்.யூட் அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் இளம்பறவை அணியை எதிர்த்து சந்திரன் அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எந்தவித கோல்களையும் பெறாததினால் சமநிலைத் தவிர்ப்பில் இறுதிக்கு தகுதிபெறும் அணி தீர்மானமாகும் நிலை ஏற்பட்டது. இதில் சந்திரன் அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (மு-23)

வீரசிங்கம் மத்தி., திருநாவுக்கரசு மத்தி. தென்மராட்சி வலைப்பந்தில் சம்பியனாகின

தென்மராட்சி, மார்ச் 14

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான வலைப்பந் தாட்டத்தில் 15 வயதுப் பிரிவில் மீசாலை வீரசிங்கம் மத்தி., 17வயது, 19வயது பிரிவுகளில் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி அணிகள் கிண்ணங்களைச் சுவீகரித்துள் ளன.

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவ ரோதயக் கல்லூரி மைதானத் தில் கடந்த கிழமை இந்த இறுதி யாட்டங்கள் நடைபெற்றன. 15வயதுப் பிரிவில் முதலா மிடத்தை மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை வரணி மத்தி யகல்லூரி அணியும், மூன்றா மிடத்தை கொடிகாமம் திரு நாவுக்கரசு மத்திய கல்லூரி அணியும் பெற்றன.

17வயதுப் பிரிவில் முதலாமி டத்தைக் கொடிகாமம் திருநா வுக்கரசு மத்திய கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை வரணி மத்திய கல்லூரி அணி யும், மூன்றாமிடத்தை சாவ கச்சேரி இந்துக் கல்லூரி அணி யும் தமதாக்கின.

19வயதுப் பிரிவில் முதலா மிடத்தை கொடிகாமம் திரு நாவுக்கரசு மத்திய கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை வரணி மத்திய கல்லூரி அணி யும், மூன்றாமிடத்தை சாவ கச்சேரி இந்துக் கல்லூரி அணி யும் தமதாக்கின.

(422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரசிகர்களது ஆதரவு குறையவில்லை செரபோவா உருக்கமாகத் தெரிவிப்பு

ஊக்கமருந்து சோதனைத் தோல்விக்குப் பின்னரும் விசுவாசத்தையும் ஆதரவையும் வழங்குகின்ற ரசிகர்களுக்கு, செரபோவா தனது நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச அந்தஸ்து பெற்ற கிண்ணங்களை ஐந்து தடவைகள் வென்ற மரியா செரபோவா, தடை செய்யப்பட்ட ஊக்கமருந்தான மெல்டோனியத்தை பயன்படுத்தியது தொடர்பில் கடந்த வாரம் தடை செய்யப்பட்டார். இந்தத் தடையால் மிகவும் மனமுடைந்து போயிருந்ததாகத் தெரிவித்த அவர் தனக்கு சமூக வலைத்தளங்களின் மூலமாக ரசிகர்களின் ஆதரவு கிடைத்தமைக்கு நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

தனது முகப்புத்தகத்தில் ரசிகர்கள் தொடர்பாக பதிவிட்ட செரபோவா – தடை விவகாரம் என்னைக் காயப்படுத்தியது. இதனால் மிகவும் மனமுடைந்து போயிருந்தேன். ஆனால் ரசிகர்களது அன்பும், கருணையும், ஆதரவும் என்னிடமிருந்து தொலைந்து போகவில்லை. எனது சமூக வலைத்தளங்கள் ரசிகர்களது ஆதரவால் நிரம்பி வழிகின்றன என்று குறிப்பிட்டுள்ளார்.

குறித்த விவகாரத்துக்காக செரபோவாவுக்கு 4 வருடங்கள் தடைவிதிக்க வாய்ப்புக்கள் உள்ளன. நடால், பெடரர் போன்ற முன்னணி வீரர்கள் செரபோவாவுக்குத் தடை விதிக்கப்பட வேண்டுமென்ற கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர். (ம)

இந்திய ரசிகர்களை நினைத்து அப்ரிடி பெருமிதம்

பாகிஸ்தானில் தமக்கு கிடைக்கும் அன்பை விட இந்தியாவில் கிடைக்கும் அன்பு அதிகமானது என்று பாகிஸ்தான் ரி-20 அணியின் தலைவரான அப்ரிடி தெரிவித்துள்ளார்.

ரி-20 தொடரின் பிரதான ஆட்டங்கள் நாளை முதல் ஆரம்பமாகின்றன. இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான லீக் ஆட்டம் கொல்கத்தாவில் வருகிற 19ஆம் திகதி நடக்க இருக்கின்றது. பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி பாகிஸ்தான் அணி இந்தியா வருவதை தாமதித்து வந்தது. இந்திய உள்துறை அமைச்சகம் பாகிஸ்தான் அணிக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்படும் என்று உறுதியளித்ததை அடுத்து, நேற்று முன்தினம் மாலை கொல்கத்தா வந்தடைந்தது பாகிஸ்தான் அணி.

கொல்கத்தாவில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அப்ரிடி இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியாவில் விளையாடும் போது எனக்கு ஏற்படுகின்ற மகிழ்ச்சியின் அளவு மற்ற இடங்களை விட அதிகம். என் கிரிக்கெட் வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் இருக்கிறேன். இந்தியாவில் எனக்குக் கிடைக்கும் அன்பை வாழ்நாள் முழுவதும் நினைவுகூர்வேன். இந்தியாவில் எங்கள் மீது காட்டப்படும் அன்பானது, பாகிஸ்தானில் கிடைப்பதை விட அதிகம். சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்களில் யார் அழுத்தத்தை சமாளித்து ஆடுகிறார்களோ அவர்களே வெற்றி பெறமுடியும் என்றார். (ம)

பிரதான சுற்றுக்கு ஆப்கான் தகுதி; சிம்பாப்வேக்கு அதிர்ச்சித் தோல்வி

தகுதிச் சுற்று ஆட்டத்தில் சிம்பாப்வேயை வீழ்த்தி ரி-20 உலகக்கிண்ணத் தொடரின் பிரதான சுற்றுக்குத் தகுதி பெற்றது ஆப்கானிஸ்தான்.

பிரதான சுற்றில் முதலாவது குழுவின் ஐந்தாவது அணியாக களமிறங்குவது யார்? என்ற வாழ்வா சாவா நிலைமையில் சிம்பாப்வேயும் ஆப்கானிஸ்தானும் நேற்றுமுன்தினம் பலப்பரீட்சை நடத்தின. நாணயச்சுழற்றில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 186 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக நபி 52 ஓட்டங்களையும், சென்வாரி 43 ஓட்டங்களையும், செசாட் 40 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சிம்பாப்வே சார்பாக பன்ஜங்கரா 3 இலக்குகளையும், ரிறிபானோ, வில்லியம்ஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

கடின இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய சிம்பாப்வே 19.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பன்ஜங்கரா 17 ஓட்டங்களையும், ரசா 15 ஓட்டங்களையும், வில்லியம்ஸ் 13 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஆப்கானிஸ்தான் சார்பாக ரசிட்கான் 3 இலக்குகளையும், கமிட் கசன் 2 இலக்குகளையும், சடான், சென்வாரி, நபி, ஸ்ரானிக்ஸை நால்வரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். ஆட்டநாயகனாக நபி தெரிவானார். (ம)

மரண அறிவித்தல்

தோற்றம் 1933 . 04 . 15

மறைவு 2016 . 03 . 11

திருமதி சின்னம்மா தம்பையா

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வவுனியா வைரவ புளியங்குளத்தை வசிப்பிடமாகவும் 3A, வீதிஅபிவிருத்தித் திணைக்கள விடுதி பூங்கா வீதியில் வசித்த வருமாகிய திருமதி சின்னம்மா தம்பையா கடந்த (11.03.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2016) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் 3A, வீதிஅபிவிருத்தி திணைக்கள விடுதியில் இடம் பெற்று பூதவுடல் தச்சணாங்குளம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 077 2876 760

அக்ரோ விலகல்

தனது ஒப்பந்தம் முடிவடைந்தவுடன் இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகங்களில் ஒன்றான மன்செஸ்டர் சிற்றியிலிருந்து விலகப்போவதாக அவ்வணியின் நட்சத்திர வீரர் சேர்ஜியோ அக்ரோ தெரிவித்துள்ளார்.

ஓய்வு தொடர்பாக வெளிப்படுத்திய அக்ரோ, ஆர்ஜென்ரினாவைச் சேர்ந்தவனான நான், இங்கிலாந்துக் கழகமான மன்செஸ்டர் சிற்றிக்காக விளையாடி வருகிறேன். எனது ஒப்பந்தக்காலம் முடிந்தவுடன் ஆர்ஜென்ரினாவின் கழகமொன்றுடன் ஒப்பந்தம் செய்ய விரும்புகிறேன். ஆர்ஜென்ரினா கழகத்துக்காக விளையாடிய பின்னரே ஓய்வினை அறிவிக்க எண்ணியுள்ளேன் என்றார். (ம)

சங்கா, ஜெயவர்த்தன ஓய்வினால் இலங்கை அணியில் பாதிப்பில்லை

–திரிமன்னே

இலங்கை ரி-20 அணியின் தலைமைப் பொறுப்பு மாற்றம் செய்யப்பட்டமையாலும் சங்கா, மகேல ஜெயவர்தனவின் ஓய்வாலும் இலங்கை அணியில் பாதிப்பு உணரப்படாது என்று தெரிவித்துள்ளார் அந்த அணியின் துடுப்பாட்ட வீரரான திரிமன்னே.

இலங்கை கிரிக்கெட் அணி சமீபத்திய தொடர் தோல்விகளால் நம்பிக்கை இழந்துள்ளது. இதனால் எதிர்வரும் ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் சிறப்பாக விளையாட வேண்டிய நெருக்கடியில் இருக்கிறது. இதற்கிடையில் அணித் தலைவராக இருந்த மலிங்க தலைவர் பதவியில் இருந்து விலகியதும் அந்த அணிக்கு பின்னடைவை ஏற்படுத்தி உள்ளது. மத்தியூஸ் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால் அவர் தான் மனரீதியாக இந்தத் தலைவர் பதவியை ஏற்றுக் கொள்ளவில்லை என்று வெளிப்படுத்தியிருந்தார்.

ஆனால் இவற்றாலெல்லாம் இலங்கை அணியில் பாதிப்பு உணரப்படாது என்று தெரிவித்துள்ளார் திரிமன்னே.

குறித்த விடயம் தொடர்பாக திரிமன்னே தெரிவிக்கையில் – மலிங்க தலைமைப் பதவியில் இருந்து விலகியது அணியில் எந்த ஒரு பின்னடைவையும் ஏற்படுத்தாது. மத்தியூஸுடன் 3 ஆண்டுகள் விளையாடியுள்ளேன். நாங்கள் அனைவரும் ஒரே அணியில் தான் இருக்கிறோம். அவர் 2013 ஆம் ஆண்டில் இருந்து தலைவராகச்செயற்படுகிறார். அவருக்கு நல்ல அனுபவம் உள்ளது. இதனால் எந்தப்பிரச்சினையும் இல்லை. அதேபோல் சங்கக்கார, ஜெயவர்த்தன இல்லாததும் அணிக்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாது. எப்போதும் அவர்கள் இல்லாததையே காரணம் காட்ட முடியாது. எங்களிடம் திறமையான இளம் வீரர்கள் உள்ளனர் என்றார். (ம)

மணமகன் தேவை

யாழ். இந்து லக்கினத்திற்கு 4இல் சூரியன் செவ்வாய் கேட்டை நட்சத்திர விருச்சிக ராசி 14.07.1981 இல் பிறந்த A/L படித்த மணமகளுக்கு சூரியன் செவ்வாய் உள்ள மணமகன் தேவை.

தொடர்புக்கு: 077 218 6637

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org